சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்

எஸ்.தாயப்பன்

மெய்யான கடவுள் யார் என்று தெரிய வேண்டுமா? படியுங்கள்

சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்

எஸ். தாயப்பன்

உண்மையான கடவுள் யார் என்று அறிய வேண்டுமா?
வேத ஆதாரங்களுடன் கூடிய இந்த நூலைப்
பொறுமையுடன் படியுங்கள்.

சித்தர்கள் கண்ட மெய்யான பரம்பொருளை
நீங்களும் காண்பது உறுதி

- மூலம் -
டாக்டர் வீ. ஞானசிகாமணி அவர்கள் எழுதிய
"அகத்தியர் ஞானம்"

நன்கொடை ரூ.10

சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்

1 முதல் 6ஆம் பதிப்பு வரை 65,000 பிரதிகள்
ஏழாம் பதிப்பு : ஜீன் 2010 10,000 பிரதிகள்
எட்டாவது பதிப்பு : அக்டோபர் 2010 10,000 பிரதிகள்

<u>ஆசிரியரின் பிற நூல்கள் :</u>

என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (தமிழ்)– 2,20,000 பிரதிகள்
My Cry & Joyful New life (English)- 35,000 பிரதிகள்
என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (கன்னடம்)– 20,000 பிரதிகள்
என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (மலையாளம்)– 17,000 பிரதிகள்
என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (தெலுங்கு)– 5,000 பிரதிகள்
சித்தர்கள் கண்ட மெய்ப் பொருள் (தமிழ்) – 75,000 பிரதிகள்
பாவத்தின் சம்பளம் நரகம் – 70,000 பிரதிகள்
VCD– எனது சாட்சியும் செய்தியும் – 1,65,000 சீடிக்கள்
VCD– எழுந்து கட்டுவோம் – 5,000 சீடிக்கள்
இயேசு கிறிஸ்து உன்னோடு பேசுகிறார் – 20,000 பிரதிகள்
இந்தியாவுக்கு இயேசு கிறிஸ்து தேவை ஏன்? – 20,000 பிரதிகள்
கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்குப் பதில் – 10,000 பிரதிகள்

<u>இந்த நூல்கள், மற்றும் VCD கிடைக்கும் முகவரி :</u>

எஸ். தாயப்பன்
12, ஜி.டி.நாயுடு தெரு,
பாலாஜி அவென்யூ – 1
சேலையூர் PO, சென்னை – 600 073
தொலைபேசி : 044–22234526 **e-mail : sakthiprabha@yahoo.com**

<u>நூலை அனுப்ப சில விதிகள்:</u>

ஒவ்வொரு நூலுக்கும் **VCD**க்கும் நன்கொடை ரூ.10 + தபால் செலவு ரூ.1/–, **MO, DD** அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை **MO** பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி

அனுப்புங்கள்.உங்கள் டெலிபோன், செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். **செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. MO, DD** பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

VCD அனுப்ப தபால் செலவு மட்டும் : –

1 முதல் 15 **VCD** அனுப்ப ரூ.20/–
16 முதல் 25 வரை **VCD** அனுப்ப ரூ.35/–
100 VCD க்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் **KPN Parcel Service** மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

நேரில் வர:

நேரில் நூல்களை பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளாச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து M.சீரிஸ் மற்றும் வெள்ளைபோர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். இடது புறம் உள்ள சிட்லபாக்கம் மெயின் ரோட்டில் 1/2 கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலது புறம் K.K. மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலது புற ஜி.டி.நாயுடு தெருவில், இடது புறத்தில் இரண்டாவது வீடு.

பொருளடக்கம்

முன்னுரை 8

கருணாகரன் கண்ட சித்தர்களின் சித்தம் 9

கருணாகரனின் கலங்கிய உள்ளம் - நானும் ஒரு கிறிஸ்தவனா? 9

அவரவர் தெய்வம் அவரவர்களுக்கு உசத்தி! 10

நாம் கோதுமையாக இருக்கிறோமோ? இல்லை பதராகவா? 10

தேவ மகிமைக்கு ஒரு சாட்சி 11

என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் 12

எதையும் செய்யவல்ல இயேசு கிறிஸ்து! 15

சர்வவல்ல சர்வேஸ்வரன் இயேசு கிறிஸ்து! 17

கல்லும் மண்ணும் கடவுள் ஆகார் 18

இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லை 19

பெரும்பாவி மனம் மாற ஏங்கும் தெய்வம் இயேசு கிறிஸ்து ஒருவரே 20

விக்கிரஹ ஆராதனை விக்கினத்தைப் போக்காது 22

சித்தர்களுக்குமா உண்மையான கடவுள் யார் என்று தெரியவில்லை? 23

அண்டிப் பிழைக்க வந்த ஆரியர்கள் 24

மெய்ஞ்ஞானம் தரும் சித்தர்களின் பாடல்கள் 25

அகத்தியர் அருளிய முப்பது பாடல்கள் 27

பாடல் 1 : நாலு வேதங்களின் மயக்கம் 28

- ரிக் வேத காலத்தில் இப்போது இருக்கும் சிவன், விஷ்ணு இல்லவே இல்லை 29
- திருக்குறள் ஒரு கிறிஸ்தவ நூல் 31
- கிறிஸ்தவம் கி.பி. முதல் நூற்றாண்டிலேயே இந்தியாவில் வேரூன்றி இருந்தது 31

பாடல் 2 : ஆறு லட்சம் கிரந்தங்களை 30க்குள் அடக்கிக் கொடுத்துள்ளேன் 33

பாடல் 3 : பரம் பொருளின் ஆறு குணங்களும், பத்து நெறிகளும் 33

- புல்லுக்கு ஒப்பாகும் மனித வாழ்வு 34
- கடவுளின் ஆறு குணங்கள் 34
- இறைவன் ஒளியாக இருக்கிறார் 35
- நிகரே இல்லாத சர்வேஸ்வரன் 37
- திரியேக தேவனாக இருக்கும் மெய்ப்பொருள் 37
- பாவத்திலிருந்து மீள பரம்பொருளின் பத்துக் கட்டளைகள் 38

பாடல் 4 : நம்மைப் படைத்தவரை தேட வேண்டும் 39
குறிகேட்டு படுகுழியில் விழாதே 40
அறிந்தவர்க்கு மோட்சமுண்டு: படைத்தோனை அறியாதார் எரி நரகத்தில் அழிந்து போவார்கள் . 41
மும்மூர்த்திகளும் தேவரல்லர், மனிதர் அப்பா! 42
பாடல் 5 : இதினாலெல்லாம் பரலோகம் போக இயலுமா? 43
பூஜை தான தர்மம் போக்காது பாவத்தை 44
நட்ட கல்லும் பேசுமா? 45
காசிக்குப் போனால் கருமம் தொலையாது 45
சாத்தான் செய்யும் சதி 46
நரகம் யாருக்காக? 47
பாடல் 6 : செய்ய வேண்டாதவைகள் 47
ஆச்சாரம் அனுஷ்டானம் அளித்திடாது முக்திதனை 48
நான்முகனை நாடவேண்டாம் 48
பாடல் 7 : பரம்பொருளின் உத்திரவின்படி திறந்து விட்டேன் 49
நாலு வேதம் பிறந்த கதை 50
நன்மை செய்யாத நால்வேதம் 50
கண்மூடிப் பழக்கங்கள் எல்லாம் மண்மூடிப்போக 51
பாடல் 8 : மெய் அறிவு அழிந்தால் சாத்தான் வசம் ஆவது சத்தியமே 51
சிந்தித்து சீர்தூக்கிப்பார் 52
சிலை வழிபாடு வந்த வழி 53
தெய்வம் எங்கே இருக்கிறது? 54
மெய்யறிவே நித்ய வாழ்வு தரும் 57
பாடல் 9 : நரகத்திற்குரிய சாத்தான் நம்மையும் மயக்கி இழுக்கிறான் 57
அகந்தையால் அழிந்த தேவதூதன் 58
நித்தமும் மானிடரை மோசம் போக்கும் சாத்தான் 59
பாவம் செய்யத் தூண்டும் சாத்தான் 59
பாடல் 10 : நிசமாய் நம்பினவர்க்கு ஈடேற்றமுண்டு 60
உண்மை கசக்கும், கோபம் கொள்ள வேண்டாம் 61
வேதங்களும் புராணங்களும் புரட்டர்கள் பிழைக்கத்தானே 61
நம்பினார் கெடுவதில்லை 63
எல்லாமுமாகும் இயேசு கிறிஸ்து 63

பாடல் 11 : கசட்டைப் போக்கி கரை ஏற வேண்டும் 64
அழுதால் உன்னைப் பெறலாமே 64
பாவத்தை மன்னிக்கும் பரமகுரு 65
சச்சிதானந்தனை சரண் அடை 66
பாடல் 12 : கைக் கொள்ள வேண்டிய வேதத்தின் வெளிச்சம் 67
அன்பில் நிலைத்து ஆண்டவரை அணுகுவோம் 67
பாலியல் இச்சைக்கு பயந்தோடு 68
சிவம் வேணும் என்று தினம் செபம் செய் 69
பாடல் 13 : தீட்சை பெற்று கடவுளைத் தேடுங்கள் 69
என் சித்தமல்ல, உம் சித்தம் பிதாவே 70
பாவம் போக்கி பரன் பாதம் பற்றுக 71
பாடல் 14 : மெய்ஞ்ஞானப் பாதை அடைய பத்து மொழி 72
காதுள்ளவன் கேட்கக்கடவன் 72
இயேசுவே வழி, வேறொன்றில்லை 73
பாடல் 15 : செகசோதியானவரை வணங்குவீர்களாக 73
வணங்குவாய் செகசோதியான ஒருவரையே 74
மானிலத்தை ஒரு நொடியில் படைத்தார் 75
பாவம் நீக்க பரமகுரு பிறந்தார் 76
பரிசுத்தராய் வாழ்ந்து பரமேறினார் 77
பாடல் 16 : ஒன்றான மார்க்கம் 78
ஈசன் காட்டும் ஈடேற்ற வழி இதுவே 78
பாடல் 17 : மக்கள் தேட வேண்டிய சித்தர்கள் 79
மனந்திரும்புங்கள் மறுபிறவி இல்லை 79
சீரிய வழி நடத்தும் சித்தர்கள் 80
பாடல் 18 : கண்ணீரால் கழுவுவாயே 82
நரகமா? சொர்க்கமா? நலமானதைத் தேடு 82
சொர்க்கமும் நரகமும் சொப்பனமல்ல, சத்தியம் 83
பற்றி எரியும் பாதாளக்குழி நரகம் 84
எரி நரகத்தில் எப்போதும் வேதனை 85
ஜீவனும் மரணமும் உனக்கு முன்பு - எது வேண்டும்? 85
பதினெட்டுப் புராணங்களும் பிராமணர்கள் பிழைக்கவே 86

பாடல் 19 : முக்திபரன் அருகிருப்பாய் 87
பொன் போல் நம்மைப் புடமிடும் திருவசனங்கள் 87
பாவம் போக்கும் பரமனின் பரிசுத்த இரத்தம் 88
இயேசு கிறிஸ்து நம்மை பிரகாசிப்பிக்கின்ற ஞான ஒளி 89
திருவசனத்தைக் கைக்கொண்டு திருமுழுக்கு எடு 90
பரமானந்தப் பரலோகம் 90
பரலோகத்தில் நமக்கோர் இடம் 91
பரலோகம் செல்லமுடியாத பாவிகள் 92
பேரின்ப பெருவாழ்வுக்கு ஆயத்தப்படு 92
பாடல் 20 : எச்சரிக்கை 93
ஒன்றாய் இருக்கும் திரியேகக் கடவுள் 93
ஆண் பெண் அல்ல, அரணும், இலிங்கமுமல்ல : அவர் அநாதி சச்சிதானந்தன் 94
சற்குருவை தரிசி, சரண் அடை, எச்சரிக்கையோடு நட, முக்தி அடைவாய் 95
மெய்யான குருபரனின் தன்மைகள் 95
இயேசு கிறிஸ்துவே நமக்கு குரு 98
இம்மைக்கும் மறுமைக்கும் இயேசு கிறிஸ்துவே 99
கிறிஸ்துவே மெய்ஞானம் 99
சித்தர்களின் காலம் - அகத்தியர் நூலின் காலம் 100
பின்னுரை 101

முன்னுரை

இப்படித்தான் நான் அவரை சந்தித்தேன். "என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்" என்ற என் சாட்சி நூலைப் படித்துவிட்டு நேரில் வந்து சந்திக்கலாமா என அமெரிக்காவில் ஒரு பல்கலைக்கழகத்தில் புரபசராக பணியாற்றும் சகோ. கருணாகரன் விடுமுறையில் சென்னைக்கு வந்திருந்தபோது எனக்கு டெலிபோன் செய்து கேட்டார். அந்த சந்திப்பின்போது பல்வேறு விஷயங்களோடு சித்தர்களைப் பற்றியும் பேச்சு எழுந்தது. என்னிடம் இருந்த சில சித்தர்களின் நூல்கள், பாடல்கள் மற்றும் அகத்தியர் எழுதிய 30 பாடல்கள் அடங்கிய ஒரு நூலையும் அவரிடம் கொடுத்தேன். அவைகளைப் படித்துவிட்டு அப்படியே ஆடிப்போய் அடுத்த நாள் வந்தார்.

மெய்யான தேவனை அறிந்தும் அவரோடு ஐக்கியப்படாமல் இருக்கும் அநேகம் கிறிஸ்தவர்கள், அவரை அறியாமலேயே அஞ்ஞான இருளில் இருக்கும் கோடிக்கணக்கான மக்கள் ஒவ்வொருவருமே அகத்தியரின் பாடல்களையும், சித்தர்களின் பாடல்களையும் கண்டிப்பாக அறிந்துகொள்ள வேண்டுமே என்ற அவரின் அளவிட முடியாத ஆதங்கத்தை கொட்டித் தீர்த்துவிட்டார். எப்படியாவது கூடிய விரைவிலேயே சித்தர்கள் பாடியிருப்பதைப் பற்றி நானே ஒரு நூல் எழுத வேண்டும் என வற்புறுத்த ஆரம்பித்துவிட்டார்.

அவருடனான சந்திப்பு, துடிப்பு, அவரின் தொடர்ந்த ஜெபம் அனைத்தும் "சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்" என்ற இந்த நூல் வெளிவருவதற்கு ஒரு காரணியாக அமைந்தது. ஆதங்கத்துடன் கூடிய அப்பின்னணிக் களத்தையும் அவரே எழுதியும் தந்தார். தன்னைப் பற்றியும், கிறிஸ்தவத்தில் இதுகாறும் அவர் இருந்த நிலைப் பற்றியும், என்னைச் சந்தித்த அவரின் அனுபவங்கள், மனந்திரும்புதல் மற்றும் உணர்வுகள், நாங்கள் பேசிக்கொண்டது, என்னுடைய உள்ளக் குமுறல்கள் எல்லாவற்றையுமே மிக அழகாக வடிவமைத்துத் தந்தார். அதை அப்படியே 'கருணாகரன் கண்ட சித்தர்களின் சித்தம்' எனத் தலைப்பிட்டு அகத்தியர் மற்றும் சித்தர்களின் பாடல்களுக்கு ஒரு முன் களமாக இதில் சேர்த்து வெளியிட்டுள்ளேன். இதில் இந்த அடியவனுக்கு ஒரு சிறிது பெருமையோ, புகழோ எதுவுமில்லை. எல்லாப் புகழும், துதியும், கனமும் அந்த சர்வ வல்ல சற்குருவாகிய பரம்பொருளுக்கே உரியது.

இதன் மேலட்டையை அழகுற வடிவமைத்துக் கொடுத்த சகோதரி ஜெருஷா மைக்கேலுக்கும், நல்லபடியாக அச்சிட்டுக் கொடுத்த யுனிவர்செல் கிராபிக்ஸ் சகோ. ஸ்டான்லி ராஜ்குமார் அவர்களுக்கும் என் நன்றியும் பாராட்டுதல்களும் உரியது.

அஞ்ஞான இருள் நீங்கி, மெய்ஞ்ஞான ஒளி பெற்று, மெய்ப்பொருளாகிய பரப்பிரம்மத்தை அனைவரும் அறிந்துகொள்ள பெரிதும் உதவிடும் என்ற நல்லெண்ணத்தில் இந்த நூலை பரமகுருவின் கமலப் பாதங்களில் நான் சமர்ப்பிக்கிறேன். பரமகுருவின் அருளும் ஆசியும் இந்த நூலைப் படிக்கின்ற அனைவரையும் ஆட்கொண்டு வழி நடத்துவதாக!

சென்னை
16.07.2007

பரம் பொருளின் அடிமை
எஸ். தாயப்பன்

கருணாகரன் கண்ட சித்தர்களின் சித்தம்

கருணாகரனின் கலங்கிய உள்ளம் - நானும் ஒரு கிறிஸ்தவனா?

ஒரு பாரம்பரியமிக்க பரம்பரைக் கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த நான் தற்போது ஒரு அமெரிக்க பிரஜையாகி, தென் அமெரிக்காவில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் எகனாமிக்ஸ் புரபசராக பணியாற்றுகின்றேன். என் தந்தை ஒய்வு பெற்ற ஒரு பள்ளித் தலைமை ஆசிரியர். எனது மூத்த சகோதரி சென்னையில் இருக்கிறார். ஒரு பரம்பரைக் கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து இருந்தாலும் ஒரு தீவிர பக்தி, தின ஜெபம், வேத வாசிப்பு என்றெல்லாம் ஒன்றும் கிடையாது. எப்போதாவது டைம் கிடைக்கும் போது பைபிளில் ஒரிரு அதிகாரங்கள் படிப்பேன். அதுவும் சங்கீதங்களின் புத்தகங்களிலிருந்து மாத்திரமே. மற்றப்படி ஒரு நார்மல், நாமினல் கிறிஸ்தவ வாழ்க்கையே.

சண்டே என்றால் சர்ச் (நத்திங் சீரியஸ்! ஒரு கிறிஸ்தவ ஐக்கியம், ஒரு சோசியல் கெட்–டு–கெதர், நாலு தெரிந்த முகங்களைப் பார்த்து சிரிக்க, கை குலுக்குவதற்காக மாத்திரமே!) ஒன்ஸ் இன் எ ஒயில் எப்போதாவது யாருடைய வீட்டிலாவது ஒரு சின்ன பிரேயர் மீட்டிங். கிறிஸ்மஸ், ஈஸ்டர், குட் ஃப்ரைடே என கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள், புத்தாடை, கேக் அவ்வளவுதான்.

பெரிய தப்புகள், பாவங்கள் எதுவும் செய்கிறது கிடையாது. அப்பப்போ பிரண்ட்ஸ்களோடு ஜாலியாக கொஞ்சம் 'பூஸ்', சிகரெட், கேலிப்பேச்சு, கலாட்டாக்கள், மாதம் ஒண்ணு ரெண்டு சினிமா, டிவி சீரியல்ஸ், டெக்கில் சில தமிழ், இந்திப் படங்கள், MP3ல் சில தமிழ், இந்திப் பாடல்கள், இங்கிலீஷ் ராக் மியூசிக், ஹெரால்டு ராபின்ஸ், ஆர்தர் ஹெய்லி, ஷெர்லி மேக்லீனின் ஆங்கில நாவல்கள், கைநிறைய வருமானம், வசதியான வாழ்க்கை, கார், பங்களா, ஈஸி கோயிங் லைப்.

இரண்டு வருஷத்துக்கு ஒரு முறை இந்தியாவுக்கு ஒரு ஜாலி ட்ரிப், உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பு. இங்கு வரும்வரை ஒரு த்ரில், ஆவல், படபடப்பு. இங்கு வந்த பிறகு வாகனங்களின் இரைச்சல், புகை, ரோட்டில் புழுதி, ரேடியோ, ஸ்பீக்கர், டிவி சீரியல்களின் அலறல், எல்லாம் தெரியும் என்ற ரீதியில் உரத்த குரலில் பேசும் பேச்சு, எதெற்கெடுத்தாலும் தேவையில்லாமல் ஒரு ஆர்கியூமெண்ட், பொது இடங்கள், சுவர் எல்லாம் சினிமா போஸ்டர்கள், அரசியல் தலைவர்களின் போட்டோக்கள், பெயிண்டிங், விளம்பரங்கள் எனப் பார்த்தால் எரிச்சல், வாந்தி வரும்படியான ஒரு அசிங்கம், ஜனக்கூட்டம், நெரிசல், சாலை விதிகளை மதியாமை, கொசுக்கடி, கூவத்தின் நாற்றம். ஏண்டா வந்தோம், எப்படா திரும்பிப் போவோம் என்கிற நினைப்பு. சுருக்கமாக கூறினால் இதுதான் என் வாழ்க்கை.

அவரவர் தெய்வம் அவரவர்களுக்கு உசத்தி!

யாரிடமும் இது வரை இயேசு கிறிஸ்துதான் மெய்யான தெய்வம், இந்த உலகத்தையும், நம்மையும் படைச்சவர் அவருதான், இன்னைக்கும் உயிரோட இருக்கிற தெய்வம் அவர் மட்டும் தான் என்று நான் யாரிடமும் சொன்னது கிடையாது. ஏன்னா நானே அப்படி நினைச்சது கிடையாது. நமக்கு இயேசு கிறிஸ்து எப்படி ஒரு தெய்வமோ அது போல மற்றவர்களுக்கு மற்றவைகள் தெய்வம்! பக்தி என்பது ஒருவரின் தனிப்பட்ட விஷயம். இதில் நாம் தலையிடக் கூடாது. பார்க்கிறவங்க கிட்டயெல்லாம் இயேசு கிறிஸ்துவைப்பற்றி பிரசங்கம் பண்றது எல்லாம் ஒரு ஃபெனடிக் பண்ற வேலை, தேவையில்லாதது. அவங்க அவங்களுக்கு அறிவு, படிப்பு, உலக ஞானம் எல்லாம் இருக்கு. அவங்களுக்கு யாரைக் கும்பிடணும்கிற சுதந்திரத்திலே நாம தலையிடக் கூடாது. அவரவர் தெய்வம் அவரவர்க்கு ஒசத்தி என்று ஒதுங்குவதை நாகரீகம், ஒரு உயர்ந்த பண்பாடு என எண்ணினேன்.

பாவ உணர்வு, ஒரு பரிசுத்த வாழ்க்கை, நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் கடைசியில் நியாயத்தீர்ப்பின் போது கணக்கு கொடுக்கணும், ஆக்கினைத் தீர்ப்பு உண்டு, பாவ வாழ்க்கையிலிருந்து மனம் திரும்பவில்லையேல் நித்தியத்திற்கும் நாம் நரகத்தில்தான் கிடந்து அவதிப்படணும்கிற சீரியசான எண்ணங்கள் எதுவும் இல்லாத ஒரு சராசரி, ஆர்டினரி, பேர்க் கிறிஸ்தவ வாழ்க்கைதான் என்னுடையது.

நான் பார்த்த அளவில் இப்படித்தான் இன்று கிறிஸ்தவர்களில் பாதிப்பேர் இருக்கின்றனர். பாரம்பரிய சபைகளில் மாத்திரம் அல்ல, நாங்க மாத்திரம்தான் பரலோகம் போவோம் என மார்தட்டிக் கொண்டிருக்கும் 'பெந்தகோஸ்தே' சபைகளிலும் நிறையப் பேர் இப்படித்தான் இருக்கின்றனர். சன்டே அன்னிக்கு மாத்திரம் மனதின் மூலையில் ஒரு சின்ன உறுத்தல் இருக்கும். மன்டே முதல் மண்டை அறிவில் ஓடிக் கொண்டிருக்கும் ஒரு சன்டே கிறிஸ்தவ ஜீவியம் தான் பலருக்கு.

நாம் கோதுமையாக இருக்கிறோமோ? இல்லை பதராகவா?

ஒரு தேவபயம், பாவ உணர்வு, தீய பாவப் பழக்க வழக்கங்களிலிருந்து விலகி, ஒரு பயபக்தியோடு கூடிய பரிசுத்தமான ஜெப ஜீவியம், தேவ ஐக்கியம், வேத வாக்கியத்தின்படி தேவசித்தத்தை அறிந்து நடத்தல் போன்ற எதுவும் இல்லாத ஒரு 'நான்–கிறிஸ்தவ' வாழ்க்கைதான் நான் வாழ்ந்து கொண்டு இருந்தேன்.

கிறிஸ்டியன்னா அவன் கிறிஸ்துவுக்குள்ள இருக்கணும். அவனுக்குள்ள இயேசு கிறிஸ்து இருக்கணும். அவருடைய அன்பு, பண்பு, பரிசுத்தம், சகிப்புத் தன்மை, அடக்கம், அமைதி, அடுத்தவர் குற்றங்களை மன்னிக்கின்ற மனோபாவம், பாவச் செயல்களிலிருந்து விலகி இருத்தல், எந்த விஷயத்திலும் யாருடைய மனசும் புண்படாதபடி நடந்து கொள்ளுதல், இரக்கம், கருணை, அடுத்தவர்களுக்கு

உதவி செய்தல் போன்ற இயேசு கிறிஸ்துவின் நற்குணங்களை ஓர் கிறிஸ்தவன் பிரதிபலிக்கணும். அவன் தான் கிறிஸ்தவன்!

மத்தவங்கள்லாம் கிறிஸ்தவர்களே அல்ல. அவங்கள்லாம் கிறிஸ்தவத்தில் இருக்கின்ற களைகள், பதர்கள்! நியாயத் தீர்ப்பின் போது லூக்காவில் சொல்லப் பட்டது போல 'கோதுமையை களஞ்சியத்திலும் (பரலோகத்திலும்), பதரையோ அவியாத அக்கினியினாலும் (நரகத்திலும்) சுட்டெரிப்பார்.' அப்பேர்ப்பட்ட பதர்கள்தான் இன்று கிறிஸ்தவத்திற்குள் அநேகம் பேர் இருக்கின்றனர். இவர்கள் எல்லாம் கிறிஸ்துவுக்குள் இருந்துகொண்டு, அவருக்குப் பிடிக்காத, அவர் அருவருக்கின்ற, சாத்தானுக்கு பிடித்தமான செயல்களையே செய்கின்றவர்கள். 'தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியால் அவன் பாவம் செய்யமாட்டான். இதனால் தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசினுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்' என்று வேதம் சொல்லுகின்றது (1 யோ 3 : 9–10). இந்த இரண்டாவது கேட்டகிரியில்தான் நானும் இருந்தேன்.

S. தாயப்பன் என்ற சகோதரர் எழுதிய "என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்" என்ற ஒரு அருமையான சாட்சி நூலைப் படித்து அவரை நேரில் சந்தித்து உரையாடியது வரைக்கும் நானும் கிறிஸ்தவத்திற்குள் இருந்து கொண்டு பிசாசின் சித்தத்தை செய்கின்ற ஒரு வெறும் "பேர்க் கிறிஸ்தவனாகவே" இருந்தேன். அவரிடம் பேசிய பிறகு நானும் ஒரு கிறிஸ்தவன்னு நினைக்கவே எனக்கு வெட்கமாக இருந்தது. அவருடைய சாட்சி நூலும், அவருடனான சந்திப்பும் என்னை முழுமையாக மாற்றியது. என் விசுவாசம், ஆவிக்குரிய ஜீவியம் அனலாக, ஒரு தீப்பிழம்பாக மாறியது. நான் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்தேன். கர்த்தர் தெரிந்து கொண்ட அந்த தேவதாசரை சந்திக்க வைத்த, அவர் மூலம் என் வாழ்க்கையை முழுவதுமாக மாற்றிய கர்த்தாதி கர்த்தருக்கு கோடானு கோடி நன்றியை நான் செலுத்துகிறேன்.

தேவ மகிமைக்கு ஒரு சாட்சி

2005 ல் நான் விடுமுறையில் இந்தியா வந்தபோது எனது சகோதரியின் வீட்டில் அந்த புத்தகத்தைப் பார்த்தேன். 'என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்' என்ற அந்த புத்தகத்தின் தலைப்பும், அதன் அட்டைப்படமும், அந்த புத்தகத்தை எழுதிய எஸ். தாயப்பன் என்ற பெயரும் சற்று வித்தியாசமாக இருக்கவே அந்த புத்தகத்தை திறந்து ஓரிரு பக்கங்கள் படித்தேன். என்னால் கீழே வைக்கவே முடியவில்லை. முழு புத்தகத்தையும் ஒரே மூச்சில் படித்து முடிக்கத் தூண்டும் வகையில் எழுத்து நடை. நம் எதிரிலேயே அவர் அமர்ந்து பேசுவது போல ஒரு அன்னியோன்யம், எளிமை, சரளம், ஒரு ஃப்லோ, கோர்வை, படிக்கின்ற எவரையும் இழுத்துப் பிடித்து படிக்க வைக்கின்ற வகையில் ஒரு அழுத்தம், காந்த சக்தி அதில் இருந்தது.

படித்து முடிப்பதற்குள் என்னையும் அறியாமல் பலமுறைகள் கண்களிலிருந்து நீர் வடிந்தது. அவர் எழுதியிருந்ததை நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. நான் அந்த புத்தகத்தை கீழே வைக்காமல் படிப்பதையும், என் கண்கள் கலங்கி இருப்பதையும் கண்ட எனது சகோதரியும் அதே கருத்தைக் கூறினார்கள். இதைக் கையில் எடுத்தா முடிக்காமல் கீழே வைக்கவே முடியாது. எப்பேர்ப்பட்டவர்களையும் ஒரு உலுக்கு உலுக்கி விடும். நாங்க போகிற சபையிலும் இவரை சாட்சி, செய்தி கொடுக்க கூப்பிட்டு இருந்தோம். அதைக் கேட்டுட்டு அழாதவங்களே கிடையாது. ஒரு வல்லமையான சாட்சி. படிக்கும்போது இருக்கிற இம்பாக்ட்டை விட நேரிலே அவர் சாட்சியை கேட்கும்போது இன்னும் அதிகமா பலரை தொட்டது. அவரிடம் கேட்டுக்கொண்டு நானும் நமது சபையில் உள்ள இரண்டு சகோதரிகளும் அவர் வீட்டுக்கே சென்று அவரையும், அவர் மகன் கார்த்திக்கையும் பாத்துட்டு வந்தோம். அவர் எழுதியிருக்கிறது அத்தனையும் உண்மை.

கர்த்தர் தமது நாம மகிமைக்காக விசேஷமாக தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு குடும்பம். இயேசு கிறிஸ்து இன்றைக்கும் ஜீவிக்கிறார், அற்புதங்களைச் செய்கிறார் என்கிறதுக்கு அந்தக் குடும்பம் ஒரு உயிருள்ள சாட்சி. அவர் மகன் கார்த்திக்கை இன்னைக்கு முழுக்கும் பாத்துக்கிட்டே இருக்கலாம். அவ்வளவு அன்பா, அடக்கமா, அழகா, உற்சாகத்தோட, கிறிஸ்துவுக்குள்ள அப்படி ஒரு வைராக்கியமா இருக்கிறான். தினமும் அந்த பையனுக்காகவும், அந்த குடும்பத்துக்காவும் ஜெபிக்கிறேன் என என் சகோதரி கூறினார்.

நான் அந்த புத்தகத்தில் இருந்த அவரின் டெலிபோன் நம்பருக்கு உடனே போன் பண்ணினேன். போனை எடுத்த உடனேயே 'பிரைஸ் த லார்டு' (தேவனுக்கு மகிமை உண்டாகட்டும்!) என்று அவரே போனை எடுத்தார். என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, அவரை சந்திப்பதற்கு நேரடியாக வரலாமா எனக் கேட்டேன். தாராளமாக வாருங்களேன் என்று தயக்கமின்றி ஒரு நட்புணர்வோடு கூறினார். அன்றே அவரைச் சென்று பார்க்கவும் செய்தேன். வாட் எ பிளசண்ட் சர்ப்பிரைஸ்! ஹி வாஸ் வெரி சிம்பிள், சரீன் அண்டு வெரி ஸ்ட்ரெயிட் ஃபார்வேர்டு. 64 வயதிலும் ஒரு இளைஞரின் உற்சாகம், சுறுசுறுப்பு, வேகம், துடிதுடிப்பு. அவர் எழுதிய புத்தகம் மற்றும் அவரிடம் நேரிடையாக கேட்டதின் சுருக்கத்தை அப்படியே கீழே கொடுத்துள்ளேன்.

என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்

58 வயது வரை ஒரு தீவிர இந்துவாக, இயேசு எதிர்ப்பாளனாக இருந்த சகோ. தாயப்பன் அவர்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அமெரிக்காவில் வேலை செய்து கொண்டிருந்த அவரது மூத்த மகன் கார்த்திகேயனின் வியாதிப் படுக்கையின் மூலமாகத் தொட்டு, அவருடைய அளப்பரிய அன்பை ருசித்துப் பார்க்கும்படியான ஒரு மகா பெரிதான கிருபையை அவருக்கு கொடுத்தார். அவர் ஒரு நீதிமானாக, நேர்மையுள்ளவராக இருக்கின்ற போது அல்ல. ஒரு

பாவியாக, பாவியிலும் பெரும் பாவியாக, பாவமே அவரது ஜீவியமாகக் கொண்டு வாழ்ந்து வந்தபோது, அவர் மீது இரக்கம் பாராட்டி இயேசு கிறிஸ்து அவரை ஆட்கொண்டார்.

அவர் நினைப்பதற்கும், சிந்திப்பதற்கும், வேண்டுவதற்கும் அதிகமாகவே பல அதிசயங்களையும், அற்புதங்களையும் அவர் மகன் கார்த்திக்கின் வாழ்க்கையிலும், அவரின் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் செய்து 'நானே மெய்யான தேவன். என்னைத் தவிர வேறு ஒரு தெய்வம் இல்லை' என்ற சத்தியத்தையும் இயேசு கிறிஸ்து அவருக்கு 2001 ல் உணர்த்தினார். 'வெறுத்த' கிறிஸ்தவம் அவருக்கு எப்படி 'விருப்பமான' கிறிஸ்தவமாக மாறியது, அவர் ஏன் ஒரு கிறிஸ்தவராக மாறினார், ஒரு தீவிர இந்துவாக, இயேசு எதிர்ப்பாளனாக இருந்தவருடைய பார்வையில் கிறிஸ்தவம் எப்படி இருக்கிறது என்று அவர் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களையெல்லாம் ஒன்று விடாமல், ஒளிவு மறைவு இன்றி, தயக்கமில்லாமல், தைரியமாக 'என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்' என்று ஒரு சாட்சி நூலாக எழுதினார்.

அந்த நூல் இன்று 60,000 பிரதிகள் வெளி வந்து பல்லாயிரக்கணக்கான ஆத்துமாக்களை ஜாதி, மத பேதமின்றி தொட்டு, பாவ வாழ்க்கையிலிருந்து மீட்டுக்கொண்டு இருக்கிறது. இந்த சாட்சி நூல் இந்திய மொழிகள் அனைத்திலும் வெளி வர வேண்டும் என பலர் உபவாசம் இருந்து ஜெபித்து வருவதின் பலனாக தற்போது இது 'My Cry and Joyful New Life' என்று ஆங்கிலத்திலும் 25,000 பிரதிகள் வெளிவந்து பல வெளி நாடுகளிலும் அனேகம் பேரை தொட்டுக் கொண்டு இருக்கிறது. பல ஆஸ்பத்திரிகளில் இந்தப் புத்தகத்தை வாங்கி வார்டுகளில் வைத்துள்ளனர். தமிழ், ஆங்கிலப் புத்தகத்தின் ஒவ்வொன்றின் விலையும் ரூ.10/– மட்டுமே என்று அவர் சொன்னவுடன் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனேன். இதை லாப நோக்கத்தோடு நான் வெளியிடவில்லை. கர்த்தருடைய நாம மகிமைக்காகவே வெளியிடுகிறேன். அனைவரும் எளிதில் வாங்கிப் பயன்பெற வேண்டும் என்பதற்காகவே இவ்வளவு குறைந்த விலையில் கொடுக்கிறேன் என அவர் கூறியபோது என் கண்கள் பனித்தன.

தபாலில் புத்தகம் வேண்டுவோர் அவரின் விலாசத்திற்கு (இரண்டாவது பக்கத்தில் கொடுக்கப்பட்டு இருக்கிறது) புத்தகம் ஒன்றுக்கு ரூ.11/– M.O மூலம் அனுப்பி வைத்தால் உடனே புக்போஸ்ட்டில் புத்தகங்களை அனுப்பி வைக்கிறார். தினமும் 50, 60 புத்தகங்கள் தபாலில் போகிறது என தபாலில் சேர்ப்பதற்குரிய 4 பண்டில் புத்தகங்களையும் காட்டினார். இந்த நூலை இந்தியிலும், மராட்டியிலும், தெலுங்கு, கன்னடம், மலையாளத்திலும் மொழி பெயர்க்க சிலர் பொறுப்பெடுத்து செய்தும் வருகின்றனர் என்றார்.

இந்த புத்தகத்தைப் படித்து விட்டு பலர் குடி, போதை, புகை மற்றும் புகையிலைப் பழக்க வழக்கத்திலிருந்தும், பல பாவச் செயல்களிலிருந்தும் விடுபட்டுள்ளதாக

எழுதியுள்ள பல கடிதங்களையும் காட்டினார். இப்புத்தகத்தை ப்டிக்கின்ற கிறிஸ்தவர்கள் மற்றும் இந்து சகோதர, சகோதரிகளின் ஆன்மீக வாழ்வும், பக்தியும் பலப்பட்டுள்ளதாகவும், மாறியுள்ளதாகவும் எழுதப்பட்டுள்ள பல கடிதங்களையும் கண்டேன்.

அவரோடு பேசிக்கொண்டு இருக்கும் போதே டெலிபோன் மணி ஒலித்தது. எடுத்துப் பேசுகின்ற சமயத்திலேயே அதிலுள்ள ஸ்பீக்கர் போனையும் ஆன் செய்தார். அம்பத்தூரிலிருந்து ஒரு பிராமின் லேடி அழுது கொண்டே பேசினார். அவரின் கணவருக்கு மூளையில் டியூமர் என்றும், தலைவலி தாங்க முடியவில்லை என்றும், ஆபரேசன் செய்யணும், அதற்கு செலவு அதிகம் ஆகும் என்கின்றனர், எனக்கு சின்னக் குழந்தைகளாக இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். சொந்த பந்தம் எதுவும் எனக்கு உதவவில்லை. மனசு ரொம்ப ஒடஞ்சு போயிருக்கிற சமயத்திலே உங்களோட சாட்சி புத்தகத்தை ஒருத்தர் கொடுத்தாங்க. படிச்சு முடிச்ச உடனே உங்களுக்கு போன் பண்றேன். என் வீட்டுக்காரருக்காக தயவு செய்து ஜெபிப்பீங்களா? நானும் என் புள்ளைகளும் அனாதைகளா ஆயிடக் கூடாது. எத்தனையோ கோயில், குளம் என்று சென்று வந்து விட்டேன். பிரார்த்தனைகள் செய்து எத்தனையோ நேர்த்திக் கடன்கள், பரிகாரங்கள்லாம் செய்துட்டேன். எந்த தெய்வமும் எனக்கு கண் தொறந்து கருணை காட்டலை.

உங்க புக்கை படிச்சப்புறம் இயேசு கிறிஸ்து கண்டிப்பா காப்பாத்துவார்னு எனக்கு ஒரு நம்பிக்கை வந்திருக்கு. முழு நம்பிக்கையோட குடும்பமா இயேசுவை வேண்டிக்கிறோம். நீங்களும் தயவு செய்து ஜெபிப்பீங்களா என்று போனிலேயே அழுது கெஞ்சினார். போனிலேயே அவருக்காக கண்ணீரோடு, பாரத்தோடு சகோதரர் ஜெபித்துவிட்டு பாவ அறிக்கை செய்து, விட்டுவிட்டு, தேவ சமூகத்தில் இருதயத்தை ஊற்றி போராடி ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்துவை முழுமையாக, சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவரிடம் கதறி அழுங்கள். கர்த்தர் கண்டிப்பாய் பெரிய விடுதலையைக் கொடுப்பார். அருகிலுள்ள ஒரு ஆவிக்குரிய சர்ச்சுக்கும் போங்கள். அங்குள்ளவர்களும் உங்களுக்காக ஜெபிப்பார்கள் என அறிவுரை கூறி ஆறுதல் படுத்தினார்.

இது போன்று நிறைய போன்கால் வருகிறதா எனக் கேட்டேன். குறைந்தது ஒரு நாளைக்கு 7, 8 கால்களாவது வரும். முக்கால்வாசி டெலிபோன் கால்கள் இப்படித்தான் இருக்கும். கிட்னி ஃபெயிலியர், கேன்சர், ஆக்சிடெண்ட், கோமா, பக்கவாதம் என பல நோய்கள். மேக்சிமம் இந்து சகோதர, சகோதரிகளிடமிருந்துதான் வருகிறது.

நேற்று ஒரு இந்து சகோதரர் திருச்சியிலிருந்து போன் பண்ணினார். அவர் மனைவிக்கு யூட்ரஸில் கேன்சராம். அவர் சொல்கிறார் – நான் எத்தனையோ தெய்வங்களை கும்பிட்டு விட்டேன். என் குல தெய்வமும் என் மனைவியை காக்கலை, கும்பிட்ட தெய்வமும் காக்கலை, ஆளாளுக்கு ஒரு சஜெஸ்ஷன்

கொடுப்பாங்க. யார் என்ன ஐடியா கொடுத்தாலும் எல்லாத்தையும் ஓடி ஓடிப் போய் செஞ்சோம். ஆனால் நோய் தீரலை.

எத்தனையோ விரதம், தியானம், யோகா. காயகல்பப் பயிற்சிகள் என பலவற்றையும் செய்து விட்டேன், இருந்தும் என் வாழ்க்கையில் ஒரு சமாதானம் இல்லை, சந்தோஷம் இல்லை, நிம்மதி இல்லை. வாழ்வில் ஒரு முன்னேற்றம் இல்லை. ஒரு படி ஏறினால் நாலுபடி சறுக்குகிறது, தோல்வி மேல் தோல்வி, தொட்டது தொலங்கலை. என் குடும்பத்தை அலைக்கழிக்கும் சாபங்கள், செய்வினைகள், சில தீய சக்திகளின் கிரியைகளிலிருந்து எங்களுக்கு ஒரு விடுதலை கிடைக்கவில்லை.

என்னுடைய பாரம்பரிய, வைராக்கியமான பக்தி, மந்திர உச்சாடனம், பூஜை புனஷ்காரங்கள் எதுவுமே என்னை, என் பாவப் பழக்க வழக்கங்கள், குடி, சிகிரெட் பழக்க அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கவில்லை. என்னுடைய முன்கோபம், எரிச்சல், பழிவாங்குகின்ற வெறி, காம விகார எண்ணங்கள் போன்ற கெட்ட துர்க்குணங்களிலிருந்து ஒரு விடுதலையும் கிடைக்கவில்லை.

வாழ்க்கையையே வெறுத்து தற்கொலை செய்து கொள்ளலாமா எனப் பல முறை யோசித்துக்கொண்டு இருந்தேன். இந்த உலகத்தில் என் கண்ணீரைத் துடைக்க, தலைவிதியை மாற்ற ஒரு தெய்வமுமே இல்லையா என நான் கண்ணீர் விட்டுக் கதறியபோது அந்த அற்புதம் நடந்தது.

எதையும் செய்யவல்ல இயேசு கிறிஸ்து!

என் வீட்டின் அருகில் உள்ள எனக்கு தெரிந்த ஒரு குடும்பம், மிகவும் பக்தி வைராக்கியமாக இருந்த குடும்பம். நெற்றி நிறைய் விபூதி குங்குமத்தோட பக்தி வைராக்கியமாக இருந்தவர்கள். தற்போது குடும்பத்தோடு இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, கிறிஸ்தவர்களாக மாறி, சர்ச்சுக்கு சென்று கொண்டு இருப்பதை பார்த்தேன். எனக்கு பயங்கர ஷாக். என்ன ஆச்சு இவர்களுக்கு என்று அன்று மாலையே அவர்கள் வீட்டிற்கு சென்று விசாரித்தேன்.

பிறகு அவர்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இயேசு கிறிஸ்து செய்துள்ள அற்புதங்களையும், கொடுத்துள்ள சந்தோஷத்தையும் சமாதானத்தையும் விலாவாரியாக கூறினார்கள். நீங்களும் உங்கள் துக்கம் மாற இயேசு கிறிஸ்துவிடம் வேண்டிப்பாருங்கள். நீங்கள்லாம் நல்லா படிச்சவங்க, உங்களுக்கே நல்லது கெட்டது எது எனத் தெரியும். உங்களை யாரும் ஏமாத்த முடியாது. நாங்க போற சர்ச்சுக்கு இந்த சன்டே உங்க மனைவியோட வந்து பாருங்களேன். அங்க என்ன தான் நடக்குதுன்னு வந்து பாருங்க. அங்க வர்றவங்கள்லாம் யாருன்னு பாருங்க. அவங்க ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலும் இயேசு கிறிஸ்து என்ன அற்புதங்களைச் செய்திருக்கிறார் என அவங்கள்டேயே கேளுங்க. உங்களை மதம் மாறச் சொல்லலை. மனம் மாறச் சொல்றோம். பாவ

வாழ்க்கையிலிருந்து, பாவ சிந்தனைகளிலிருந்து மனம் மாறுங்கள். இயேசுவிடம் பாவ மன்னிப்புக் கேளுங்கள். அற்புதம் நடக்குதா இல்லையான்னு பாருங்கள். உங்கள் பிரச்சனைகள், மனைவியின் நோய், கஷ்டங்கள், பிசாசின் கட்டுக்கள் போகுதா இல்லையான்னு டெஸ்ட்டு பண்ணிப்பாருங்களேன்னு அவ்வளவு கான்ஃபிடென்ட்டா, அழுத்தம் திருத்தமா, அசைக்க முடியாத விசுவாசத்தோட அடிச்சுச் சொன்னாங்க.

நானும் அவங்களோட சர்ச்சுக்கு போனேன். என் மனைவியும் கூட வந்தாள். அங்கு நடந்த ஆராதனை, ஜெபம் இவைகளில் அங்குள்ளவங்கள்லாம் எப்படி தன்னை மறந்து, முழு மனசோட, ஆரவாரித்து, அர்ப்பணித்து, ஆனந்தமா ஈடுபட்டாங்க, துதிச்சாங்கன்னு பார்த்தோம். ஒவ்வொருத்தர் முகமும் அந்த பக்திப் பரவசத்தில், ஆவியின் நிறைவில், அபிஷேகத்தில் பிரசாசிப்பதை பார்த்தோம். அந்த சந்தோஷம், நிறைவு, உற்சாகம், தெம்பு, ஆனந்தத்தை வேறு யாராலும் கொடுக்க முடியாது. இயேசு கிறிஸ்துவால் மட்டுமே கொடுக்க முடியும் என்று உணர்ந்தோம். ஆண்டவர் செய்த அற்புதங்களை பலர் சாட்சியாகக் கூறினார்கள். நம்பவே முடியவில்லை. ஆனால் சொன்னவர்களின் ஒவ்வொரு வார்த்தையும் அது சத்தியம் என்பதை அந்த குரலில் ஒலித்த உணர்வே பறையறிவித்தது. வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ள செய்தியை போதகர் பிரசங்கித்தார். நமது துன்பங்களுக்கு, சமாதானமின்மைக்கு, ஆசீர்வாதக் குறைவுகளுக்கு என்ன காரணம் என்று ஒவ்வொன்றாய் அந்த போதகர் வேதத்தின் சம்பவங்கள், வேதத்தில் சொல்லப்பட்டுள்ள தேவ மனிதர்கள், பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை உதாரணமாக எடுத்துக் காட்டி கூறியபோது, அந்த சத்தியத்தின் வெளிச்சம் என்னை நடுங்க வைத்தது.

நான் என் குறைகளை உணர்ந்தேன். பலவீனங்கள், செய்த பாவங்கள், தவறுகளால் குத்தப்பட்டு கூனிக்குறுகினேன். கண்ணீரோடு முழங்கால் படியிட்டு மனங்கசந்து கதறி அழுது நான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை எல்லாம் மன்னிக்குமாறு, கழுவுமாறு கண்ணீர் விட்டுக் கதறினேன். அந்தக் கணமே என் உள்ளத்திலும், குடும்பத்திலும் சொல்லி முடியாத ஒரு அமைதியும், நிம்மதியும், சந்தோஷமும், சமாதானமும் வந்தது. என் பிரச்சனைகள் அனைத்தும் தீர்ந்தன, என் மனைவியின் நோயும் குணமாகியது, சாபங்கள் ஆசீர்வாதங்களாக மாறின, என்னுடைய பாவ எண்ணங்கள், குடி, சிகிரெட் பழக்கம், கோபம், எரிச்சல் எல்லாமும் மாறின.

இதில் மிக முக்கியமான விஷயம் என்னவென்றால் இந்த சமாதானத்திற்காக, விடுதலைக்காக, சுகத்திற்க்க நான் எந்தப் பொருத்தனையும் பண்ணலை. என் கண்ணீரை மாத்திரம் நான் காணிக்கையாக கொடுத்தேன். மனம் திரும்பினேன். கர்த்தரிடம் பாவ மன்னிப்பு கேட்டுக் கதறினேன். அவ்வளவே! இன்று கிறிஸ்துவிற்குள் நான் ஒரு புது சிருஷ்டியாக இருக்கிறேன். எனக்குள் என் வாழ்வில், என் குணாதிசயங்களில் ஏற்பட்டுள்ள இந்த நல்ல

மாற்றங்களைக் கண்டு என் குடும்பத்தில் உள்ள அனைவருமே ஆச்சரியப்படுகின்றனர், மகிழ்கின்றனர். இது வரை நாங்கள் அனுபவித்திராத ஒரு சந்தோஷமும், சமாதானமும் இப்போது எங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் மூலம் கிடைத்திருக்கிறது.

ஆனால் நாங்கள் கிறிஸ்தவர்களாக மாறியதை என் உற்றார் உறவினரோ, என் மனைவியின் சொந்த பந்தமோ ஏற்றுக்கொள்ளவில்லை. அதைப்பற்றி நாங்கள் கவலைப் படவுமில்லை. நான் கஷ்டப்பட்டபோது இந்த சொந்த பந்தம், உற்றார் உறவினர்கள், ஜாதி, மதம், சமூகம் எனக்கு என்ன செய்தது? சும்மா வேடிக்கைதானே பார்த்தது. பிறகு ஏன் நாங்கள் அதைப் பற்றிக் கவலைப் படணும்? இவ்வாறு எனக்கு டெலிபோன் செய்து அவர் சந்தோஷத்தோடு, ஆனந்தத்தோடு சொல்கிறார் என சகோ. தாயப்பன் கூறினார். இது போல நிறையப் பேர்களின் சாட்சியை அவர் சொல்லச் சொல்ல எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

சர்வவல்ல சர்வேஸ்வரன் இயேசு கிறிஸ்து!

இயேசு கிறிஸ்துவினுடைய அன்பை ருசித்துப் பார்க்கின்றவர்களுக்குத்தான் அது தெரியும். அடுத்தவர்கள் நமக்கு அதைச் சொன்னால் புரியாது. அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும். நான் ஒரு பரம்பரைக் கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து இருந்தாலும் நான் இயேசு கிறிஸ்துவினுடைய அந்த அன்பை அறியாதவனாக, ருசிக்காதவனாகவே இருந்தேன். கிறிஸ்துவுக்குள் நான் மறுபடியும் பிறந்த பிறகுதான் அந்த அன்பு எப்பேர்ப்பட்டது, அது ஒரு தெவிட்டாத தேனமுதம் என்பதைக் கண்டுகொண்டேன். இந்த உன்னத அனுபவத்தை கிறிஸ்துவுக்குள் வந்து அவரை உண்மையிலேயே தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிற ஒவ்வொருத்தருடைய வாழ்க்கையிலும் இந்த அற்புதமான அனுபவத்தைப் பார்க்கலாம் என சகோதரர் அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

அது மாத்திரம் அல்ல, இயேசு கிறிஸ்து ஒருவரே, அவர் மாத்திரமே உண்மையான தெய்வம், அவரே சர்வ வல்ல தேவன். இந்த பூமியையும், அண்ட சடாச்சரங்களையும் படைத்தவர் இவரே. சகல ஜீவ ராசிகளையும், மனிதனையும் படைத்தவர் இயேசு கிறிஸ்து மாத்திரமே என்ற சத்திய உணர்வும் தெளியும் ஏற்படும். அவர் அன்பே உருவானவர், கருணைக் கடல், அவருடைய இரக்கங்களுக்கு அளவே கிடையாது. அதன் ஆழ அகலத்தை அறிந்தவர் யாருமே இல்லை என்ற உணர்வும் வரும் என்றார்.

அவர் பிதா, குமாரன் (இயேசு கிறிஸ்து) பரிசுத்த ஆவியாக, திரியேக தேவனாக, மூவரும் ஒருவராக இருக்கின்றவர். அவராலேயன்றி இப்பிரபஞ்சத்தில் ஒர் அணுவும் அசைவதில்லை. அவருக்கு மறைவானது இந்த பிரபஞ்சத்தில் ஒன்றுமே இல்லை. அனைத்தையும் அவர் அறிவார்.

கோடிக்கணக்கான கோள்களையும், நட்சத்திரங்களையும் படைத்து அந்தரங்கத்தில் தொங்க விட்டவர் அவர். அவைகள் இருக்கும் நிலையிலிருந்து ஒரு சிறிது நகர்ந்தாலும் நாம் நினைத்தும் பார்க்க முடியாத அளவு ஒரு பெரிய பிரளயமே நிகழும். அப்படி எதுவும் நிகழாவண்ணம் அவர் ஒவ்வொன்றையும் ஒழுங்கும் கிரமமுமாக அதனதன் இடத்தில் நிலைநிறுத்தி இருக்கிறாரே!

ஒரு சின்ன செல்போனில் உலகில் எந்த மூலையில் இருப்பவர்களோடும் பேச முடிகிறது. அந்த கையடக்க செல்போனில் கேமிரா, ஸ்பீக்கர், 200க்கும் மேற்பட்ட பெயர்கள், அவர்களின் டெலிபோன் நம்பர்கள், கால்குலேட்டர், பாட்டு, பேச்சை ரிக்கார்டு செய்ய வசதி, எவருக்கும் செய்தி அனுப்ப, வாங்க எஸ்.எம்.எஸ் வசதி, அலாரம், நேரம், தேதி காட்டல் என எத்தனையோ வசதிகளையும் பல தொழில் நுட்பங்களையும் அதில் உள்ள ஒரு சின்ன சிப்புக்குள் அடக்கி, உற்பத்தி செய்ய மனிதனால் முடிகிறது என்றால் இவ்வளவு செய்கின்ற இந்த மனிதனையே படைத்த சர்வவல்ல சர்வேஸ்வரன் அவர். அவராலே செய்யமுடியாத அதிசயமான காரியம் ஒன்றுமே இல்லை. சமுத்திரத்தின் அடி ஆழத்திற்குள்ளும் ஜீவராசிகளைப் படைத்து, அவைகளையும் போஷிக்கின்றவர் அவர் என மிகவும் சிலாகித்து சகோதரர் கூறினார்.

கல்லும் மண்ணும் கடவுள் ஆகார்

அப்பேர்ப்பட்ட சர்வவல்ல தேவனை, உருவமில்லாமல் அருஉருவாக, ஆவியாக இருக்கின்ற அவரை, வானம் சிங்காசனமும், பூமி பாதப்படியுமாக இருக்கின்ற அந்த அரூபியை சிலர் தங்களுடைய சுய லாபத்திற்காக அவர்களுடைய கற்பனையில் உதித்தபடி கல்லிலும், மண்ணிலும், மரத்திலும், உலோகத்திலும் வடிவமைத்து இவைகளே நமது தெய்வம், சிருஷ்டிகர், நம்மை காப்பவர் என்று சொன்னால் அது எவ்வளவு பெரிய கொடுமை, பாவம், அக்கிரமம், வேதனை, நினைக்கவே எப்படி நெஞ்சம் பதறுகிறது.

நாம் கஷ்டப்பட்டு இரவு பகல் கண் விழித்து நாம் பெற்று வளர்த்த நமது பிள்ளைகள் நம்மை அப்பா என்று கூப்பிடாமல், தெருவில் ரோட்டில் போகிற எவனையோ அல்லது எதையோ அப்பா என்று நம் கண்முன்னேயே அழைத்து, ஆரத் தழுவி, அரவணைத்து அன்பு பாராட்டினால் அவர்களைப் பெற்ற நமது வயிறு எப்படிப் பற்றி எரியும்? ஆனால் நம்மை உண்மையிலேயே படைத்து, காத்து வழி நடத்தி வருகின்ற பரலோக பிதாவான அந்த சிருஷ்டிகரை நாம் மறந்து ஒதுக்கிவிட்டு, அவர் அருவருக்கின்ற விதமாக பல ரூபங்களில் சொரூபங்களை உருவாக்கி வழிபடுவதோடு மட்டுமல்லாமல், அவர் வெறுக்கின்ற, அருவருக்கின்ற அனைத்துப் பாவச் செயல்களிலும் நாம் ஈடுபடுவதைக் கண்டும் நீடிய பொறுமையோடும், சாந்தத்தோடும் அவைகளையெல்லாம் சகித்துக் கொண்டு இன்னும் நம்மீது அன்பு காட்டுகின்றவர் அந்த பரலோக பிதாவாகிய நம் கர்த்தர். இத்தனை ஜாதி மதம் எல்லாம் மனிதர்களாகிய நாம் உண்டாக்கினது. கடவுள் உண்டாக்கவில்லை. ஒரு மனுஷனுக்கு ஒரு

தந்தைதான் இருக்க முடியும். அதேபோல் இந்த பிரபஞ்சத்திற்கும் ஒரு கடவுள்தான் இருக்க முடியும். அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மாத்திரமே!

இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லை

இத்தனை அட்டூழியங்கள், அக்கிரமங்கள் எல்லாவற்றையும் நாம் தொடர்ந்து ஒரு தேவ பயமில்லாமல் செய்து கொண்டே வந்த போதும், நம்மைத் தண்டிக்காமல் ஒரு பெற்ற தாயின் பாச உள்ளத்தோடு துக்கித்து, மனங்கசந்து, ஐயோ நான் படைத்த என் செல்வங்கள் இப்படித் தறிகெட்டுப்போய் கெட்டு சீரழிந்து போகிறார்களே, இவர்கள் செய்கின்ற இந்த பாவங்களுக்கு கடைசியில் நியாயத் தீர்ப்பின் போது நித்திய நித்தியமாய், காலா காலத்திற்கும், யுகயுகமாய் எரி நரகத்தில் கிடந்து அவதிப்படப் போகிறார்களே என மனதுருகி, நம்மை அந்த நரகாக்கினையிலிருந்து மீட்கும் பொருட்டு, தான் பெற்ற ஒரே மகனையும் நமக்காக மனுபுத்திரனாக பிறக்க வைத்து நமது பாவங்களுக்காக, அக்கிரமங்களுக்காக, மீறுதல்களுக்காக ஜீவாதார பலியாக சிலுவையில் துடிக்கத் துடிக்க ஒப்புக் கொடுத்தாரே, அது போன்ற ஒரு அளப்பரிய தியாகத்தை வேறு யாராவது செய்தது உண்டா?

பாவங்களை மன்னிக்கும் வல்லமை வேறு எவருக்கும் இல்லை! 'இரத்தப் பிரதோஷணம் பாவ வினாசம்' என்று சம்பூர்ண மஹா பாரதத்திலே கூறப்பட்டு இருக்கிறது. அதாவது இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லை என எல்லா வேதங்களுமே ஒப்புக்கொள்ளுகின்றன. அதுக்காக கோழி ரத்தத்தையோ ஆட்டுக்கிடா ரத்தத்தையோ அல்லது ஒரு மாட்டு ரத்தத்தையோ சிந்தினால் பாவம் போகாது அல்லது ஒரு எலுமிச்சம்பழத்தை இரண்டாக வெட்டி அதில் குங்குமத்தைத் தடவி கசக்கிப் பிழிந்து இரத்தம் போல சிந்திட்டாப்பல பாவம் போயிடாது. இல்லை, ஒரு வெள்ளைப் பூசணிக்காயின் நடுவிலே ஒரு ஓட்டை போட்டு குங்குமத்தை உள்ளே கொட்டி, அந்த பூசணிக்காய் மேலே கற்பூரத்தை எரிய விட்டு அதை நடு ரோட்டிலே போட்டு உடைச்சு அதை நாலு துண்டாக்கி நாலா புரத்திலும் தூக்கிப் போட்டுட்டாப்பிலே நாம செய்த பாவம் நம்மை விட்டு நாலாதிசையிலும் ஓடிப் போயிடப் போறது இல்லை.

மனிதர்கள் தங்கள் இரத்தத்தால் செய்த பாவங்களைப் போக்க குற்றமேயில்லாத, பாவமே செய்யாத மாசற்ற, பரிசுத்தமான இரத்தம் சிந்தப்படணும். அப்பேர்ப்பட்ட பரிசுத்தமான இரத்தம் இந்த உலகத்திலே வேறே யார்கிட்டேயும் கிடையாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் மாத்திரம்தான் இருந்தது.

சாம வேதத்தின் இரண்டாம் பகுதியாகிய தாண்டீய மஹாபிரமாணத்தில் பார்த்தீர்களே என்றால் 'ஜனங்களை ஆளுகின்ற பிரஜாபதி தன் ஜனங்களின் பாவம் போக்கும்படியாக தன் சொந்த சரீரத்தையே பிராயச்சித்த பலியாக ஒப்புக் கொடுத்து யக்ஞம் செய்வார்' எனக் கூறப்பட்டுள்ளது. பிரஜாபதி என்றால்

சிருஷ்டி கர்த்தராகிய தேவன் என்று அர்த்தம். அதாவது பரிசுத்தமான சிருஷ்டி கர்த்தராகிய தேவன் மரித்தால் தான், ரத்தம் சிந்தினால் தான், யக்ஞமானால் தான் பாவ மன்னிப்பு உண்டு, மானுடர்க்கு விடுதலை கொடுக்க முடியும், இரட்சிப்பை அருள முடியும் என மஹாபிரமாணம் தெள்ளத் தெளிவாக கூறுகின்றது.

எந்த தெய்வமும் மனுஷனுக்காக மரிக்கலை, இரத்தத்தை சிந்தலை. இயேசு கிறிஸ்து மாத்திரமே மரித்தார், இரத்தத்தை சிந்தினார். நமது பாவங்களுக்காக யக்ஞமானவர் இயேசு கிறிஸ்து ஒருவர் மாத்திரமே! மரித்து மீண்டும் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து மரணத்தை, பாதாளத்தை, சாத்தானை ஜெயங்கொண்டவர் இயேசு கிறிஸ்து மாத்திரமே. **இன்றும்** ஜீவனோடு இருப்பவர், நம்மைக் காண்கின்றவர், நம்மை கரம் பிடித்து வழி நடத்துகின்றவர், விசாரிக்கின்றவர். முகமுகமாய் நம்மோடு பேசுகின்றவர், நன்மை செய்கின்றவராகவே சுற்றித்திரிகின்ற ஜீவனுள்ள தேவன் அவர். இம்மைக்கும் மறுமைக்கும் ஒரே தேவன் இயேசு கிறிஸ்து மாத்திரமே!

அவர் பேசாத கல்லோ, மண்ணோ, சிலையோ அல்ல. அவர் பேசுகின்ற தெய்வம். ஜீவனுள்ள தேவன். இன்றும் ஜீவனோடு பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து நமக்காக பரிந்து பேசிக் கொண்டு இருக்கிறார். அவர் ஒருவரால் மாத்திரமே மானிடர்க்கு பாவ மன்னிப்பு, பாவ விமோசனம் கிட்டும். வேறு யாராலும் வேறு எந்த தெய்வத்தாலும் பாவ மன்னிப்பு கொடுக்க முடியாது. பரலோகத்துக்கு அழைத்துச் செல்லவும் முடியாது.

பெரும்பாவி மனம் மாற ஏங்கும் தெய்வம் இயேசு கிறிஸ்து ஒருவரே

மேலும் தெய்வம் என்று சொல்லப்படுகின்ற எதுவுமே பாவத்தை மன்னிக்கவில்லை. பாவம் செய்தவர்களை, பாவிகளை ஹதம் பண்ணவே, சங்காரம் பண்ணவே, அழிக்கவே அவதரித்துள்ளதாக எல்லா வேதங்களுமே கூறுகின்றன. பத்மாசுரவதம், நரகாசுரவதம், சூரசம்ஹாரம், ஹிரண்யவதம் என இப்படிப் பல உதாரணங்களை இந்து மத வேதத்திலே நாம் காண முடியும். பாவத்தை வெறுத்து பாவிகளை (பாவத்தில் விழுந்து கெட்டுப் போன தனது பிள்ளைகளை) நேசித்து, பாவிகள் மனம் மாற, மனம் திரும்ப விரும்புகின்ற ஒரே தெய்வம் இயேசு கிறிஸ்து மாத்திரமே.

தான் படைத்த பிள்ளைகள் செய்த பாவத்திற்குரிய தண்டனையைத் தானே ஏற்று, பரிகார பலியாகி, தன் பிள்ளைகளின் பாவத்திற்கு விடுதலையை சம்பாதித்துக் கொடுத்த தெய்வம் இயேசு கிறிஸ்து மாத்திரமே. அன்பு கூறுகின்றவர்களிடம் உனக்காக நான் உயிரைக்கூட கொடுப்பேன் என்ற பொதுவாக ஒரு எமோஷனலில் யாருமே சொல்லுவார்கள். ஆனால் யாருமே அப்படி செய்வது கிடையாது. அப்படி உயிரைக் கொடுப்பதற்காகவே அவதாரம் எடுத்தவர் அந்த தியாகச் செம்மல் இயேசு கிறிஸ்து மாத்திரமே. இதிலிருந்தே

தெரியவில்லையா அவர் நம்மை எவ்வளவு நேசிக்கிறார் என்று. நமக்காக தன் உயிரையும் கொடுத்தவர் நமக்காக எதையும் செய்வாரே!

நம்மோட இரண்டு புள்ளைகள்ல ஒரு புள்ளை தப்பு பண்ணி விட்டால், சகவாச தோஷத்தினாலோ அல்லது சில சந்தர்ப்ப சூழ்நிலைகளினாலோ கெட்டுப்போய் விட்டால், அந்தப் புள்ளையை நாம் என்ன அப்படியே வெறுத்து ஒதுக்கித் தள்ளி விடுகின்றோமா? இல்லை கொன்றுவிடுகின்றோமா? அல்லது சங்காரம் செய்து விடுகின்றோமா? அந்தப் புள்ளையும் மனம் திரும்ப வேண்டும், மனம் திரும்ப ஒரு சந்தர்ப்பம் தர வேண்டும், அவனும் ஒரு நல்ல பிள்ளையாக மாற வேண்டும், கெட்டுச் சீரழிந்து போய்விடக்கூடாது என ஒரு பெற்ற தாயின் உள்ளம் எப்படியெல்லாம் பரிதவிக்குமோ அதுபோல பரிதவித்து, நாம் பாவத்திலிருந்து மீள பரிகாரம் செய்தவர் இயேசு கிறிஸ்து ஒருவர் மாத்திரமே.

அவர் இப்படித் தன் விலையேறப்பட்ட இரத்தத்தை சிந்தியது இந்த உலகத்தில் பிறந்த கிறிஸ்தவர்களுக்காக மாத்திரம் அல்ல, இந்த உலகத்தில் பிறந்த சகல ஜாதி, மத மக்களுக்காகவுமே அவர் மரித்தார். மனதார அவரை ஏற்றுக் கொண்டு அவரிடம் என் பாவங்களை மன்னியும் என மனங்கசந்து கதறுகிற யாராக இருந்தாலும், அவர்கள் எந்த மதத்தை, ஜாதியை, இனத்தை, தேசத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவருக்குமே அந்த பாவ மன்னிப்பை அளிக்க அவர் நல்லவராக, போதுமானவராக இருக்கிறார். இந்த ஜாதி, மதம், இன வேறுபாடுகள் எல்லாம் மனிதர்கள் உண்டாக்கினது. தேவன் உண்டாக்கவில்லை. ஆகவே அவரிடம் கேட்கின்ற யாவரும் பெற்றுக் கொள்ள முடியும். காதுள்ளவன் கேட்கக் கடவன்.

நான் இது வரை எந்தப் பாவமுமே செய்தது கிடையாது என்று யாராவது சொல்வார்களானால் அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறார்கள் என்றே அர்த்தம். நாம் அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் பல பாவங்களை தொடர்ந்து நம்வாழ்வில் செய்துகொண்டே இருக்கிறோம். நாம் பிறந்ததே பாவத்தினால் தான். நாம் அனைவருமே பாவிகள். இந்தப் பாவங்கள் நீக்கப்பட வேண்டும். இல்லையேல் நமது மரணத்திற்குப் பிறகு உள்ள நியாயத் தீர்ப்பின்போது எரி நரகம்தான் நமக்காக காத்திருக்கிறது. வேறு எவர் மூலமாயும், வேறு எதன் மூலமாயும் இந்த நரஹாக்கிணையிலிருந்து நாம் தப்பவே முடியாது. நம் பாவங்களை போக்கவும் முடியாது.

இந்த பூமியில் வாழும் எவராலும் நாம் செய்த பாவங்களைப் போக்க முடியாது. நல்ல விஷயங்களை, போதனைகளை அவர்களால் கூற முடியும். ஒரு நல்ல, பயனுள்ள ஒரு வாழ்க்கையை நாம் வாழ அவர்கள் வழிகாட்ட முடியும். ஆனால் யாருடைய பாவத்தையும் அவர்களால் மன்னிக்க முடியாது. அவர்கள் போதனைகளைக் கேட்டு இனிமேல் பாவம் செய்யாமல் வேண்டுமானால் ஒருவனால் சிறிது காலம் இருக்க முடியும். ஆனால் இதுவரை செய்த பாவங்களுக்கு நிவர்த்தியை யார் கொடுப்பார்கள்? தியானத்தினாலோ, ஒருவர்

கொடுக்கும் ஆசீர்வாதத்தினாலோ மேற்கொண்டு செய்கின்ற நன்மைகளினாலோ நாம் இது வரை செய்த பாவத்தை போக்க முடியாது.

நாம் செய்த ஒவ்வொரு செயலும், செய்த சிந்தனைகளும், பேசிய வார்த்தைகளும். நமது ஆத்துமாவில் அப்படியே பதிவாகி இருக்கிறது. ஒவ்வொன்றுமே பதிவாகி இருக்கிறது. அதனால்தான் நாம் 4ம் கிளாஸ் படித்த அந்த ஸ்கூல், சொல்லிக் கொடுத்த டீச்சரின் முகம், பார்த்த இடங்கள், சிலர் நம்மிடம் பேசிய கோபமான வார்த்தைகள், சில மனதுக்குப் பிடித்த, பிடிக்காத நிகழ்ச்சிகள் எல்லாம் நாம் நினைத்த மாத்திரத்திலேயே அந்தக் க்ஷணமே நமது நினைவுத் திரையில் அவைகள் அப்படியே ஒரு வீடியோ காட்சி போல ஓடுகின்றது. ஏனென்றால் ஒன்று விடாமல் எல்லாமே நமது ஆத்துமாவில் அவைகள் பதிவாகியுள்ளன. அவைகளே நியாயத் தீர்ப்பின்போது நமக்கு எதிராக கடைசியில் சாட்சி கூறும், நாம் செய்ததை யாருமே பார்க்கவில்லை. ஒருவருக்குமே தெரியாது என நினைக்கிறோம். ஆனால் வானமும் பூமியும் நமக்கு எதிராக சாட்சி கூறும். காதுள்ளவன் கேட்கக் கடவன். கேட்காதவர்களுக்கு ஐயோ!

விக்கிரஹ ஆராதனை விக்கினத்தைப் போக்காது

இந்த உண்மை அனேகருக்கு கிறிஸ்வுக்குள் வந்த பிறகு தான் தெரிகிறது என சகோ. தாயப்பனும் கூறினார். அவர் மேலும் கூறியதாவது: நான் எவ்வளவோ புத்திசாலியாக, திறமைசாலியாக, பல நிர்வாகப் பொறுப்புக்களை வகித்து அனுபவம் பெற்றவனாக, ஒரு பகுத்தறிவாளனாக இருந்தபோதும் இந்த உண்மைகள் எனக்கு முன்பே தெரியவில்லை. மற்ற எல்லா விஷயத்தையும் காரியங்களையும் நான் நோண்டி துருவி அலசி ஆராய்ந்து பார்ப்பவனாக இருந்தும் அது வரை நான் வணங்கிக் கொண்டு இருந்த இந்த தெய்வங்களின் விஷயத்தில் மாத்திரம் அவைகளை பிளைண்டாக, கண்களை மூடிக்கொண்டு அப்படியே ஃபாலோ பண்ணினேன். நம் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி இவர்கள் எல்லோரும் முட்டாள்களா? அவர்கள் எல்லோருமே வாழையடி வாழையாக, பரம்பரை பரம்பரையாக வழிபட்ட தெய்வங்களை நாமும் அப்படியே தொழ வேண்டும். அதை ஆராயக் கூடாது, கேள்விகள் எதுவும் கேட்கக் கூடாது. இந்த ஒரு விஷயம் மட்டும் நம்முடைய ஆராய்ச்சிக்கு, அலசலுக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயம் என எண்ணினேன். இந்த தெய்வ விஷயத்தைப் பற்றி யார் என்ன சொன்னாலும் சரி, அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளக் கூடாது என்று அந்த அளவுக்கு என் மனக்கண்கள் குருடாக்கி வைக்கப்பட்டு இருந்தன.

பக்தி இருந்தது, பூஜை புனஷ்காரம் இருந்தது, காலை மாலை மந்திர உச்சாடனம், விளக்கேற்றுதல், தூப, தீப கற்பூர ஆராதனைகள், அமாவாசை, பௌர்ணமி, சஷ்டி, சதுர்த்தி, பிரதோஷ விரதங்கள் என எல்லா அனுஷ்டானங்களையும் நான் ஒன்று விடாமல் ஒழுங்கும், கிரமமுமாக பக்திபூர்வமாக கடைப்பிடித்து வந்தபோதிலும் என்னுடைய பாவப் பழக்கங்கள்,

சிகரெட், டிரிங்க்ஸ், கோபதாபங்கள், எரிச்சல், பழிவாங்குகின்ற நினைப்பு, காமாந்தகார சிந்தனைகள் எதுவுமே மாறவில்லை. அந்த பக்தி என்னைப் பண்படுத்தவில்லை. பக்குவப்படுத்தவில்லை, பரிசுத்தப்படுத்தவில்லை. பல சமயங்களில் ஒரு சராசரி மனிதனாகக் கூட அல்ல, அதையும் விட மோசமான நிலையில் நான் நடந்துகொண்டு இருக்கிறேன். ஆக இதுவரை இருந்த இந்த பக்தியினால் எனக்கு என்ன பயன்?

எல்லாம் நல்லபடியாக நம் வாழ்க்கையில் நடக்கும் வரைக்கும், எல்லாமே ஸ்மூத்தாக, ஒழுங்கும் கிரமுமாக நடக்கின்ற வரைக்கும் ஒன்றுமே தெரிவதில்லை. ஒரு பிரச்சனை, கஷ்டம், நோய் நொடி, ஒரு ஆக்ஸிடெண்ட், நஷ்டம், பேரிழப்பு, இறப்பு என நம்வாழ்வில் ஒரு பெரிய அடி விழுந்த பிறகு தான் நாம் கொஞ்சம் யோசித்தே பார்க்கிறோம். ஏன் இது வரை நாம் மலைபோல நம்பி இருந்த, ஆத்மார்த்தமா, பக்தி பூர்வமா, மனதார வழிபட்ட இந்த விக்கிரஹங்கள் நம்மை ஏன் இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றவில்லை? ஏன் ...ஏன்? என மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளும் போதுதான் கொஞ்சம் பொறி தட்டுகிறது, விழிப்பு வருகிறது, சிந்திக்கிறோம், தேடுகிறோம், கண்டடைகிறோம். இயேசு கிறிஸ்து ஒருவரே மெய்யான தேவன் என பிறகு தெளிவு பெறுகிறோம் என்றார்.

சித்தர்களுக்குமா உண்மையான கடவுள் யார் என்று தெரியவில்லை?

இது நம்மைப் போல் இருக்கின்ற சாதாரண மனிதர்களுக்கு ஏற்படும் ஓர் அனுபவம், புத்திக் கொள்முதல். என்னுடைய நண்பர் ஒருவர் இந்து மதத்தை சேர்ந்தவர். அவர் அடிக்கடி சித்தர்களைப் பற்றி சிலாகித்துச் சொல்லுவார். சித்தர்கள் முக்காலமும் அறிந்தவர்கள், சர்வத்தையும் உணர்ந்த ஞானிகள், சித்தத்தை அடக்கி தவம் செய்து இறை அனுபூதி பெற்றவர்கள் எனக் கூறுவார். அப்பேர்ப்பட்ட ஞானிகளுக்கு இயேசு கிறிஸ்து ஒருவரே மெய்யான தேவன் என்று ஏன் புரியவில்லை? அவர்களுக்கு கண்டிப்பாய் அது புரிந்து இருக்கணுமே.

எவ்வித தொலைநோக்கிக் கருவிகளும் இல்லாமல் வான மண்டலங்களையும், அதிலுள்ள கோள்களையும், அவைகளின் சுழற்சி, போக்கு எல்லாவற்றையும் மிகத்துல்லியமாக இங்கிருந்தே அமர்ந்த நிலையிலேயே ஆராய்ந்து அறிந்து கணித்தவர்களுக்கு, அட்டமா சித்திகளையும் செய்தவர்களுக்கு, நமது நாடியைப் பிடித்துப் பார்த்து நமது உடம்பிலுள்ள அனைத்து நோய்களையும், பித்த, சிலேத்தும வாதைகளையும் ஒரே வினாடியில் அறிந்தவர்களுக்கு அதற்குரிய மருந்துகள், மூலிகைகளை, பச்சிலைகளில் இனம் கண்டு கொண்டவர்களுக்கு, முக்கண்ணான ஞானக்கண் திறக்கப்பட்டவர்களுக்கு, அவர்களுக்கு தெரியாதது ஒன்றுமே இல்லை எனக் கூறப்பட்ட இந்த சித்தர்களுக்கு இயேசு கிறிஸ்து ஒருவர் மாத்திரமே மெய்யான தெய்வம் என்ற இந்த சத்தியம், வெளிப்பாடு மட்டும் ஏன் தெரியாமல் போயிற்று என சகோதரரிடம் கேட்டேன். சிரித்துக்கொண்டே அகத்தியர் எழுதிய 30

பாடல்களையும், பல சித்தர்கள் எழுதிய பாடல்களையும் கொடுத்து இவைகளைப் படித்துப் பாருங்கள், உங்கள் கேள்விக்கு பதில் கிடைக்கும் என்றார்.

பல சித்தர்களின் பாடல்களைப் படிக்கப் படிக்க எனக்கு பயங்கரமான ஷாக். அவர்கள் அத்தனை பேர்களுமே உண்மையான தெய்வம் கல்லிலும், மண்ணிலும், சிலையிலும், கோயிலிலும் இல்லை என ஆணித்தரமாக கூறியிருக்கின்றனர். அப்பொழுது உண்மையான தெய்வம் யார் எனக் குழம்பி இருக்கின்ற நிலையில் இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவன், மனுக்குலத்தின் பாவ நிவர்த்திக்காக மரித்தவர் அவர் ஒருவரே, அவர் மூலமாக மாத்திரமே மனுக்குலத்திற்கு முக்தி உண்டு, பரலோகத்தின் வாசல் அவர் ஒருவரே எனத் தெள்ளத் தெளிவாக, ஆணித்தரமாக, அழுத்தம் திருத்தமாக, ஐயந்திரிபுர, ஆழமாக, தைரியமாக, நெத்தியடியாக பறை அறிவித்தவர் சித்தர்களிலெல்லாம் பிரதான சித்தராகக் கருதப்பட்ட அகத்திய முனிவர் என அவருடைய பாடல்கள் மூலமாக அறிந்துகொண்டேன். மற்ற சித்தர்கள் என்ன கூறியிருக்கின்றார்கள் என ஆராயப் புகுகையில் பல சித்தர்களின் பாடல்களில் பலவற்றை ஆரியர்கள் அவர்களின் சுய நலத்திற்காகவும், பிழைப்பிற்காகவும் அழித்தும் மறைத்தும் விட்டுள்ளனர் என்பதும் தெளிவாகியது.

அண்டிப் பிழைக்க வந்த ஆரியர்கள்

நமது நாட்டிற்கு அண்டிப் பிழைக்க வந்த இந்த அயல்நாட்டவர், நாடோடிகளாக இங்கு சுற்றித் திரிந்து, கொஞ்சம் கொஞ்சமாக காலுன்றி வலுப்பெற்று, போருக்கு செல்லும் அரசர்கள் வெற்றிபெற சில வேள்விகளையும், யாகங்களையும் செய்து பலிகள் கொடுத்து, ஆருடங்கள் சொல்லி ஆட்சியில் இருப்பவர்களிடம் நல்ல பெயர் வாங்கினர். பின் அரசாள்பவர்க்கு அறிவுரை கூறும் நிலைக்கு உயர்ந்து இவர்கள் ஆதியில் தங்களுடைய தேசங்களான பாபிலோன், பெர்சியா போன்ற நாடுகளில் செய்து வந்த விக்கிரஹ ஆராதனைகளையும் கொஞ்சம் கொஞ்சமாக நமது நாட்டிலும் புகுத்தினர். அதுவரை இந்நாட்டின் மண்ணின் மைந்தர்களாக இருந்த திராவிடர்களுக்கு இருந்துவந்த பழம்பெரும் நாகரீகத்தையும், கலாச்சாரத்தையும் இயற்கை வழிபாடுகளையும் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றினர். அதுவரை கோலோச்சி வந்த திராவிடர்களை அடிமைப்படுத்தி, ஜாதிமத பேதமற்று அனைவரும் ஒரு தாய் வயிற்று மக்களாக எவ்வித ஏற்றத்தாழ்வும் இல்லாது வாழ்ந்து வந்த திராவிடப் பழம்பெரும் சமூகத்தில், மனிதப் பிறப்பில் உயர்ந்தவன், தாழ்ந்தவன், தீண்டத்தகாதவன் என பல ஏற்றத் தாழ்வுகளை உண்டு பண்ணும் வருணாசிரம கோட்பாடுகளைப் புகுத்தி, அவர்களை அடக்கி ஒடுக்க மனுநீதி சட்டத்தையும் உருவாக்கினார்கள். அதை நடைமுறைப்படுத்த உதவிய எட்டப்பர்களை சத்திரியன், வைசியர், சூத்திரன் என்று கொஞ்சம் உயர் ஜாதிகளாக்கி, எதிர்த்தவர்களை கொன்று குவித்து, தப்பிக் காடுகளுக்கு ஓடியவர்களை தீண்டத்தகாத ஆதி திராவிடர்களாகவும் ஆக்கிவிட்டனர்.

கி.பி. முதலாம் நூற்றாண்டில் நமது நாட்டிற்கு வந்த இயேசு கிறிஸ்துவின் சீடரான செயிண்ட் தாமஸ் அவர்கள் கூறிய கிறிஸ்தவக் கோட்பாடுகளையும், நீதிகளையும் ஏற்றுக் கொண்டு கடைப்பிடித்து வந்த திராவிட இன மக்களை ஆரியர்கள் ஒடுக்கி, விக்கிரஹ ஆராதனைக்கு அடிமைப்படுத்தி, நம்மைப் படைத்த மெய்யான தேவனிடமிருந்து நம்மைப் பல நூறு ஆண்டுகளாகப் பிரித்து நம் அனைவரையுமே நரஹாக்கிணைக்கு ஆளாக்கி விட்டனர். மெய்யான தேவனை வழிபடாது இருப்பதே பாவம். அதை விடப் பாவம் கடவுள் அருவருக்கின்ற விக்கிரஹ ஆராதனையை செய்வது. அதையும் விட மோசமான பாவம் மெய்யான தேவனை வழிபட்டு வந்தவர்களை திசை திருப்பி, விக்கிரஹ ஆராதனை செய்யும்படி செய்தது. ஆரியர்கள் இப்படி செய்தது ஒருவர் இருவரை அல்ல. இந்த மண்ணின் மைந்தர்களான அத்தனை கோடி மக்களையுமே அப்படி வஞ்சித்து துர்உபதேசம் செய்து, யுகயுகமாக பின்வரும் சந்ததிகளையும் ஆராதனை செய்கின்றவர்களாக மாற்றியது எவ்வளவு பெரிய கொடுமை, மகா பெரிய பாவம் தெரியுமா?

மெய்ஞ்ஞானம் தரும் சித்தர்களின் பாடல்கள்

மனிதர்கள் தங்கள் சுய லாபத்திற்காக உருவாக்கிய விக்கிரஹங்கள் ஒரு போதும் தெய்வங்கள் ஆக மாட்டா. நம்முடைய பாவங்களை மன்னித்து, நம்மைப் பரிசுத்தப்படுத்தி, ஒரு பரிசுத்த வாழ்வு வாழ வைத்து இறுதியில் நம்மை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் தெய்வம் இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டுமே. அவரே நம்மைப் படைத்தவர். என்றென்றும் ஜீவிக்கின்றவர். அவரே நம்மை கடைசியில் நியாயம் தீர்ப்பவர் என்னும் உண்மையை உணர்ந்து, அதை பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் 30 பாடல்களில் தெளிவு பட துணிந்து பாடியவர் அகத்திய முனிவர் பாடியுள்ளார். மற்ற சித்தர்களும் பாடியுள்ளனர்.

சித்தர்கள் ஞானிகள். முக்காலத்தையும் உணர்ந்தவர்கள். மக்களை நல்வழிப்படுத்த வழி காட்டியவர்கள். மெய்ப்பொருளைப்பற்றி அவர்கள் தியானித்து, உய்த்து உணர்ந்தவைகளை மக்கள் நலனுக்காகவும், பரம்பொருளை அறிந்துகொள்ளவும் நிறைய பாடல்களை பாடியுள்ளனர். மூடப் பழக்க வழக்கங்களையும், ஆரியர்கள் புகுத்திய விக்கிரக ஆராதனைகளையும், பல தெய்வ வழிபாடுகளையும், சடங்கு சம்பிரதாயங்களையும் மிகக் கடுமையாக தாக்கி எண்ணிலடங்கா பாடல்களைப் பாடியுள்ளனர். அவைகள் அனைத்தையும் இங்கு எழுதுவது என்பது இயலாத ஒன்று. ஆகவே தேர்ந்தெடுத்து சில பாடல்களை மட்டுமே சகோதரர் தாயப்பன் அவர்கள் இதில் எழுதியுள்ளார். சித்தர்களின் உள்ளத்தை, கருத்தை, அறிந்துகொண்ட உண்மைகளை தெரிந்துகொள்ள இவைகளே போதுமென நம்புகிறேன்.

இவைகள் யாருடைய மனதையும் புண்படுத்தும் நோக்கத்தோடோ அல்லது வழிபாட்டு முறைகளை இழிவுபடுத்தும் எண்ணத்தோடோ எழுதப்படவில்லை. மாறாக இதைப் படிக்கின்ற யாவருமே மெய்ப்பொருளைப் புரிந்துகொள்ள

வேண்டும், அவர்களும் நம்மைப் படைத்த மெய்யான இறைவனின் இரக்கம் பெற்று தங்களின் பாவங்களை உணர்ந்து மனம் மாற வேண்டும். ஒருவரும் நரகம் செல்லாது அனைவருமே பரலோகவாசியாக ஆக வேண்டும் என்ற சித்தர்களின் நல்ல நோக்கத்தையே சகோதரரும் இங்கு வலியுறுத்திக் கூறியுள்ளார். தெரியாமல் தவறுகள் செய்யலாம். அது தவறல்ல. ஆனால் அது தவறு, சரியல்ல என்று தெரிந்து பிறகு அந்தத் தவறை விட்டு விலகி, சரியானதை பிடித்துக் கொள்ள வேண்டும். அதுவே உய்ய வழி, அறிவுடமை ஆகும்.

இதைப் படித்துப் பயனடைந்து மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். நீங்கள் அறிமுகப்படுத்துவது ஒரு நல்ல நூலை மட்டுமல்ல, அதன் மூலம் மெய்யான தேவனிடம் வழி நடத்தும் ஒரு உன்னதமான சுவிசேஷ ஊழியத்தையே செய்கின்றீர்கள். இந்த புத்தகத்தை படித்து ஒருவர் மனம் திரும்பினால், மனந்திரும்புகின்ற ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்ற வேத வாக்கின்படி, பரலோகமே மகிழும். இதனால் பரலோகத்தில் உங்களின் பலன் மிகுதியாக இருக்கும் என்பது திண்ணம்.

இந்த நூலை திறந்த மனத்துடன் படித்து, தள்ள வேண்டியவைகளைத் தள்ளி, கொள்ள வேண்டியவைகளைக் கொண்டு மெய்ப்பொருளைக் கண்டு தெளிந்து ஏற்றுக்கொண்டு இம்மையிலும் மறுமையிலும் பரமானந்தத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு — *திருக்குறள் 355*

பொய்ப் பொருளை விட்டுப் புலமறிய வொண்ணாத
மெய்ப்பொருளை நாளும் விருப்புற்று போற்றீரே
– இடைக்காட்டுச் சித்தர்
பலரோடு கிளத்தல் – 54

சாக்ரமேண்ட்டோ, USA — பரம்பொருளால் ஆட்கொள்ளப்பட்ட அடிமை
10.06.2007 — எம். கருணாகரன்

அகத்தியர் அருளிய முப்பது பாடல்கள்

கடவுளைக் காண முயன்றவர்களை பக்தர்கள் என்றும், கண்டு தெளிந்தவர்களை சித்தர்கள் என்றும் தேவாரம் வேறு பிரித்துக் கூறும். அனுபூதி ஞானம் பெற்றவர்களை மிஸ்ட்டிக்ஸ் என்ற ஆங்கிலச் சொல் குறிக்கும். சித்தர் என்ற சொல்லும் அப்பொருளிலேயே வழங்கக் காண்கிறோம். சித்தர்கள் எல்லா சமயத்திற்கும் அப்பாற்ப்பட்ட சர்வ சமய சமரச சன்மார்க்கத்தினர் என டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் கூறுவார்.

சித்தர்களின் தொகை பதினெட்டு என்றும், அவர்கள் அகத்தியர், போகர், கைலாயநாதர், கோரக்கர், திருமூலர், சட்டைமுனி, கொங்கணர், கூண் கண்ணர், இடைக்காடர், நந்தீஸ்வரர், புண்ணாக்கீசர், உரோமரிஷி, மச்சமுனி, கூர்மமுனி, வாசமுனி, பிரமமுனி, சுந்தரனார் என்று சித்தர் துதிப்பாடல் ஒன்று கூறுகின்றது. இவர்களை அல்லாமல் கருவூரார், புலத்தியர், புகண்டர், இராமதேவர், தன்வந்திரி, கபிலர் முதலானோரையும் சித்தர்களில் அடக்கி கூறுவர். சித்தர்களுக்குள் முதலிடம் வகித்தவர் அகத்திய முனிவர் ஆவார்.

நான்கு வேதங்கள், வேதங்களிலிருந்து தோன்றியவை என அறியப்படும் ஆறு சாத்திரங்கள், பதிணெண் புராணங்கள், நான்கு மதங்களிலிருந்து தோன்றிய சாத்திரங்கள், இதிகாசங்கள் இன்னும் மற்ற சாத்திரங்கள், ஏனைய பதினேழு சித்தருடைய நூல்கள், ஒழுக்க நூல்கள், வடமொழி என எல்லாவற்றையும் நன்கு கற்றுத் தேர்ந்த அகத்தியர், இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த வேதாகமத்தையும், தமிழகத்திற்கு கி.பி. 52ல் வந்த இயேசு கிறிஸ்துவின் சீடரான புனித தாமஸ் மூலம் பரவிய நற்செய்தியின் மூலம் முதல் நூற்றாண்டை ஒட்டி தோன்றிய பல கிறிஸ்தவ நூல்களையும் அலசி ஆராய்ந்து, இயேசு கிறிஸ்து ஒருவரே மெய்யான தேவன் என்பதை உணர்ந்து, திருவருள் வயப்பட்டு, அவரால் ஆட்கொள்ளப்பட்டு, ஞானம் பெற்று, தான் பெற்ற பேரின்ப ஞானத்தை 'கடுகைத்துளைத்து தேழ் கடலைப் புகட்டி' என ஔவைக் கிழவி பாடியதுபோல் பரம்பொருளான இறைவனே அவரிடம் உரைத்தபடி முப்பதே பாடல்களில் சுருக்கிப் பாடியுள்ளார்.

இந்த முப்பது பாடல்களுமே ஆழத்தில் சமுத்திரங்கள், சுவைப்பதில் தேனமுது, நமது அறிவுக் கண்களை திறப்பவைகள், மூட நம்பிக்கைகளை, விக்கிரஹ ஆராதனையை சம்மட்டியாக ஈவு இரக்கமின்றி தாக்குபவைகள். இப்பாடல்களைப் படிக்கப்படிக்க, அவைகளை சிந்திக்க சிந்திக்க மெய்யறிவு விரிந்து கொண்டே போகும். அவர் பாடல்களில் ஒரு தனி நடையை, எளிமையை, எழிலை, ஒரு இசையை, ஒரு துறவை காணமுடியும். அதில் ஆரவாரம் இல்லை, அச்சமில்லை, அருளும் அடக்கமும் அமைதியுமே நிலை கொண்டுள்ளது. எந்த நோக்கத்திற்காக இந்த நூல் எழுதப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறத்தக்க போதுமான அளவாக இருபது பாடல்களை மட்டுமே தேர்தெடுத்து அப்

பாடல்களுக்கு விளக்கவுரையும், அந்த விளக்கத்திற்கு ஆதாரமாக சித்தர்களின் பாடல்களில் சிலவற்றை மாத்திரமே இங்கு எடுத்து எழுதப்பட்டுள்ளது.

திறந்த மனதுடன், ஒரு ஜெபத்தோடு, ஒரு பயபக்தியோடு சித்தர்களின் பாடல்களையும், அதற்குரிய விளக்கங்களையும் படியுங்கள். நம்மையும், இந்த வானத்தையும் பூமியையும், அதிலுள்ள சகல ஜீவராசிகளையும் படைத்து, காத்து, போஷித்து வரும் சர்வவல்ல தேவனை இப்போது உங்களுக்கு முன்பாக காணப்போகின்றீர்கள். அந்த மெய்ப்பொருளைக் கண்டு உணர்ந்து அதன் தூய ஒளியில் உங்களை நீங்கள் கண்டு கொண்டு, கடந்ததை மறந்து, பரம்பொருளை பற்றிக் கொள்ளுங்கள். சர்வ வல்ல சிருஷ்டிகரின் பலத்த கரம் உங்களை ஆசிர்வதிப்பதாக.

பாடல் 1 : நாலு வேதங்களின் மயக்கம்

"பாரப்பா பூரணத்தின் மனதை யொட்டி,
பரப்பிரம நாதமது சிவத்தில் சேர்த்து

தேரப்பா சக்தியையும் சாம்ப லாக்கி,
சிவசிவா என்ற பொருள் கைக்குள்ளாக்கி,

போரப்பா நால்வேத மயக்க மாக்கி,
பூமியிலே மானிடரை மோசம் போக்கி,

வேரப்பா சித்தரும் பூரணம தாக்கி,
வேடிக்கை போல்கட்டி விடுத்தார்தானே"

கருத்துரை

பரிபூரண பரப்பிரம்மமான முழு முதற் கடவுளின் குணம், தெய்வத்தன்மையோடு இசைந்து போவது போல சிவனுக்கு அமைத்து அவரையே பரப்பிரம்மம் என்பது போல ஆக்கி, சத்தியத்தை சாம்பலாக்கி அழித்துப் போட்டதை ஆராய்ந்து அறிந்து கொள். ரிக், யசூர், சாம, அதர்வண வேதங்களை வேடிக்கை போல கதை கட்டி எழுதி இந்த பூமியின் மக்களை தந்திரமாய் மயக்கி மோசம் போக்கி விட்டனர். இந்த மோசத்தை உணர்ந்த சித்தர்கள் மெய்யான கடவுளை இவ்வையகத்திற்கு அறிவிக்கும் பொருட்டு தனித்து வேறுபட்டு நிற்கின்றனர்.

விளக்க உரை

எல்லாவற்றிற்கும் மூலகாரணராகிய முழு முதற் கடவுளாகிய உண்மையான பரப்பிரம்மத்தைப் பற்றி வேதங்களில் சில குறிப்புகள் உள்ளன. ஆனால் பின்னர் அதை மாற்றி சிவனை எல்லா தெய்வாம்ச குணங்களோடும் கற்பனையில் உருவாக்கி பரப்பிரம்மமாக ஆக்கிவிட்டனர். இது பற்றி வடமொழியில் புலமை

மிக்கவரும், மகாகவியுமான எ.ஆ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் கூறியுள்ள கருத்தை காண்போமா?

ரிக் வேத காலத்தில் இப்போது இருக்கும் சிவன், விஷ்ணு இல்லவே இல்லை

சிவன் என்று ஒரு கடவுள் இருந்ததற்கு இந்துமத வேத ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று பல நூல்களை ஆராய்ந்து பார்த்து தமது நூலில் மகாகவி கிருஷ்ணபிள்ளை அவர்கள் கூறுகின்றார்.

உண்மையிலேயே இப்பொழுது உள்ள சிவன் ஒரு கடவுள் என்று சொல்வதற்கு 3000 ஆண்டுகளாக இந்து மதத்திற்கு ஆதாரமாய் கருதப்படுகின்ற நான்கு வேதங்களாகிய ரிக், யஜீர், சாம, அதர்வண வேதங்களில் எவ்வித ஆதாரமுமே இல்லை. அவைகளில் சிவனைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. அப்பொழுது சோம சூரியாக்கினி, இந்திரன் மித்திரன், வருணன் முதலிய திக்குபாலகர்களும், அஷ்டவசுக்களுமே விசேஷித்த தேவர்களாக இருந்தார்கள். ருத்திரன் என்ற பெயர் வேதத்தில் இடையிடையே ஆங்காங்கே மாத்திரம் வழங்கப்படுகிறது, இந்த ருத்திரனுக்கும் தற்போது சிவ பக்தர்கள் வணங்கும் சிவனையும் ஒப்புநோக்கும் போது இரண்டுக்கும் மிகுந்த வித்தியாசங்கள் இருக்கின்றன. எப்படியெனில் சிவபக்தர்கள் சிவனே எல்லாத் தேவர்களிலும் பிரதான தேவன் என்றும், பிரம்மா, விஷ்ணு முதலான தேவர்களும், சகல லோகங்களும் சிவனுக்குள் அடக்கம் என்றும் கூறுவர்.

ஆனால் நான்கு வேதங்களிலும் ருத்திரன் ஒரு பிரதான தேவன் அல்ல, ருத்திரன் ரிக்வேத கால நானாவித தேவர்களுக்கும் ஒத்தவரே அல்லாமல் ஒரு பெரிய தேவன் அல்லன் என்பது கண் கூடாக விளங்கும். ருத்திரன் மருந்து, காற்றுகளுக்கு தகப்பன் என்றும், அக்கினியின் ஊழியன், ஒரு தானாபதி என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. சில சமயங்களில் அவனை தயவுள்ளவராகவும், சில சமயங்களில் முற்கோபமுள்ளவராகவும், முகாந்திரமில்லாமல் மனிதரைக் கொல்லுகின்றவராகவுமே வேதத்தில் காட்டப்பட்டு இருக்கிறது. வேதத்தை எழுதிய ரிஷிகளும் அக்காலத்து இந்துக்களும் ருத்திரனை இந்திரனுக்கு சமமானவர் என்று கூட எண்ணியது இல்லை.

விஷ்ணு, ருத்திரன் என்ற பெயர்கள் முக்கியமானவைகள் அல்ல என்பது ரிக் வேத முதலாம் அஷ்டகத்திலுள்ள 121 சுலோகங்களில் இந்திரனுக்கு 45ம், அக்கினிக்கு 37ம், மருந்துக்கு 12ம், உதயத்துக்கு 4ம், ருத்திரனுக்கு 2ம், மற்ற சுலோகங்கள் அனைத்தும் வேறு சில சிறு தேவர்களுக்குமே கூறப்பட்டு இருக்கிறது என்பதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். அதில் விஷ்ணுவுக்கென தனியாக அஷ்டகத்தில் ஒரு சுலோகம் கூட இல்லை என மகாகவி கூறியுள்ளார்.

இந்த கருத்தை ந.சி. கந்தையாபிள்ளை அவர்களும் தமது 'இந்து சமய வரலாறு' என்ற நூலில் தமிழர் சமயம் ஆரியர்களால் எப்படி நான்கு வேதங்களின்

மயக்கமாயிற்று என்றும், நான்கு வேதத்தில் காணப்படும் ருத்திரனாகிய புயற் கடவுளை பிரித்தெடுத்து அதற்கு சிவனுக்குரிய தொழிலைக் கொடுத்து சிவனாகக் கொண்டார்கள் எனவும் வரலாற்று வழியே மிகத் தெளிவாக அறிவிக்கின்றார்.

அயல் நாட்டவரான ஆரியர்களால் கொண்டுவரப்பட்டு, புகுத்தப்பட்ட நான்கு வேதங்களும், சொந்த வழிபாடும் தத்தவ ஞானமும் உடையவர்களாக இருந்த திராவிடத் தமிழரிடையே பரவி அவர்களுடைய சைவ மதக் கோட்பாடுகள் சிறிது சிறிதாக மாறி ஆரிய செல்வாக்குக்கு உட்படுத்தப்பட்டது. ஆரிய வேதங்களின் செல்வாக்கு எப்படி திராவிட இன மக்களின் சமய, ஆன்மீக, சமூக வாழ்வை முழுமையாக மாற்றி வெறுமையாக்கியது எனவும், இவற்றால் மக்களுக்கு எவ்வித முடிவான நல்ல பயனும் கிட்டாமல் ஒரு குழப்பத்தையும், மயக்கத்தையும், முரண்பாடுகளையும், பேதங்களையுமே உருவாக்கி மக்களை மோசம் போக்கியது எனவும், அவற்றை சார்ந்து தோன்றிய சமயங்கள், தெய்வங்கள், தத்துவங்கள் அனைத்துமே நால்வேத மயக்கமாக உள்ளன என அகத்தியர் இப்பாடலில் கூறுகிறார்.

சுத்த சிவனைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட திரு. வி. கல்யாண சுந்தரனார் உண்மை நிலை உணர்ந்து அதுவரை அப்படி வழிபட்டதற்கு மனங்கசந்து பாழ் கடவுளின் உண்மை நிலை உணர்ந்தேனே எனப் பாடுகின்றார். கடைசியில் ‘‘ஒரு பெயரும் ஒன்று மில்லா உனையுஞ் சிவமென்றே உரைத்து விட்டார் புலவரந்நாள் ஓதுகின்றேன் அதையே’’ என துணிந்து கூறிவிட்டார்.

சித்தர்களில் ஒருவரான திருமூலர் தமது திருமந்திரத்தில் சுத்த சிவம் யார் என்று வரையறுத்துக் கூறும் பாடலின் பொருள் மாத்திரம் ஈண்டு கீழே தரப்பட்டுள்ளது.

‘‘எல்லா உலகங்களுக்கும் அப்பாற்பட்டவராகவும், எங்கும் நிறைந்திருப்பவராகவும், நல்லார் உள்ளங்களில் அருள் பொழிபவராகவும், மனிதர் எல்லாம் ஈடேற்றம் அடைய இவ்வுலகில் தோன்றி அருள்பாலித்ததாலும் அந்த சொற்களால் விவரிக்க இயலாத சற்குருவே சுத்த சிவம்’’ ஆக இருக்க முடியும் என திருமூலர் கூறுகிறார்.

சுத்த சிவத்தைப் பற்றி கூறும்போது அசுத்த சிவத்தையும் இனம் கண்டுகொள்ள வேண்டுமே. சு. நா. இரத்தினர் இதுபற்றி கூறியுள்ள செய்திகளையும் காண்க.

‘‘சுத்த சிவம் என்னும் போது, அசுத்த சிவம்
உண்டென்பதும் அறிய வேண்டும்

கொங்கண மகரிஷி கூறியதாவது: கடவுளுக்குப்
பெண்டேது? பிள்ளையேது? காம குணலிலை

முதலானதேது? கடவுளுக்கு பகடி சீட்டுத்
தாயமேது? காடுகளில் வேட்டை கட்டுத்

திரிவதேது? கடவுளுக்குக் காமிகளின்
தொழிலேயில்லை, காருண்யத் தொழில்

ஒன்றே கடவுள் பாரம். தெய்வகுண
மற்ற தீயோனை கடவுள் எனச் சொல்வது
பாவமும் அறியாமையும் ஆகும்"

இதைப் பற்றி இன்னும் தெளிவாக அறிய வேண்டுமானால் நமது முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் எழுதிய "Hindu View of Life" என்ற புத்தகத்தையும், சர். சார்லஸ் எலியட் எழுதிய "Hinduism and Buddhism" என்ற புத்தகத்தையும் படித்தால் விளங்கும்.

திருக்குறள் ஒரு கிறிஸ்தவ நூல்

கி.பி. 52ல் தமிழகத்திற்கு வந்த இயேசு கிறிஸ்துவின் சீடரான புனித தாமஸ் மூலமாக இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நற்செய்தி தமிழகத்தில் வேரூன்றியதினால் அதிகமான தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள் அப்பொழுது தோன்றின என்றும், கிறிஸ்தவத்தின் செல்வாக்கு பிற இலக்கியங்களிலும் காணப்படலாயிற்று எனவும், அக்காலத்திலே தான் திருக்குறள் இயற்றிய திருவள்ளுவரும் தாமசை சந்தித்தார் என்ற செய்தியும், இதனால் கிறிஸ்தவத்தின் செல்வாக்கு திருக்குறளில் அதிக அளவில் இருப்பதையும் ஆராய்ந்து அறிந்து பல ஆராய்ச்சியாளர்கள் இதனை ஐயந்திரிபுர நிரூபித்துள்ளனர்.

இவைகளை எந்த அறிஞருமே மறுத்துக் கூற முடியாத அளவு ஒப்பு நோக்கு ஆராய்ச்சிகளின் ஆதாரங்களையும், முடிவையும் செல்வி காமாட்சி சீனிவாசன், டாக்டர் மு. தெய்வ நாயகம், மயிலை பேராயர் டாக்டர் அருளப்பா முதலானோர் பல ஆராய்ச்சி நூல்களில் எழுதியுள்ளனர். புனித தாமஸ் அவர்களால் அறிவிக்கப்பட்ட கிறிஸ்துவின் நற்செய்தியின் செல்வாக்குடன் உருவான பல சமய இலக்கியங்களையும், நூல்களையும் ஆரியர்களும், கிறிஸ்தவத்தை எதிர்த்தவர்களும் அழித்துப் போட்டனர் என பல வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

கிறிஸ்தவம் கி.பி. முதல் நூற்றாண்டிலேயே இந்தியாவில் வேரூன்றி இருந்தது

கிறிஸ்தவம் ஒரு வெளிநாட்டு மார்க்கமல்ல. அது ஆசியாவில் பிறந்தது, இந்தியாவில் முதல் நூற்றாண்டிலேயே எவ்வளவு வேரூன்றி இருந்தது என்பதை கீழே காணலாம்.

பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவரின் 'டிஸ்கவரி ஆப் இந்தியா' என்ற நூலில் கிறிஸ்தவம் கி.பி. முதல் நூற்றாண்டிலேயே இந்தியாவிற்கு வந்தது எனவும், கிறிஸ்தவர்களும் மற்றவர்களைப் போல நம் நாட்டின் ஒரு பங்காவர் எனவும் எழுதியுள்ளார். புகழ் பெற்ற உலக வரலாற்று ஆசிரியர்களான எச். ஜீ. வெல்ஸ்,

ஆர்னால்டு டாயன்பீ முதலானோர் கிறிஸ்தவம் முதல் நூற்றாண்டிலேயே தமிழகத்திற்கு வந்திருப்பதற்கான பல ஆதாரங்களைத் தந்துள்ளனர். ப. நாகம் ஐயர் என்பவர் 1906 ஆம் வருடத்தின் 'திருவாங்கூர் ஸ்டேட் மேனுவலில்' மலபாரில் புனித தாமஸ் செய்த ஊழியங்களைக் குறித்து எழுதும் போது பல நம்பூதிரி குடும்பங்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்ததை குறிப்பிட்டுள்ளார்.

பிளினி தமது 'நேச்சுரல் ஹிஸ்டரி' என்னும் நூலிலும், தாலமி என்பவர் தமது 'ஜியோகிரபி' என்னும் நூலிலும் தென் இந்தியாவில் யூதர்கள் பலர் குடியேறி இருந்ததைக் குறித்தும், அவர்களின் வாணிபப் பெருக்கம் பற்றியும் எழுதியுள்ளனர். கி.பி. 1498 ல் வாஸ்கோட காமா முதல் முறையாக இந்தியா வந்த போது கள்ளிக்கோட்டையில் (காலிகட்) இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் அங்கு இருந்தனர் என எழுதியுள்ளார்.

புனித தாமஸ் தமிழக கடற்கரையை ஒட்டிய இடங்களில் ஏழு திருச்சபைகளை ஏற்படுத்தினார் என்றும், சோழ மண்டல கடற்கரை வழியாக பயணம் செய்து நற்செய்தியை அறிவித்துக் கொண்டே சென்னை வந்தார் என்றும், கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்து பலரை கிறிஸ்தவர்களாக ஆக்குவதைக் கண்டு இங்கிருந்த கோயில் பூசாரிகள் கோபம் கொண்டு கி.பி. 72 ஜீலை 3ஆம் நாள் தற்போது செயிண்ட் தாமஸ் மவுண்ட் என்று சொல்லப்படும் சின்னமலைப் பகுதியில் அவரைக் கொன்று போட்டனர் என எஸ். என். வால்டு எழுதியுள்ள 'செயிண்ட் தாமஸ் தி அப்போஸ்தல் ஆப் இந்தியா' என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்.

'இந்துமத சங்கிரகம்' என்னும் தமது நூலில் ஜே. எஸ். மாசிலாமணி என்பவர் 'ஐரோப்பாவில் பெரும்பாகம் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருந்து, தற்காலத்தில் அதிக நாகரிகம் பெற்றவர்களென்று எண்ணப்படுகிற ஆங்கிலேயர், ஜெர்மனியர் முதலியோரெல்லாம் சாக்கினி தேசக்காடுகளில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்த காலத்திலேயே இந்தியாவில் கிறிஸ்தவ மதம் ஸ்தாபிதமாகி விருத்தியடைந்து வந்தது' என எழுதியுள்ளார்.

கி.பி. 522ல் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த கோஸ்மோஸ் (Cosmos) என்னும் அலெக்சாந்திரியா நாட்டுப் பயணி சிரியன் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும் 5,70,000 பேர் கொண்ட ஒரு கிறிஸ்தவ சமுதாயத்தை சந்தித்த செய்தியை கூறியுள்ளார் என ஹேட்லண்டு ரோஜர் தம்முடைய 'கிறிஸ்டியானிடி இஸ் இண்டியன்' (கிறிஸ்தவம் இந்தியாவினுடையது) என்னும் நூலில் எழுதியுள்ளார்.

இது போன்று இன்னும் அனேக வரலாற்று ஆசிரியர்கள் மறுக்க முடியாத பல வரலாற்று சான்றுகளோடு கிறிஸ்தவம் இந்தியாவில் முதல் நூற்றாண்டிலேயே தோன்றி வேரூன்றி நிலைத்து இருந்தது என நிரூபித்துள்ளனர். அவைகள் அனைத்தையும் இங்கு எடுத்துரைப்பதென்றால் அதுவே ஒரு பெரிய

நூலாகிவிடும். ஆதலின் இதோடு நிறுத்துகிறேன். கிறிஸ்தவமும், இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த வேதாகமத்தின் நற்செய்தியும் மிகவும் பரவலாக இந்தியாவில் முதல் நூற்றாண்டிலேலே பரவி இருந்தமையால், பரிசுத்த நற்செய்தியின் தாக்கம், செல்வாக்குடன் பல நூல்கள் உருவானது என்பது நம்புதற்குரியது. அப்படிப்பட்ட அனேக நூல்கள் கிறிஸ்தவத்தை எதிர்த்தவர்களால் அழிக்கப்பட்டது என்பதும் வரலாற்று உண்மை.

பாடல் 2 : ஆறு லட்சம் கிரந்தங்களை 30க்குள் அடக்கிக் கொடுத்துள்ளேன்

"ஆச்சப்பா புலத்தியனே நன்றாய்க் கேளு;
ஆறு லட்சம் கிரந்தமதை அருளிச் செய்தேன்;

பேச்சப்பா பூரணத்தின் மூன்று லட்சம்
பேசினேன் ஆயிரத்துள் அடக்கிப் போட்டேன்;

காய்ச்சப்பா ஆயிரத்தை ஐந்நூ றாக்கிக்
கட்டினேன் ஐந்நூற்றை நூற்றுக்குள்ளே

மூச்சப்பா நூறதுவை ஐம்பதாக்கி
முகித்திட்டேன் முப்பதுக்குள் முக்கியத்தானே!"

கருத்துரை

ஞானமுள்ளவனே! நான் கூறுவதை நன்றாகக் கேளு. நான் ஆறு லட்சம் கிரந்தங்களை முதலில் எழுதினேன். அவைகளைப் பூரணப்படுத்த ஆராய்ந்த போது அவைகளில் மூன்று லட்சங்கள் வெறும் பேச்சு என உணர்ந்தேன். ஆகவே அந்த மூன்று லட்சத்தை 1000 பாடல்களில் அடக்கிப் போட்டேன். அவைகளையும் ஆழமாய் ஆராய்ந்து 500 ஆக ஆக்கினேன். அவற்றையும் நுணுகி ஆராய்ந்து நூறாக்கினேன். நூறையும் ஐம்பதாக்கினேன். முடிவில் முக்கியம் கருதி அவைகளை முப்பது பாடல்களுக்குள் அடக்கிவிட்டேன் என அகத்தியர் கூறுகிறார்.

பாடல் 3 : பரம் பொருளின் ஆறு குணங்களும், பத்து நெறிகளும்

"கருதினார் இப்படியே சொன்னேன் அப்பா!
கயிலாய இடம் எங்கே? கருவூர் எங்கே?

பருதியடா உலகமது பணியின் வாழ்வு;
பராபரனார் ஆறு சாயம் பகர்ந்த சோதி!

ஒருவருமே நிகராத வஸ்து அப்பா!
ஓகோகோ மயங்காதே; ஊன்றிப் பார்த்து,

திரிபொருளை அறிவினால் உணர்ந்து பார்த்து,
தெரிசிப்பாய் நெறி பத்தும் தெரிகிப்பாயே!"

கருத்துரை

அவர்கள் எண்ணியபடியே நான் கூறியுள்ளேன் அப்பா! கயிலாயத்தின் இடம் எங்கே இருக்கிறது? கருவூர் எங்கே இருக்கிறது? இந்த பூமியில் மனிதரின் வாழ்வு சூரியன் கண்ட பனியைப் போன்றது. பராபரனாகிய கடவுள் ஆறு குளங்களைக் கொண்ட ஜோதி. எப்பொருளுமே அவருக்கு ஒப்பாக முடியாது. ஆகவே மயங்காதே! நன்கு கவனித்து முப்பொருளை (பிதா, குமாரனாகிய இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவி) அறிந்து உணர்ந்து கொள். பத்து நெறிகளை (பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவன் கொடுத்த பத்து கட்டளைகள்) நீ காண்பாய்.

விளக்கவுரை : புல்லுக்கு ஒப்பாகும் மனித வாழ்வு

இப்பாடலில் உலக வாழ்வின் நிலையாமையையும், உண்மையான பரம்பொருளின் பண்புகளையும், கடவுள் திரியேக தேவனாக இருக்கிறார் என்றும், அவர் மனுக்குலம் கைக் கொள்ள வேண்டிக் கொடுத்த பத்து கட்டளைகளையும் தெரிவிக்கின்றார்.

அகத்தியர் இப்பாடலில் கைலாயமும், கருவூரும் இருக்கும் இடத்தை எண்ணிப் பார்க்கக் கூறுகின்றார். கயிலாயம் என்பது சொர்க்கம் அல்லது பரலோகம் அல்ல. அது இமயமலையில் சீனர்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பகுதி. அந்த மலைக்கு செல்வதினாலோ, வேறு எந்த மலைக்கும் செல்வதினாலோ பரலோகம் செல்ல முடியாது. குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் திறக்கப்படும் சில கோயில் வாசற் கதவின் வழியாவும் சொர்க்க வாசல் திறக்கப்படுவதில்லை. பரலோகம் செல்ல பரம்பொருளை சரியாக உணர்ந்து கொள்ள வேண்டும். மனித வாழ்வு சூரியனுடைய கதிர்கள் பட்டு மறையும் காலைப் பனிபோல, புல்லைப் போல இருக்கிறது. ஆகவே சீக்கிரம் மெய்யான பரம் பொருளைத் தெரிந்துகொள் என்கிறார். மனித வாழ்வு நிலையற்றது என்பதை வேதம் தெளிவாக கீழ்கண்ட வசனங்களில் தெரிவிக்கின்றது.

> *'மனித நாட்கள் புல்லுக்கு ஒப்பாக இருக்கின்றன, வெளியின் பூவைப் போல் பூக்கிறான்' - சங்கீதம் 103 : 15*
>
> *'மாம்சமெல்லாம் (மனிதரெல்லாம்) புல்லைப் போலவும் மனிதனுடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவும் இருக்கிறது' - 1 பேதுரு 1 : 24*

பராபரனாகிய கடவுள் ஆறு குணங்களையுடைய ஜோதியாக இருக்கிறார் என அகத்தியர் கூறுகின்றார்.

கடவுளின் ஆறு குணங்கள்

(1) சுயம்பு – தாமே எல்லாவற்றையும் செய்யவல்லவர் (2) அநாதி – தாமே

முதல்வராய் என்றென்றும் இருப்பவர் (3) அரூபி – ஐம்பொறி கொண்ட உருவில்லாதவர் (4) அதிகுணர் – நிலை பேருடைய எல்லா நன்மைகளையும் உடையவர் (5) சர்வ வியாபி – எங்கும் நிறைந்திருப்பவர் (6) ஆதி–தாமே தாமாய் எல்லாவற்றிற்கும் ஆதிகாரணராய் இருப்பவர் என கடவுளின் ஆறு குணங்களை இரட்சண்ய யாத்திரீகத்தில் மகாகவி கிருஷ்ணபிள்ளையும், பல சங்ககாலப் பாடல்களும் கூறுகின்றன.

இந்த ஆறு குணங்களை எல்லாம் வல்லவர் (Omnipotent), எல்லாம் அறிந்தவர் (Omniscient), எங்கும் நிறைந்திருப்பவர் (Omnipresent) என முக்குணங்களாயும் கூறுவர்.

இதையே எண் குணமாக்கியும் கூறுவர் (1) தன் வயத்தான் ஆகுதல் (2) தூய உடம்பினன் ஆகுதல் (3) இயற்கை உணர்வினனாதல் (4) முற்றுமுணர்தல் (5) முடிவில்லா ஆற்றலுடைமை (6) இயல்பாகவே பாசங்களிலிருந்து விலகுதல் (7) பேரருளுடமை (8) வரம்பில்லா இன்பமுடைமை என ஒரு நிகண்டுப் பாடல் கூறுகிறது.

திருவள்ளுவரும் எண் குணம் பற்றி கூறுகின்றார்:

‘கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை’

மேற்கண்ட குணங்களை உடையவரே வானுலகும், எவ்வுலகும் போற்றும் மெய்க்கடவுள் ஆவார்.

இறைவன் ஒளியாக இருக்கிறார்

இறைவன் சோதியாய், ஒளியாய், ஒளிமயமாய் இருக்கிறார் என அகத்தியர் கூறுகிறார். அதை வேதமும் உறுதிப்படுத்துகின்றது.

‘ஒளியாக இருந்தவர் உலகத்துக்கு ஒளியாக (இயேசு கிறிஸ்துவாக) வந்தார். அவருடைய வாழ்வு மனிதருக்கு ஒளியாக இருந்தது’ – *யோவான் 1 : 4*

‘என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் எவனும் இருளில் இராதபடிக்கு நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்’
– *யோவான் 12 : 46*

‘எந்த மனிதரையும் பிரகாசிப்பிக்கின்ற ஒளியாக தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து இருக்கிறார்’
– *யோவான் 1 : 9*

எனப் பல வேத வசனங்கள் கூறுகின்றன.

இராமலிங்க அடிகளும் சிலை வழிபாட்டைக் கடந்து ‘அருட்பெருஞ்சோதியே தனிப்பெருங்கருணை!’ என இறைவனை ஒளிமயமாகவே கண்டார்.

இருளின் பிடியிலிருந்து நம்மை நிலையாக விடுவித்துக் காக்க வல்லமையுள்ள தேவனை மகாகவி கிருஷ்ணபிள்ளையும் 'மெய் ஒளியே! தனிச் சுடரே! வித்தகமே! வேதத்தின் விழுப்பொருளே!' எனப் பாடி மகிழ்கிறார். பட்டினத்தாரும் கடவுள் ஒளியாக விளங்குவதை சிலாகித்துப் பாடுகின்றார்.

'எட்டுத்திசையும் பதினாறு கோணமும், எங்கும் ஒன்றாய்
முட்டித்தும்பி முளைத்தோங்கு சோதியை,
மூடர் எல்லாம் கட்டிச் சுருட்டித் தம் கக்கத்தில் வைப்பர்;
கருத்தில் வையார்; பட்டப் பகலை இரவென்று கூறிடும் பாதகரே'

'உள்ளிட்ட கல்லையும், ஒப்பிட்ட சாந்தையும், ஊத்தையுறப்
புளியிட்ட செம்பையும், போற்றுகிலேன்; உயர் பொன் எனவே
ஒளியிட்ட தாள் இரண்டுள்ளே இருத்துவது உண்மையென்று
வெளியிட்டு அடைத்துவைத்தேன்; இனிமேல் ஒன்றும்
வேண்டிலேனே'

அந்த ஒளியின் வேடத்தைத் தரித்துக்கொண்டு பல உருவிலும், பெயரிலும் தன்னையே தெய்வமாகக் காட்டி சாத்தான் மக்களை வஞ்சித்து வருகிறான். இதை–

'இருளை விரும்பி இருளில் வாழ்கின்றவர்களை ஒளியின்
தூதனுடைய வேடத்தை தரித்துக் கொண்டிருக்கும் சாத்தான்
பலவாறு வஞ்சித்து தன்வயப்படுத்திக் கொள்கிறான்'

என 2 கொரிந்தியர் 11 : 14 கூறுகிறது.

சர்வ லோகத்தையும் படைத்த சர்வ வல்ல தேவனை பாம்பு உருவிலும், பாம்பை அணிந்த உருவிலும், உண்டாக்கி அவைகளை வழிபட்டால் அது நிகரே இல்லாத சர்வேஸ்வரனை இழிபடுத்துவது ஆகாதா? நற்செய்திக் கவிமன்னர் வேத நாயக சாஸ்திரியார் மனம் நொந்து பாடும் பாடலைப் பாரீர்.

'பாம்பை அணிந்தவன் தேவனாமோ
பாம்பில் கிடந்தவன் தேவனாமோ
பாம்பில் கிடந்தவன் தேவனானால்
பாம்பாட்டியும் கூட தேவனாவான்
பாம்பாட்டி பாம்பு உனக்கு நன்மை செய்ததோ
பாம்பை அடித்துக் கொன்ற நீயே
பாம்பைப் பணிந்தா யென்று ஆடு பாம்பே!'

'பாம்பு உனக்கு மெய்யான தேவனானால்
பாம்பிருக்கும் புத்தல்லோ சொர்க்கமாச்சு
பாம்பு விஷந்தருமோ நன்மை தருமோ
பாராமற் பாராமல் மோசம் போறாய்!'

உலகத்தில் உள்ள மற்ற தெய்வக் கோட்பாடுகள் எல்லாம் மெய்ப்பொருளை மக்கள் கண்டுகொள்ளாதபடிக்கு வஞ்சிக்கவும் ஏமாற்றவும் ஒளியினுடைய தூதன் வேடத்தை தரித்துக் கொண்டு சாத்தான் தன் வஞ்சகமான தந்திரத்தினால் மெய்பொருளை மக்கள் கண்டு கொள்ளாதபடிக்கு பலவாறு ஏமாற்றி வருகிறான் என அகத்தியரும் இங்கு குறிப்பால் உணர்த்துகிறார்.

நிகரே இல்லாத சர்வேஸ்வரன்

கடவுளுக்கு நிகராக யாரையும், எதனையும், எப்பொழுதும் எங்கும் ஒப்பிட்டுக் கூற இயலாது. வேதம் இதை மிகத் தெளிவாக கூறுகின்றது.

> *'யாருக்கு என்னை சாயலும் சமமுமாக்கி யாருக்கு நான் ஒப்பாகும்படிக்கு என்னை ஒப்பிடுவீர்கள்' - ஏசாயா 46:5*
>
> *'இப்படியிருக்க தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள் ? எந்த சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்?' - ஏசாயா 40:18*
>
> *'கர்த்தாவே உமக்கு ஒப்பானவர் இல்லை. நீரே பெரியவர். உமது நாமமே வல்லமையில் பெரியது' - எரேமியா 10:6*

வேதம் கூறும் கடவுளின் இந்த தன்னிகரற்ற நிலையை திருவள்ளுவரும்

> *'தமக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்*
> *மனக்கவலை மாற்றல் அரிது'*

எனக் கூறியுள்ளார்.

'ஊர், பேர், காலம், இடம், வண்ணம், வடிவம், பால், பருவம் முதலிய வரையின்றி, எங்கும் நிறைந்து, எல்லார்க்கும் எல்லாவற்றிற்கும் பொதுவாய், எல்லாம் வல்லதாய், என்றும் மாறாதிருக்கும் பரம்பொருள்' என்று 'கடவுள் சமயம்' நூலில் முதறிஞரும், பெரும்புலவருமான ஞானமுத்து தேவநேயப் பாவாணர் அவர்கள் கூறியுள்ள அந்த மெய்ப்பொருளை பரமகுருவின் துணையோடு தெளிவாக ஆராய்ந்து கொள்ளுங்கள். நம்பிக்கை தெளிவின்மையால் கண்டதையும் தெய்வம் என்று எண்ணி மயங்கிவிட வேண்டாம் என்று அகத்தியர் எச்சரிக்கின்றார்.

திரியேக தேவனாக இருக்கும் மெய்ப்பொருள்

கடவுள் திரியேக தேவனாக இருக்கிறார். அவர் தந்தையாகி உலகைப் படைத்தார். பாவத்தில் விழுந்த தன் மக்களை மீட்க இயேசு கிறிஸ்துவில் மைந்தரானார். பின் பரிசுத்த ஆவியானவராக வந்து ஞானவரம் அருளி திரியேகக் கடவுளாக மனிதர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். அவர் திரியேகமாக வெளிப்பட்டாலும் அவர் ஏக வஸ்துவே. ஆதலின் தேவன் ஒருவரே அன்றி மூவர் அல்லர். மூவரும் ஒருவரில் ஒருவராக, சமநித்தியராக,

சரிசமானராக, ஒன்றாக, ஒருவராக இருக்கின்றனர். இதை இயேசு கிறிஸ்து 'என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்' என்கிறார். இதை வேதத்தின் திருவசனங்களும் தெளிவாய் நமக்கு கூறுகின்றன.

'பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர்: பிதா, வார்த்தை (குமாரன் இயேசு கிறிஸ்து), பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்' -1 யோவான் 5 : 7

'நீங்கள் புறப்பட்டுப் போய் சகல நாட்டவரையும் சீடராக்கி பிதா, குமாரன் (இயேசு கிறிஸ்து), பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து...' - மத்தேயு 28:19

'கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியானவருடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக' -2 கொரிந்தியர் 13 : 14

இரட்சணிய யாத்திரிகத்தில் மகாகவி கிருஷ்ணபிள்ளையும் இதனை இவ்வாறு பாடுகின்றார்.

'தந்தையாகி, உலகனைத்தும் தந்து;
மனுக்கள் தமைப் புரக்க

மைந்தன் ஆகிப், புனிதாவி வடிவாய்
ஞானவரம் அருளிப்

பந்தம் அற நின்று இலங்கும் திரியேக
பரமன் பதாம் புயத்தைச்

சிந்தை யாரத் தொழுது ஏத்திச்
சேரவாரும் செகத்தீரே!'

பாவத்திலிருந்து மீள பரம்பொருளின் பத்துக் கட்டளைகள்

கடவுள் மனிதனை மீட்க வகுத்த மீட்பின் திட்டத்தில் இரண்டு ஏற்பாடுகளை வகுத்தருளினார். முன்னது பழைய ஏற்பாடு, பின்னது புதிய ஏற்பாடு. பழைய ஏற்பாட்டில் மக்களை ஆண்டு வழி நடத்துவதற்கு கடவுள் வகுத்தருளிய பத்துக் கட்டளைகளே அகத்தியர் கூறும் பத்து நெறிகளாகும். இவைகள் வேதாகமத்தில் யாத்திராகமம் 20ல் 1 –20 வரை எழுதப்பட்டுள்ளது.

(1) என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

(2) மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.

(3) உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே

வழங்காதிருப்பாயாக. கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை தண்டியாமல் விடார்.

(4) ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசாரிக்க நினைப்பாயாக.

(5) உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.

(6) கொலை செய்யாதிருப்பாயாக.

(7) விபசாரம் செய்யாதிருப்பாயாக.

(8) களவு செய்யாதிருப்பாயாக.

(9) பிறருக்கு விரோதமாகப் பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக.

(10) பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக. பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையும், பின்னும் பிறனுக்குள்ள யாதென்றையும் இச்சியாதிருப்பாயாக.

பூர்வ காலத்தில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாகவும், பத்துக் கட்டளைகள் மூலமாயும் நமது பிதாக்களுக்கு வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் திருவுளம் பற்றி வெளிப்படுத்திய மெய்யான கடவுளாகிய பரம்பொருளை நாம் அறிந்து தெளிவு பெற வேண்டும் என்று அகத்தியர் இப்பாடலில் இரத்தினச் சுருக்கமாக கூறியுள்ளார்.

பாடல் 4 : நம்மைப் படைத்தவரை தேட வேண்டும்

"பிறிந்தவர்க்குப் பஞ்சபட்சி குருவால் கண்டு
பிறிக்கறியார் பொய்யெனவே பேசுவார்கள்;

அறிந்தவர்க்கு மோட்சமுண்டு படைத்தோன் தன்னை
அறியாதார் எரிநரகிலழிந்து போவார்;

வெறி பிடித்த சிவன், பெருமாள், பிரமாதானும்
மேலான தேவரல்ல; மனிதர் அப்பா!

அறிவடைந்து நமைப் படைத்தோன் தன்னைத் தேட
அப்பனே புத்தியுள்ளோர்க்கு அறிவித்தேனே!"

கருத்துரை

இறந்தவர்களுக்கு பஞ்சபட்சி சாஸ்திரம், குறிகேட்டல் போன்றவற்றை ஒரு குருவினிடத்தில் விசாரித்துக் கேட்டு அறிந்து கொண்டாலும் அதிலுள்ள

பொய்யையும் மெய்யையும் வேறுபடுத்தி அறியும் தகுதி இல்லாதவர்களுக்கு நான் சொல்வது பொய் என்றே படும். தன்னைப் படைத்த கடவுளை அறிந்தவனுக்கு மோட்சமுண்டு. அப்படி அறியாதவர்கள் எரி நரகத்தில் அழிந்து போவார்கள். சிவன், பெருமாள், பிரம்மா ஆகியோரெல்லாம் மேலான தேவர்கள் அல்லர். அவர்கள் வெறும் மனிதர்கள் அப்பா! நல்லறிவு பெற்று நம்மைப் படைத்த கடவுளைத் தேடுகிற புத்தியுள்ளவர்களுக்கு இதனை அறிவித்தேன்.

விளக்கவுரை : குறிகேட்டு படுகுழியில் விழாதே

இறந்தவர்களுக்கு குறி கேட்பது, திதி, கருமாதி, தெவசம் செய்வதெல்லாம் திராவிடர் கலாச்சாரம் அல்ல. அவைகள் ஆரியர்கள் கலாச்சாரம். செத்தவர்களுக்கு மணி அடித்தல், ஆத்துமா சாந்தியடைய ஜெபித்தல், கல்லறைத் திருவிழா நடத்துதல் எல்லாம் வேதாகமத்தில் சொல்லப்படாத போதனைகள். குறிபார்த்தலும், சோதிடம் பார்த்தலும் மெய்க்கடவுளை அறிவதற்கு துணை செய்யாது. இவைகள் சாத்தானின் செயல்களுக்கு உட்பட்டவை. போகரும் தமது போகர் ஏழாயிரம் 6ம் காண்டம் 255 பாடலில் சாத்திரம் பார்த்தலை சாடுகின்றார்.

'பேசியே வெகு கோடி மாந்தரெல்லாம்
பினாத்தினார் சாஸ்திரத்தின் குப்பை தன்னை

பூசிதங்கள் கொண்டல்லோ பகுடுகாட்டி
புகழுடனே சாஸ்திரத்தை மெய்போற் சொல்லி

ஊசிதமாந் தத்துவங்கள் தியான மார்க்கம்
உறுதியுடன் நாதாக்கள் சொன்னதில்லை

வாசித்து நால் வேத மாறு சாஸ்திரம்
வகையுடனே கதை கட்டி உரைத்திட்டாரே'

சாத்திரம் பார்த்தலை அகப்பேய்ச் சித்தரும் கண்டனம் செய்துள்ளார்.

'சாஸ்திர சூத்திரமும் - அகப்பேய்
சங்கற்ப மானதெல்லாம்
பார்த்திடலாகாதே - அகப்பேய்
பாழ்பலங் கண்டாயே'

குறிகேட்டல், சோதிடம், அஞ்சனம் பார்த்தல் இவற்றை திருவசனம் கடுமையாக கண்டிக்கிறது.

'யாதென்றையும் இரத்தத்துடன் புசிக்க வேண்டாம். குறி கேளாமலும் நாள் பாராமலும் இருப்பீர்களாக' - லேவியராகமம் 19 : 26

'தன் மகனையாவது, தன் மகளையாவது தீக்கடக்கப்

பண்ணுகிறவனும், குறி சொல்லுகிறவனும், நாள் பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறி கேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்க வேண்டாம். இப்படிப்பட்டவைகளை செய்கிற எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்' - உபாகமம் 18 : 10-12

சோதிடம் கிறிஸ்தவர்களுக்கு ஏற்றது அல்ல என்பதற்கு அந்தோணி பிஸ்டோன் என்பவர் தமது 'எ கிறிஸ்டியன் லுக்ஸ் அட் அஸ்ட்ராலஜி' என்ற நூலின் ஆய்வின் முடிவில் 'சோதிடத்தை எந்த விதத்தில் உபயோகப்படுத்தினாலும் அது பேயின் செல்வாக்கிற்கு வழி திறக்கும்' எனக் கூறியுள்ளார்.

அப்படி குறி, சோதிடம் பார்க்கும் மனமுள்ளவர்கள் தாம் கண்டறிந்து அறிவித்துள்ள பரம்பொருளைப் பற்றிய செய்தியினை பொய் எனக் கூறுவார்கள் என அகத்தியர் எச்சரிக்கிறார்.

அறிந்தவர்க்கு மோட்சமுண்டு: படைத்தோனை அறியாதார் எரி நரகத்தில் அழிந்து போவார்கள்

அகத்தியர் ஆராய்ந்து கூறிய திரிபொருளாம் திரியேக பரம் பொருளைத் தேடி அறிந்து வாழ்பவர்களுக்கு மோட்சம் உண்டு என்றும், அந்த மெய்யான கடவுளே மக்களைப் படைத்தவர் என்றும், அவரை அறிந்து வாழாதவர்கள் எரிகின்ற நரகத்தில் வீழ்ந்து அழிந்து போவார்கள் எனவும் உணர்த்துகிறார். வேதம் கூறும் திரு வசனங்களையும் ஒப்பு நோக்குக.

'ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பியவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்' - யோவான் 17 : 3

'அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ தேவனுடைய ஒரே பேரான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாய் இராதபடியினால் அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று' - யோவான் 3 : 18

'தேவனுக்கு பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள். அவர் நியாயத் தீர்ப்பு கொடுக்கும் வேளை வந்தது. வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்கள்' - வெளி. 14 : 7

சிவ வாக்கியர் கூறும் எச்சரிப்பையும் காண்க:

'அண்ணலாம் பரமசோதி அற்புத மறியாதாலே
கண்ணிலே கண்டதெல்லாங் கதி தருங்கடவுளென்று

மண்ணுள்ளோர் வணங்கினார்கள் வான்முறைப்படியிதென்ன
எண்ணியே நடந்து மோட்ச மிழந்தெரி நரகில் வீழ்வார்'

வள்ளுவப் பெருந்தகையும் இதை உறுதிப்படுத்துகின்றார்.

'பிறவிப் பெருங்கடலை நீந்துவார், நீந்தார்
இறைவனடி சேராதார்'

மும்மூர்த்திகளும் தேவரல்லர், மனிதர் அப்பா!

சிவன், பெருமாள், பிரம்மா முதலானோர் தேவரல்லர், மனிதரே என்பதை அகத்தியரோடு மற்ற சித்தர்கள் சிலரும் சிந்தனை செய்து கூறியிருக்கின்றார்கள்.

'மாலும் மனிதன் மலரோனும் தான் மனிதன்
ஆலமுண்ட கண்டன் அவன் மனிதன்-சிலமுடன்
உற்ற உணர்ந்த உகந்த பெரியார்
கற்று மரிந்தாரில்லை காண்' – ஔவை

'பல கலைகளோ துவகை நாலுந்தானும்
பண்ணியதோர் நால்வேதமாறு சாஸ்திரம்

அலையுடனே தத்துவங்கள் தொண்ணூற்றாலும்
அவைகளிலே பொய் களவு அதர்மஞ்சேரும்

மலையரசன் சிவன், பிரம்மா, விஷ்ணு தானும்
மாசில்லா நாதருட வழியுங்காணார்

நிலைபெருக மோட்சவழி காணாதாலே
நீதியற்ற மனிதரென்று நிகழ்த்தினோமே' – திருமூலர்

கடவுள் மனிதரைப் படைத்த வரலாற்றினை வேதம் தெளிவாகக் கூறுகின்றது.

'தேவன் தம்முடைய சாயலாக மனிதனைச் சிருஷ்டித்தார் அவனைத் தேவனுடைய சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்' -ஆதியாகமம் 1:26-28

'தேவனாகிய கர்த்தர் மனிதனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனிதன் ஜீவாத்துமாவானான்.' -ஆதியாகமம் 2 : 7

புத்தியுள்ள மக்கள் தங்களைப் படைத்த மெய்ப்பொருளைத் தேடி அறிவார்களாக என்கிறார் அகத்தியர்.

'ஆண்டவருடைய வார்த்தைக்ளைக் கேட்டு அவைகளின்படி செய்கிறவன் புத்தியுள்ளவன். துன்மார்க்கரில் ஒருவனும்

உணரான். ஞானவான்களோ உணர்ந்து கொள்வார்கள்' - தானியேல் 12 : 10

'கனம் பொருந்தியவனாக இருந்தும் அறிவில்லாத மனிதன் அழிந்து போகும் மிருகங்களுக்கு ஒப்பாக இருக்கிறான்' - சங்கீதம் 49 : 20

'தேடுங்கள் கண்டடைவீர்கள்' - மத்தேயு 7 : 7

'உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால் என்னைத் தேடுகையில் கண்டு பிடிப்பீர்கள்' - எரேமியா 29 : 13

மெய்ப்பொருளை கண்மூடித்தனமாகவோ, மடத்தனமாகவோ அல்ல. மனிதனுக்கு அவர் அருளிச்செய்த அறிவினால் அவரைத் தேடி அறிந்துகொள்ள வேண்டும் என்று பரமகுரு விரும்புகின்றார். எனவேதான் 'வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் நித்திய வாழ்வு உண்டென்று எண்ணுகிறீர்களே. என்னைக் குறித்து சாட்சி சொல்லுகிறவைகளும் அவைகளே' என யோவான் 5 : 39லும் கூறுகிறார். அவர் உண்டென்றும் அவர் நம்மைப் படைத்த மெய்யான தேவன் என்றும் புத்தியுள்ள மக்கள் அவரைத் தேடி கண்டடைவார்களாக என அகத்தியர் கூறுகிறார்.

பாடல் 5 : இதினாலெல்லாம் பரலோகம் போக இயலுமா?

"சங்கமதில் பரப்பிரம்மம் ஒன்றைப் போற்றி,
சகல பவம் தீர நன்மைதனையே சாற்றி,

துங்கமுறும் இலிங்கம் என்றும் பூசை செய்து
சுணை கெட்ட மாடப்பா சாம்பல் பூசி

எங்கணும் போய்ச் சிவ சிவ என்று அலைந்து,
ஏங்கி எரிநரக அலகை செய்யும் இடர் எண்ணாமல்

பொங்குதிரை கடல் மூழ்கித் தீட்டை பெற்றால்
புகழ்கிரியாம் கயிலாயம் போகலாமோ?"

கருத்துரை

பக்தர்கள் கூட்டமாக ஒன்று கூடி பரப்பிரம்மாகிய மெய்கடவுளையே வணங்குவதாக நம்பிக் கொண்டு, பாவங்கள் தொலைய தானதர்மங்கள் போன்ற நன்மைகளைச் செய்து இலிங்கத்தை பூசை செய்து திரிவது சுணை கெட்ட மாட்டின் நிலையாகும். எரி நரகத்திற்கென்று நியமிக்கப்பட்டு இருக்கும் சாத்தான் செய்யும் இடர்கள் இவைகள் என்று எண்ணாமல் உடம்பெல்லாம் சாம்பல் பூசி, சிவ சிவ என்று எங்கும் கூறிக்கொண்டு அலைந்து திரிந்து,

பொங்கும் அலைகளையுடைய கடலில் மூழ்கி தீட்சை பெற்று விட்டால் புகழ் மலையாம் கயிலாயம் சென்றடைய இயலுமா? இயலாது என்பதாம்.

விளக்கவுரை : பூஜை தான தர்மம் போக்காது பாவத்தை

பக்தர்கள் ஒன்று கூடி பல பெயர்களில் கூட்டமாக பிரப்பிரம்மமாகிய மெய்ப்பொருளையே போற்றி வழிபடுவதாக எண்ணிக்கொண்டு, சில நல்ல ஆன்மீக ஒழுக்க விஷயங்களை சொல்லுகின்ற, சில நல்ல காரியங்களையும் சில சமுதாயப் பணிகளையும் செய்கின்ற மனிதரையெல்லாம் தெய்வமாகவும், தெய்வப்பிறவிகளாகவும், அவதார புருஷர்களாகவும் ஆக்கி அவர்களையும், மனிதர்கள் உண்டாக்கின சிலைகளையும், காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட படங்களையும் பூஜிப்பதாலேயோ, செய்த பாவங்கள் போக வேண்டுமென்பதற்காக தான தர்மங்கள், அன்னதானம் முதலிய நன்மைகளை செய்வதாலேயோ முக்தி அடைய இயலாது.

லிங்கத்திற்கு செய்யும் பூசை, சாம்பல் பூசும் பக்தி, சிவ சிவ என்று கூறிக் கொண்டு திருத்தலங்களுக்கு அலைந்து திரிந்து கடலில் மூழ்கி தீட்சை பெறல், இவற்றால் எல்லாம் கைலாயம் (பரலோகம்) சென்று விட முடியாது. இதெல்லாம் எரி நரகத்திற்கென்று நியமிக்கப்பட்டுயிருக்கும் சாத்தான் செய்யும் இடர்கள். அவன் தந்திரமாய் மக்களை ஏமாற்றி இது போன்ற ஆசாரங்களையும் நியமங்களையும் சம்பிரதாயங்களையும் மக்கள் மத்தியிலே ஏற்படுத்தி அவர்களை திசை திருப்பியுள்ளான்.

வால்மீகர் அருளிச்செய்த சூத்திர ஞானத்திலும் இதே கருத்தைக் காணலாம்.

'தானென்ற வுலகத்தில் சிற்சில்லோர்கள்
சடை புலித்தோல் காசாயம் தாவடம் பூண்டு

ஊனென்ற வுடம்பெல்லாம் சாம்பல் பூசி
உலகத்தில் யோகியென்பார் ஞானியென்பார்;

தேனென்ற சிவ பூசை தீட்சையென்பார்;
திருமாலைக் கண்ணாலே கண்டோ மென்பார்;

கானென்ற காட்டுக்கு ளலைவார் கோடி
காரணத்தை யறியாமல் கதறுவாரே'

சிவவாக்கியரும் இக்கருத்தை பின்வரும் பாடலில் தெளிவு படுத்துகிறார்.

'சுற்றுவார் பெருநூலைப் பார்த்துப் பார்த்துத்
தூடிப்பா ருலகத்தில் சிற்சில்லோர்கள்!

தெற்றுவா ரவர் பிழைக்க அநேக வேடம்,
தேகத்தி லணிந்து கொண்டு திரிகுவார்கள்;

பற்றுவார் குருக்களென்பார் சீடரென்பார்,
பையவே தீட்சை வைப்பார் தீமையென்பார்,
கத்துவார் திரிமூர்த்தி தாமே யென்று
காரணத்தை யறியாத கசடர்தானே'

நட்ட கல்லும் பேசுமா?

நட்ட கல்லை தெய்வமென்று நாலு புட்பஞ்சாத்துறீர்
சுத்தி வந்து முணுமுணுவென்று சொல்லு மந்திரமேதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதனுள் இருக்கையில்
சுட்டச் சட்டி சட்டுவங்கறிச் சுவை யறியுமோ?
மாறுபட்ட மணிகிலுக்கி மலரிறைத்து வீணிலே
ஊறுபட்ட கல்லிலே உருக்கள் செய்யு மூடரே
வேறுபட்ட தேவரும் விரும்புகின்ற உண்மையுங்
கூறுபட்டதேது காண் குருக்கள் பூசை பண்ணுகிறீர்!

சங்கராச்சாரியார் கூறும் கருத்தையும் இங்கு இணைத்து சிந்தனை செய்க:

'எத்தனை தான் கல்லுகளைப் பூசித்தாலும்
ஏனர்களே உங்களுக்கு மோட்சமுண்டோ
சுத்தமுடன் தலை முழுகித் தவஞ்செய்தாலுஞ்
சொல்லரிய பேரின்பந் தோன்றுமா சொல்
பித்தர்களே கல்லுகளை விலைக்கு வாங்கிப்
பிரானென்றே சீலையிலே முடித்து கொண்டு
செத்த பின்பு கயிலாசஞ் சேர்வோமென்றால்,
சேர்வதில்லை எரிநரகஞ் சேர்வீர்தானே
'சற்குருவை அறியாமலு லகிலேதான்
சண்டாளர் கல்லுகளைத் தெய்வமென்று
பொய்க்குருக்கள் சொன்ன புத்தித் தன்னைக் கேட்டு
பூசை செய்து கற்களையே போற்றி செய்வார்
சொற்குருக்கள் தங்களுட செய்திகேட்டால்
சொர்க்கமுண்டோ நரகமல்லால் சொல்லும்போது
சற்குருவை அறிந்தவருக்குடனே மோட்சம்
சார்வரென்று முன்னோர்கள் சாற்றினாரே

காசிக்குப் போனால் கருமம் தொலையாது

புண்ணிய யாத்திரைகளையும், ஆறுகளில் முழுகுதலையும் கடுவெளிச்சித்தர் கடுமையாகக் கண்டிக்கிறார்.

கச்சிக்கு ஓடில் வினை போமோ - அந்தக்
கங்கையாடில் கதி தானும் உண்டாமோ
பிச்சுறு கன்மகங்கள் சாமோ - பல
பேதம் பிறப்பது போற்றினும் போமோ!

சாத்தான் செய்யும் சதி

எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் எரி நட்சத்திற்குரிய அலகை என்னும் சாத்தான் மெய்ப்பொருளை மக்கள் அறியாமலும் அடையாமலும் இருக்க அவன் போடும் தந்திரமான தடைகள் இவைகள் என்பதனை அறியாமல் மேற்கூறப்பட்ட பூசைகளையெல்லாம் மக்கள் செய்கின்றனர் என்பதாம்.

கடவுளால் கீழே தள்ளப்பட்ட தூதர்களின் தலைவனான லூசிபரே சாத்தானாக, பிசாசாக, இப்பூமியின் தேவனாக பல ரூபங்களில், பல பெயர்களில் இருக்கிறவன் என வேதம் மிகத் தெளிவாகக் கூறுகிறது. மேலும் அவன் எப்படிப் பட்டவன், அவனை நம்பி வழிபடுகிறவர்களை என்ன செய்வான், கடைசியில் அவன் எங்கு செல்வான் என்பதையும் கீழ்கண்ட திருவசனங்கள் தெளிவாக்குகின்றன.

'தேவனுடைய சாயலாக இருக்கின்ற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய (மெய்ப்பொருளை நம்பாதவர்கள், அறியாதவர்கள்) அவர்களுக்கு பிரசாகமாய் இராதபடிக்கு, ***இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்*** *(சாத்தான்) அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்'*

- 2 கொரிந்தியர் 4 : 4

'அவன் (பிசாசானவன்) ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாக இருக்கிறான். சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்தில் நிலை நிற்பதில்லை. அவன் பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாக இருக்கிறபடியால், அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்' - யோவான் 8 : 44

'திருடன் (சாத்தான், பிசாசு) திருடவும் (மனுஷரின் ஆரோக்கியத்தை, சந்தோஷத்தை), கொல்லவும் (நம்மையும், நமது பிள்ளைகளையும்), அழிக்கவும் (நமது நிம்மதியை, சமாதானத்தை, ஆத்துமாவை, மெய்யான தேவனிடம் உள்ள பக்தியை) வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ (இயேசு கிறிஸ்து) அவர்களுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவுமே வந்தேன்' - யோவான் 10 : 10

'அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்

(தேவன்) : சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்' - மத்தேயு 25 : 41 என்றார்.

நரகம் யாருக்காக?

பரம் பொருளை பாடித்துதிக்கும் பரலோக தூதுவர்களின் தலைவனான லூசிபர் தன்னுடன் சேர்ந்த ஒரு தூதர் கூட்டத்துடன் பரலோகத்தை தனக்கென்று பிடித்துக்கொள்ள தீர்மானித்தான். அவன் பரலோகத்திலே யுத்தம் தொடங்கினான். தேவன் உடனே இந்த கலவரத்தை அடக்கினார். நியாயத் தீர்ப்பு வரைக்கும் அவர்களை பிடித்து வைக்க ஓர் இடத்தை (நரகத்தை) உண்டாக்கினார் – ஏசாயா 14 : 10–15.

நரகம் சாத்தானுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவுமே ஆயத்தம் பண்ணப்பட்டு இருக்கிறது. ஒரு மனிதன் நரகத்திற்குள்ளே நுழைகிறான் என்றால், அவன் அழைப்பில்லாமல் நுழையும் ஒருவனே! ஆனால் அநேகம் மனிதர்கள் அதற்குள்ளே செல்வார்கள். ஏனென்றால் தேவனுக்கு எதிராக கலகம் செய்த சாத்தானுடனும் அவனுடைய தூதர்களுடனும் அவர்கள் சேர்ந்து கொண்டதினால் அப்படியாகும் என 'பரலோகம்' என்னும் நூலில் வெரின்வோர் செஸ்டர் கூறியுள்ளார்.

மெய்ப் பரம்பொருளை அறியாமல் மனித விருப்புடன் செய்யப்படும் பூசை, தான தர்மம் முதலான எந்த ஆசாரங்களாலும் முக்தி அடைய இயலாது என அகத்தியர் இப்பாடலில் தெளிவுபடுத்துகிறார்.

பாடல் 6 : செய்ய வேண்டாதவைகள்

"போக ஒரு தடையுண்டோ அந்த நாட்டில்
போவதற்குப் பொய்கைதனில் முழுக வேண்டாம்;

சாகமுண்டு தலைகீழாய் நிற்க வேண்டாம்;
சத்தலிங்க மலர் எடுத்துச் சாத்த வேண்டாம்;

தாகமுடன் தீ வளர்த்துக் குதிக்க வேண்டாம்;
தாரணியில் பல பேயைத் தொழவும் வேண்டாம்;

ஏகனென்று பிரமாவை நாட வேண்டாம்;
இந்த நூல் பார்த்து அறிவீர் இன்பமாய்த் தானே."

கருத்துரை

அந்த நாட்டிற்குப் (பரலோகம்) போவதற்கு தடை ஏதும் உண்டோ? அங்கே போவதற்கு பொய்கையில் முழுக வேண்டாம். இலைக்கறி உண்டு, தலைகீழாய்

நின்று தவம் செய்ய வேண்டாம், மலர் இட்டு லிங்கத்தை பூஜிக்கவும் வேண்டாம். தீ வளர்த்து தீக்குள் இரங்கவும் (பூ மிதித்தல் என்பது கிராம வழக்கு) வேண்டாம். பல தெய்வங்களையும் தொழ வேண்டாம். பிரம்மாவை கடவுளென்று எண்ணி வணங்கவும் வேண்டாம். இந்த நூலில் உள்ள எல்லாச் செய்திகளையும் நன்கு ஆராய்ந்து பார்த்து இன்பமாய் அறிந்துகொள்.

விளக்கவுரை : ஆச்சாரம் அனுஷ்டானம் அளித்திடாது முக்திதனை

பரலோகம் (மோட்சம்) செல்ல தடை எதுவும் இல்லை எனக் கூறும் அகத்தியர் இப்பாடலில் பல சமய ஆசாரங்களையும், அனுஷ்டானங்களையும் குறிப்பிட்டு இவைகளைச் செய்வதினால் எவ்வித பலனுமில்லை. செய்வதினால் இதுவே பரலோகம் செல்ல ஒரு தடையாக அமையலாம் என தொனிப் பொருளாகவும் உரைக்கின்றார்.

தமிழ் உரை நடையின் தந்தை எனப் போற்றப்படும் தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாண சுந்தரனார் கீழ்வரும் பாடலில் கிட்டத்தட்ட இதே கருத்தைக் கூறுகிறார்.

'மலையைப் பறிக்கிலேன், மாலை புனைந்திலென், மந்திரத்தின்
ஒலியைப் பெருக்கிலென், ஓலைப் பாக்களை ஓதிலென்ன!
சிலுவையும் ஆணியும் செந்நீரும் சேர்ந்த திருவுருவம்
பொலியும் உளத்தினில் பொன்றிடும் பாவப்பொருப்புகளே

வாக்கை அடக்கின் வயிற்றை ஒடுக்கின் மயிர்வளர்த்து
மூக்கை பிடித்திடின் மூச்சைத் தடுத்திடின் முக்தியின்பம்
தேக்குமோ ஐயோ செகத்தீரே, அடைமின் சிலுவை உயிர்
போக்கிய ஏசுவின் பொன்னடி இன்பம் புகுந்திடுமே

அகத்தியரின் 6வது பாடலின் கருத்துரையிலும், விளக்கத்திலும் விலக்கப்பட வேண்டியவைகளை குறித்து எழுதியவைகளை சங்கராச்சாரியாரும், பட்டினத்தாரும், சிவவாக்கியரும் தமது பல பாடல்களில் இவைகளையெல்லாம் விரும்ப வேண்டாம், அதனால் எவ்வித பலனும் இல்லை எனப் பாடியுள்ளனர்.

நான்முகனை நாடவேண்டாம்

பிரம்மாவைக் கடவுள் என்று எண்ணி நாட வேண்டாம் என்று அகத்தியர் கூறுவதை இரட்சண்ய சமய நிர்ணயம் என்னும் நூலில் மகாகவி கிருஷ்ணபிள்ளை அவர்கள் ரிக்வேதம், யஜுர்வேதங்களை ஆராய்ந்து மும்மூர்த்திகளில் ஒருவரான பிரம்மா தெய்வத்தன்மை உள்ளவர் அல்லர், அவர் மனிதரே என்பதற்கு பல ஆதாரச் சான்றுகளை வேதத்திலிருந்தே கொடுத்துள்ளார். அவற்றுள் சிலவற்றை மாத்திரமே இங்கு எடுத்து இயம்பியுள்ளேன்.

பிரம்மா பிறப்பு மரணத்திற்கு உட்பட்டவர். ஆதலின் அவர் கடவுள் ஆகார். எப்படியெனில் பிரம்மா விஷ்ணுவின் உந்தியத்தாமரையில் வெகுகாலம் புருஷகர்ப்பமாக இருந்து வெளிப்பட்டார் என்றும், விஷ்ணு அவரை சிருஷ்டி கர்த்தாவாக ஏற்படுத்தினார் என்றும், அவரின் ஆயுட்காலம் நூறு வருஷம் எனவும், அந்த ஆயுள் முடியும் போது மீண்டும் உந்தியத் தாமரையில் கர்ப்பமாயிருந்து மறுபடியும் பிறந்து சிருஷ்டித் தொழில் செய்வார் என்றும் விஷ்ணு புராணம் ஒம் அத்தியாயத்திலும் இன்னும் பல ஆத்தியாயத்திலும் சொல்லப்பட்டு இருக்கிறது. திரு அந்தாதியில் திருமழிசை ஆழ்வாரும் இதை

"நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனுந்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான் - யான்முகமாய்
அந்தாதி மேலிட்டறிவித்தேன் ஆழ்பொருளைச் சிந்தாமற்
கேண்மினீர் தேர்ந்து" - எனப் பாடுகிறார்.

இவ்வாறு பலமுறை பிறப்பு இறப்பு சக்கரத்திற்குள் சுழன்று தடுமாறித்திரியும் இந்த பெரிய மனிதரைக் கடவுள் தன்மை உடையவர் எனக் கொள்வது தேவ தூஷணம் என்று அறிக.

முக்தி நாடு (பரலோகம்) அடைய செய்ய வேண்டாதவை எவை, செய்ய வேண்டியவை எவை என்பதனைத் தமது நூலைப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள் என அகத்தியர் இப்பாடலில் விரும்பிக் கேட்டுக்கொள்கிறார்.

பாடல் 7 : பரம்பொருளின் உத்திரவின்படி திறந்து விட்டேன்

"இன்பமாய் நால் வேதம் வந்தவாறும்
எழுதினார் வேதவியா சாத்தான் போல
அன்பாகப் பலவிதத்தில் கட்டிப் போட்டார்;
அதினாலே மானிடர்கள் கெட்டுப் போனார்.
முன் போலச் சித்தர் எல்லாம் கொஞ்சம் கொஞ்சம்
முடிந்ததை திறந்து விட்டார் முடுகி நானும்
அன்பாகத் திறந்துவிட்டேன் வெளிச்சமாக
அரனார் உத்திரவின்படி அறிவித்தேனே."

கருத்துரை

நான்கு வேதங்கள் வந்த வரலாற்றை வேத வியாசர் கேட்பதற்கு இன்பமாக சாத்தான் போல் எழுதிவிட்டார். அதனால் மக்கள் கெட்டுத்தான் போனார்கள். எனக்கு முன்பு சித்தர்கள் அனைவரும் முடிக்கிட்ந்த மெய்ப்பொருளை கொஞ்சம் கொஞ்சம் திறந்து விட்டனர். நான் சிவனின் உத்திரவின்படி விரைந்து எல்லாவற்றையும் வெளிச்சமாகும்படி அன்பாகவே திறந்து கூறியுள்ளேன்.

விளக்கவுரை : நாலு வேதம் பிறந்த கதை

இப்பாடலில் நான்கு வேதங்களும் எவ்வாறு வந்தன என்று அகத்தியர் கூறுகிறார். அகத்தியரின் 1வது பாடலுக்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தையும் இதோடு இணைத்து எண்ணுக.

மகாபாரதத்தை எழுதியவர் வியாசர் என்பர். ஆனால் இந்த வியாசரும் நான்கு வேதத்தை தொகுத்து அமைத்தவர் என அகத்தியர் கூறும் வியாசரும் வேறாக இருத்தல் வேண்டும். சிறந்த நால்வேத ஆராய்ச்சியாளரான மாக்ஸ் முல்லர் இரண்டு வியாசரும் வெவ்வேறானவர்கள் எனத் தோன்றுவதாக கூறுகின்றார். மறைத்திரு. ஒய்.எம். சாலமோன் அவர்கள் தமது 'மகாபாபேல்' என்னும் நூலில் 'வியாசர் ஒன்றாக கலந்திருந்த வேதத்தை ருக்கு, யசூர், சாம, அதர்வண வேதமென்று நாலாகப் பிரித்து அவற்றுடனே இதிகாச புராணங்களை ஐந்தாம் வேதமாக கற்பித்தாரென்று பாகவதம் பிரதம ஸ்கந்தம் 4ஆம் அத்தியாயம் சொல்லுகிறது' என எழுதியுள்ளதையும் ஒப்பிட்டு நோக்குக.

நால்வேதங்களின் தோற்றத்தைக் குறித்து வெவ்வேறு கதைகள் உள்ளன. அவைகள் உருவாக்கப்பட்ட காலம், வேதங்களாக தொகுக்கப்பட்ட பாடல்களின் தோற்ற வரலாறு, இதிகாசங்கள் என அறியப்படும் இராமாயணம், மகாபாரதம், இவற்றுக்கிடையில் பிராமணங்கள், சூத்திரங்கள் ஆரணியங்கள், உபநிடதங்கள் எப்படித் தோன்றின என்பது போன்ற வரலாறு, வேதங்கள் எப்படி படிப்படியாக பல்வேறு காலக் கட்டங்களில் தேவைக்கேற்ப மாற்றப்பட்டு புதிய பகுதிகள், பலியிடும் சடங்குகள், வழிபாட்டு முறைகள், புரோகிதர்களுக்குரிய விதிமுறைகள், சட்டதிட்டங்கள், கூறப்படவேண்டிய மந்திரங்கள், பிரமாணங்கள் எல்லாம் சேர்க்கப்பட்டன என்பனவற்றை மிகச்சிறந்த வேத ஆராய்ச்சியாளர் களான மாக்ஸ் முல்லர், மெர் டோனஸ், டாக்டர் மாரீஸ் புளும், பீல்டு, மேடம் இராகோசின், கிரிப்பித், பேராசிரியர் வேபெர், டாக்டர் ஜான் முயிர், ந.சி. கந்தையாபிள்ளை, என். ஜே. எஸ். சிவசுந்தரம் அவர்கள் மற்றும் பலர் பல ஆராய்ச்சி நூல்களில் அலசி ஆராய்ந்து பார்த்து மிகத் தெளிவாக கூறியுள்ளனர். அதைப் படித்தல் பயன் தரும்.

நான்கு வேதங்களின் தோற்றத்தை, அதன் வளர்ச்சியை, மாற்றத்தை குறித்த வரலாற்றை தெரிந்து கொள்ளுதல் அகத்தியரின் கருத்தை நாம் உணர்ந்து கொள்வதற்கு மட்டுமின்றி, இந்திய நாட்டின் பூர்வீகக் குடிகளின் சமயம், பண்பாடு, வெளிநாட்டிலிருந்து வந்த ஆரியர்களின் சமயம், பண்பாடு, ஆரியர்கள் பூர்வ குடிகளை வென்று தங்கள் ஆட்சியையும், அதிகாரத்தையும் எப்படிப் பெருக்கி திராவிடப் பழங்குடி மக்களை அடிமையாக்கினர், அதனால் திராவிட நாகரீகம், சமயம் இவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்தையும் பின்னணியாக அறிந்துகொள்ள உதவும்.

நன்மை செய்யாத நால்வேதம்

நாட்டு மக்களின் பக்தி வாழ்வுக்கு அடிப்படையாக அமைந்தவை என்று கருதப்படும் நான்கு வேதங்கள் முதலானவைகளை எப்படி படிப்படியாக பலவிதங்களில் அன்பாக எடுத்துக் காட்டி அமைத்துக் கூறிவிட்டார்கள், அதன் விளைவாக மக்கள் கெட்டுப் போனார்களே என அகத்தியர் அங்கலாய்க்கிறார்.

இந்த இடத்தில் இரட்சண்ய சமய நிர்ணயத்தில் மகாகவி கிருஷ்ணபிள்ளை அவர்கள் கூறும் கருத்தையும் ஒப்பிட்டு எண்ணுவது நலம்.

'அதிபூர்வத்தில் வேதத்தை கர்ண பரம்பரையாய்ச் சொல்லுவித்த மகா ரிஷிகள் தங்கள் தங்கள் கருத்துக்குப் புலப்பட்ட உண்மையை வெளிப்படுத்தினார்கள். பிற்காலத்தில் தோன்றியவர்கள் பூர்வ ரிக் வேதத்தில் இல்லாததையும், தங்கள் கருத்துக்கிசைந்ததையும் அந்தந்த காலத்திற்குத் தக்கபடி வழக்கங்களை அனுசரித்தும், சிலவற்றைக் கூட்டியும் குறைத்தும் வேதத்தின் கடைசியில் சேர்த்து நுழைத்து வைத்தார்கள். இவ்வாறாகப் பலரும் தத்தம் அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் பரஸ்பர விரோதங்களைக் கவனியாமல் காலந்தோறும் பலப்பலவிதமாக எழுதி வைத்தார்கள். வரவர வாழ்க்கைப் பிழைப்பிற்குரிய உபாயங்களும் வேதத்தில் சொருகப்பட்டன!'

கண்மூடிப் பழக்கங்கள் எல்லாம் மண்மூடிப்போக

கடவுள் நம்பிக்கையின் பாற்பட்ட மக்களின் மூடப்பழக்க வழக்கங்களை சித்தர்களில் பலர் வெளிப்படையாக கடிந்து கூறி மக்களை சிந்திக்க வைத்ததை முந்தைய சில பாடல்களில் பார்த்தோம். ஏனைய சித்தர்கள் அரைகுறையாக மறைந்து கிடந்த மெய்ப்பொருளை திறந்து காட்டினார்கள். ஆனால் கடவுள் என்னைத் தமது அன்பால் ஆட்கொண்டது மட்டுமல்லாமல், மெய்ப்பொருளை வெளிச்சமாக திறந்து காட்டும்படி எனக்கு கட்டளையும் கொடுத்தார். அதன்படியே நான் இவற்றை அறிவிக்கிறேன் என்கிறார் அகத்தியர்.

பாடல் 8 : மெய் அறிவு அழிந்தால் சாத்தான் வசம் ஆவது சத்தியமே

"அறிவித்தேன் என்று சொன்ன வார்த்தை கேட்டு,
ஐயையோ உலகத்தில் அநேகம் பேர்கள்,

பொறியான அறிவு மிக அழிந்து போனார்;
புலத்தியனே நினைத்துப்பார், பொய்யோ மெய்யோ!

நெறியான பூசை தினம் செய்திட்டாலும்
நிமல பதம் காண்பாரோ நிசமதாக

அறிவான தழிந்திட்டால் அப்பா! அப்பா!
அலகை வசம் ஆவதுவும் அறிக்கை தானே."

கருத்துரை

என் வார்த்தைகளைக் கேட்டு நான் கூறியது மெய்யா பொய்யா என ஆராய்ந்து பார்க்காமல் அநேகர் தங்கள் அறிவினை இழந்து அழிந்து போயினர். ஆனால் ஞானமுள்ளவனே, நீ நான் கூறியுள்ளது மெய்யா பொய்யா என சிந்தித்துப் பார். அனுதினமும் நெறி தவறாமல் பூசைகள் செய்தாலும் அவர்கள் நிசமாகவே வீடு பேற்றினை அடைவார்களோ? அப்பா, மெய் அறிவு அழிந்து போனால் அலகை வசம் (சாத்தான் வசம்) ஆவது வெளிப்படையாகத் தெரிவது தானே!

விளக்கவுரை : சிந்தித்து சீர்தூக்கிப்பார்

கடவுளின் ஆணைப்படி நான் மெய்ப்பொருளை அறிவித்த போது மக்கள் பொய்ப்பொருளை நம்பி மோசம் போன வழிகளையெல்லாம் தெளிவாக அறிவித்தேன். ஆனால் நான் கற்பித்த சத்தியத்தை உண்மையான மனதுடன் நிதானித்துக் காண விரும்பாத உலக மக்கள் பலர் தங்களுடைய நல்லறிவை இழந்தனர் என அகத்தியர் கூறுகிறார்.

தாம் கூறுவது பொய்யா அல்லது மெய்யா என ஆராய்ந்து சிந்தித்துப் பார்க்குமாறு அகத்தியர் சவால் விடுகிறார். பொய் வழியில் வாழும் போது மெய்வழி உபதேசம் கிடைத்து, அது அவர்கள் வாழ்வு பொய், தவறு என சுட்டிக் காட்டப்படுமானால், அதற்காக உணர்ச்சி வசப்பட்டு கோபமடைதல் கூடாது, அறிவை இழக்கலாகாது. தனக்கு கூறப்பட்ட, தன்னைத் தேடி வந்த சத்தியத்தின் ஒளியில் அறிவுடனும் காரண காரியத்துடனும் உண்மையை நிதானித்துத் தெளிதல் வேண்டும். எது பொய் எது மெய் எனத் தெளிதல் மனித அறிவின் கடமையாகும். இயேசு கிறிஸ்துவும் "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" எனக் கூறியுள்ளார் (யோவான் 8:32).

நாளும் நெறியோடு பலவகையான சமயப் பூசைகளையும், சடங்குகளையும் செய்து வந்தாலும் அகத்தூய்மையில்லாத அந்த வெளிப்புற நடத்தை மோட்ச பதவிக்கு கொண்டு சேர்க்காது என்பதாம். பின்வரும் பாடல்களையும் ஒப்பிட்டு உணர்க.

'சற்குருவை வணங்கா மற்றன்னி வைத்து
தனையறியா குருக்களையே சார்ந்து கொண்டு

பொய்க் குழியாம் நரகத்தில் வீழ்ந்து போகும்
புருடருக்குப் பொருளுரைந்தாற் புகழுண்டாமோ!

கற்குருவாம் கல்லுகளைத் தொழுது நின்று
கைகட்டி வாய் புதைத்து கள்ளர் போல

வற்குருவாஞ் சமயத்தைச் சார்ந்து கொண்டு
வகையறியாப் புல்லருக்கு வண்மையுண்டோ!'

-சங்கராச்சாரியார்

'அந்தரவான் கதிபுவனங்கீழ் மேலெங்கும்
மடுக்கடுக்காய் நிறுத்தின வறாரென்றெண்ணிச்

சிந்தையிலே யுணரார்மற் புவியிலுள்ள
சிலையதனைச் சுயம்புலிங்கத் தேவனென்று

புத்தியற்று பற்பல பூவெடுத்து நித்தம்
பூசை செய்து பலவிதமாய்ப் புகழ்வதெல்லாம்

எந்தை பரா பரர்க்கிவைகள் ஏர்க்குமோதான்
எரிநரகப் பேய்கிணங்கு மென்பதாமே!

செம்பினால் மரத்தால் மண்ணால்
சிலையினால் செங்கல் தன்னால்

பைம் பொன்னால், மெழுகால் நீற்றால்
படிகத் தாலுருப் படுத்தி

நம்பியே தெய்வமென்று
நாமேற்றுந் தொழுவோரெல்லாம்

உம்பர் கோன் பதியிழந்து
உழலுவார் நரகில் தானே!' – பேரின்ப மணிமாலை

கல்லை விட்டு கர்த்தரையே கதியென்று பற்றிக்கொள்ளுங்கள் என கிருஷ்ணபிள்ளையும் கீழ்வரும் பாடலில் கூறியுள்ளார்.

'கல்லைச் செம்பைக் களிமண்ணைக் கடவுளெனவே யுருவிப் பிடித்துப்
புல்லைப் பூவை நறுங்குழையைப் போட்டுப் பூசை புரிவீர்காள்
தொல்லைப் பவமும் புரியபவமுந் தொலையு மாறு கிறிஸ்து வெனுஞ்
செல்வக்குமரன் திருவடியைச் சேர வாரும் செகத்தீரே!'

சிலை வழிபாடு வந்த வழி

மேலும் கிருஷ்ணபிள்ளை அவர்கள் தமது இரட்சணிய சமய நிர்ணயம் எனும் நூலில் சிலை வழிபாட்டைக் குறித்து ஆதியோடந்தமாக ஆராய்ந்து விக்கிரஹ வணக்கம் உலகத்தில் இப்படி உற்பத்தியாகியிருக்கலாம் என்று சில பல ஏதுக்களைக் கொண்டு உலக சரித்திர நூல்களை நன்குணர்ந்த பெரியோர்கள் அனுமானித்து எழுதியுள்ளதை ஆராய்ந்து விரிவாக தெளிவாக எழுதியுள்ளார். விக்கிரஹ வழிபாட்டின் வரலாற்றை தெரிந்துகொள்ள விரும்புவோர் அந்த நூலைப் படித்துத் தெளிக.

இந்த ஆசிரியர்கள் முடிவாகக் கூறுவது, 'ஆரியராலே இந்தியாவில் விக்கிரஹ ஆராதனை பரவி நிலைத்தது மாத்திரமல்ல, இந்துக்களுக்குள் நான்கு சாதி பேதங்களும், ஐந்தாம் சாதிக்குள் தொண்ணூற்றாறு சாதி வேறுபாடுகளும்

உண்டாயின. 'வேத சமாஜ விண்ணப்பம்' என்ற ஒரு நூலில் விக்கிரஹ ஆராதனைக்கு அந்த ஆராதனைக்காரர்கள் கூறும் ஆதாரங்களை எடுத்து எழுதிய அந்த மகா பண்டிதரே அதற்குரிய மறுப்புக் கருத்தையும் அதே நூலில் எழுதியுள்ளார்.

தெய்வம் எங்கே இருக்கிறது?

உத்திர கீதையில் விக்கிரஹத்துக்கு ஆதாரமாயுள்ள ஒரு பிரமாணத்தைக் காண்க.

அக்நிர் தேவோ த்விஜாதீ நாம்
முநீநாம் ஹ்ருதி தைவதம்
ப்ரதிமாஸ் வபரபுத்தாநாம்
ஸர்வத்ர ஸமதர்ஸிந:

இந்த பிரமாணத்தின் பொருள் – "பிராமணர்களுக்குத் தெய்வம் அக்கினியில், முனிவர்க்குத் தெய்வம் இருதயத்தில், புத்தி குன்றியவர்களுக்கு விக்கிரஹத்தில் தெய்வம், சமமான அறிவுள்ளவர்களுக்கு எங்குந் தெய்வம்."

இது இப்படி என ஒரு புறம் பிரமாணங்கள் கூற, சில புராணங்களே விக்கிரஹ ஆராதனையை நிந்திக்கின்றன. ஸ்கந்த புராணத்தில் ஞான யோக காண்டத்தில் நாடி சக்கிராத்தியாத்யதில் ஒரு சுலோகம் – அதன் பொருளாவது:

"மூடாத்துமாக்கள் தீர்த்தத்திலும் தானத்திலும் தபசிலும் யக்ஞத்திலும் கட்டையிலும் கல்லிலும் சிவனிருப்பதாய் நினைக்கிறார்கள். சிவனோ நமக்குள்ளே இருக்கிறார்."

மற்றொரு ஸ்லோகம் சொல்வது – "யோகிகள் சிவனைத் தமக்குள்ளே காண்பார்களேயன்றி விக்கிரஹங்களில் காணார். அஞ்ஞானிகளுக்குப் பாவனார்த்தமாக விக்கிரஹங்கள் செய்யப்பட்டிருக்கின்றன."

சாதாதப வசனம் கூறுவது – "சாதாரண மனிதருக்குத் தெய்வம் நீரில். சற்று தெரிந்தவர்களுக்குத் தெய்வம் ஆகாசத்தில். முட்டாள்களுக்குத் தெய்வம் கல்லிலும் கட்டையிலும். யோகிகளுக்குத் தெய்வம் அவர்களுக்குள்ளே."

மஹா நிர்வாணத்தில் கூறப்பட்டிருப்பது – "இவ்வித சுபாவங்களை அநுசரித்துப் பலவித உருவங்கள் அற்பப் புத்தியுடையவர்கள் நிமித்தம் கற்பிக்கப்பட்டன."

வேதங்களும் புராணங்களும் பிரமாணங்களும் விக்கிரஹ ஆராதனை செய்கின்றவர்களை எப்படி விமர்சிக்கின்றன எனப் பார்த்தீர்களா? இதில் நீங்கள் எந்தப் பிரிவில் இருக்கிறீர்கள் என சற்றே சிந்தியுங்கள். கடவுள் அறவே அருவெறுப்பது விக்கிரஹ ஆராதனையை.

விக்கிரஹ ஆராதனை தேவனுக்கு மிகவும் அருவருப்பானது என பரிசுத்த வேதாகமத்தின் பல திருவசனங்கள் கூறுகின்றன. அவற்றில் சிலவற்றை மாத்திரம் கீழே கண்டு தெளிக.

'என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்' - யாத்திராகமம் 20 : 3-5

'கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின நாளில் நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை. ஆகையால் உங்களைக் கெடுத்துக் கொண்டு ஆண் உருவம், பெண் உருவம், பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவம், ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதொரு பட்சியின் உருவும், பூமியிலுள்ள யாதொரு ஊறும் பிராணியின் உருவும், பூமியின் கீழ் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கும் ஒப்பான விக்கிரஹத்தை உங்களுக்கு உண்டாக்காத படிக்கும், உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா மக்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை நோக்கி அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும் உங்கள் ஆத்து மாக்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்' -உபாகமம் 4 : 5-19

'அவைகள் (தேவர்களின் விக்கிரஹங்கள்) உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள். அவைகளைப் போல நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டு போயாக (போகாதே)! அதைச் சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவாய். அது சாபத்திற்குள்ளானது' - உபாகமம் 7 : 25-26

'யாதொரு சிலையையும் நிறுத்த வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர் அதை வெறுக்கிறார்' - உபாகமம் 16 : 22

'அந்நிய தேவர்களைப் பின்பற்றாமலும், அவைகளுக்கு ஆராதனை செய்யாமலும், அவைகளைப் பணியாமலும் இருந்து, நான் உங்களுக்குத் தீமை செய்யாதபடிக்கு உங்கள் கைகளின் செய்கைகளால் எனக்கு கோபமூட்டாமலும் இருங்கள்' - எரேமியா 25 : 6

'கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கைவேலையில் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான

யாதொரு விக்கிரஹத்தையும் உண்டு பண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவன்' - உபாகமம் 27 : 15

'விக்கிரஹங்களை உருவாக்குகிற யாவரும் வீணர். அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது. அவைகள் ஒன்றும் காணாமலும் ஒன்றும் அறியாமலும் இருக்கிறதென்று தங்களுக்கு வெட்கமுண்டாக அவைகளுக்குத் தாங்களே சாட்சிகளாயிருக்கிறார்கள். ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி, விக்கிரஹத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்?' -ஏசாயா 44 : 9-11

'அவர்களுடைய விக்கிரஹங்கள் வெள்ளியும், பொன்னும், மனிதருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்கு கண்களிருந்தும் காணாது, அவைகளுக்கு காதுகளிருந்தும் கேளாது. அவைகளுக்கு மூக்குகளிருந்தும் முகராது, அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது. அவைகளுக்கு கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும் அவைகளை நம்புகிற யாவரும் அவைகளைப் போலவே இருக்கிறார்கள்' - சங்கீதம் 115 : 14-8

'விக்கிரஹம் தேவனல்ல. அதிலே தேவனை மந்திரத்தினால் உட்புகுத்திய பின்பு தான் தேவன் அதிலே வருகிறார் என்று விக்கிரஹ பக்திக்காரர்கள் சொல்லுகிறார்கள். அது மெய்யானால் பிரதிஷ்டை பண்ணப்பட்டுத் தேவதா வாகனஞ் செய்யப் பெற்ற கல் முதலிய விக்கிரகங்கள் அப்படியல்லாத மற்றக் கல் முதலியவைகளைப் போலவே பஞ்சேந்திரியங்கள் அற்றுக் கிடப்பதும், தங்களுக்கு வரும் மோசங்களுக்கு தங்களை விலக்கிக்கொள்ள ஏலாதிருப்பதும் என்ன?' - சங்கீதம் 115 : 2-8

மெய் தேவனையன்றி மற்றவர்களையாவது, யாதொரு விக்கிரஹத்தையாவது வணங்குவது மகா பெரிய பாவம். எப்படியெனில் தேவ கட்டளையை மீறிச் செய்யும் செயல்கள் அனைத்தும் பாவமே. விக்கிரஹ வணக்கம் தேவனுடைய கட்டளைகளுக்கு விரோதம். ஆகவே அது பாவம். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிற கிருபையுள்ள தேவனை நாம் இருதயத்தால் வணங்கி, மனத்தினால் தியானித்து, அவரின் கட்டளைப்படி நடந்து விசுவாச பக்தியுடனே நமக்கு வேண்டிய காரியங்களை இரந்து கேட்டால் அவ்வேண்டுதல்களைக் கேட்கவும், அருள்புரியவும் இறைவன் வல்லவராக இருக்கிறார். ஆதலால் அவரை மட்டுமே நோக்கி சிந்தையிலே தியானம் செய்து ஜெப ஸ்தோத்திரம் செய்வதே உத்தமம், உய்ய வழி. இதையே அகத்தியர் தமது பாடலில் கூறுகிறார்.

மெய்யறிவே நித்திய வாழ்வு தரும்

மக்கள் மெய் அறிவை இழந்து விட்டால் அவர்கள் அலகையான சாத்தானின் வசமாகிவிடுவார்கள். மெய்யறிவே நித்திய வாழ்வு.

> ‘ஒன்றான மெய்தேவனாகி உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்’ - யோவான் 17 : 3

> ‘அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது’ - கொலோசேயர் 2 : 3

> ‘அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து தங்கள் சிந்தைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது’ - ரோமர் 1 : 21

> ‘அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனிதர்கள் பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்’ - ரோமர் 1 : 23

மக்கள் சத்தியத்தினைப் பகுத்தறியும் தங்கள் அறிவுக் கண்களை. சாத்தான் குருடாக்கும்படி விடக்கூடாது என அகத்தியர் எச்சரிக்கிறார். அவ்வாறு இழந்தால் அது மக்களை சாத்தான் வசமாக்கிவிடும் என்றும் இப்பாடலில் உணர்த்துகிறார்.

பாடல் 9 : நரகத்திற்குரிய சாத்தான் நம்மையும் மயக்கி இழுக்கிறான்

“அலகையது தேவனுக்குச் சரியாய் நின்று,
ஆங்காரம் தானெடுத்து அகந்தையாலே,
நிலைகுலைந்து பாதாளக் குழிக்குள் நின்று,
நித்தியமும் மானிடனை மோசம் போக்கி,
பலகலையும் உணர் அறிவை மயக்கித் தங்கள்
பாதாள வீடதிலே பதுங்கச் செய்யும்
நிலையதுவை அறியாமல் போற்றார் போற்றார்
நினைத்துப்பார் புலத்தியனே நிசமாய்த்தானே.

கருத்துரை

சாத்தான் தன்னுடைய அகந்தையாலும் மமதையாலும் தன்னை கடவுளுக்குச் சரிசமமாய் உயர்த்தினான். அதனால் அவன் தன்னுடைய மேன்மையான நிலை குலைந்து பாதாளக் குழிக்குள்ளே தள்ளப்பட்டான். அவன் தான் கெட்டது

மல்லாமல், மக்களையும் ஒவ்வொரு நாளும் மோசம் போக்கி, பலகலைகளையும் கற்று உணரும் அவர்களின் அறிவினைக் கட்டுக் கதைகளினாலே மயக்கி, நரக பாதாளத்திலே தன்னோடு இழுத்துக் கொள்ளுகிறான். இதை அறியாமல் மக்களும் மோசம் போகின்றனர். அறிவுள்ளவனே! நான் சொல்வது உண்மையான செய்தி. சிந்தித்துப்பார்.

விளக்கவுரை : அகந்தையால் அழிந்த தேவதூதன்

பின்வரும் வேதத்தின் திருவசனங்கள் சாத்தானுடைய அகந்தையையும், கலகத்தையும் அவன் அடைந்த தண்டனையையும் தெளிவு படுத்துகின்றன. தேவதூதனாக இருந்த போது சாத்தானுடைய முதல் பெயர் 'லூசிபர்'' என்பதாகும்.

> *'அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே. மக்கள் இனங்களை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழவெட்டப்பட்டாயே! நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன். வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூடாரத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களிலே ஏறுவேன். உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்திலே சொன்னாயே' - ஏசாயா 14 : 12-14*
>
> *'தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்து இருக்கிறார்' - யூதா 6*

நரகம் சாத்தானுக்காகவும் அவனுடன் சேர்ந்து துரோகம் செய்த தூதர்களுக்காகவும் உண்டாக்கப்பட்டது. நரகம் மனிதனுக்காகப் படைக்கப்பட்டது இல்லை. ஆனால் தேவனுடைய அன்பைப் புறக்கணித்து, விக்கிரஹ ஆராதனையும், அவர் அருவருக்கின்ற மற்ற பாவச் செயல்களையும் செய்யும் போது நித்திய தண்டனையைத் தானாகவே மனிதன் சம்பாதித்துக் கொள்கிறான்.

> *'அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும், ஆயத்தம் பண்ணப்பட்டு இருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள், என்றார்' - மத்தேயு 25 : 41*
>
> *'மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் வாதிக்கப்படுவார்கள்' - வெளி 20 : 10*

சாத்தான் இங்கு அலகை என்று அழைக்கப்பட்டுள்ளான். சாத்தான் என்பதற்கு எதிர்க்கிறவன் அல்லது பகைஞன் என்று பொருள். பிசாசு என்னும் பெயரும் சாத்தானுக்கு உண்டு. பிசாசு என்பதற்கு குற்றஞ்சாட்டுபவன், நிந்தனைக்காரன் என்று பொருள் (வெளி 12:10).

நித்தமும் மானிடரை மோசம் போக்கும் சாத்தான்

லூசிபராகிய சாத்தான் தான் கெட்டதுமல்லாமல் தேவன் படைத்த மனிதரையெல்லாம் ஆதாம் ஏவாள் முதலாக இன்று வரை தொடர்ந்து நித்தமும் வஞ்சித்து ஏமாற்றி வருகிறான். அதன் மூலம் பாவத்திற்கும், மரணத்திற்கும் நரகத்திற்கும் ஏனைய எல்லாத் துன்பங்களுக்கும் அவர்களை அடிமைப்படுத்தி விட்டான். 'எல்லோரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களாகி... (ரோமர் 3:23)' அனைவரையும் தேவ ஆக்கினைக்கு உட்படுத்தி வருகிறான். சாத்தானுடைய வஞ்சகத்திற்கு உட்பட்ட மானிடம் தேவனுடைய ஐக்கியத்தை இழந்து, பாவத்திற்கும் அதன் விளைவான நித்திய மரணம் அல்லது ஆத்துமா அழிவிற்கும் இலக்கானது.

அநித்தியமான மாமிச உடம்பின் வாழ்விற்கு நித்ய ஆத்துமாவை அடிமைப் படுத்திவிட்ட சாத்தான், உடலின் விருப்பங்களை நிறைவேற்றுவதிலும் சிற்றின்பத்திலும் நாட்டத்தை திருப்பி மக்களை மோசம் போக்கினான். கடவுள் படைத்த மண்ணின் வாழ்வோடு மனிதனை இணைத்து இறுகக் கட்டி கண்களின் விருப்பம், மாமிச உடம்பின் விருப்பம், வாழ்வின் பெருமை என்னும் மூவகையில் மக்களை மோசம் போக்கி (யோவான் 2 : 15–17) அவர்களுடைய பக்தி முதலானவற்றையும்கூட இவற்றின் அடிப்படையிலேயே ஏமாற்றி வஞ்சித்து விட்டான்.

பாவம் செய்யத் தூண்டும் சாத்தான்

உடலின் சிற்றின்ப விருப்பங்களாலும் அதன் அடிப்படையில் தோன்றிய மாமிசத்திற்குரிய ஆராதனைகளாலும் ஆவிக்குரிய மெய்யறிவை மயக்கி சாத்தான் மக்கள் மனதைக் குருடாக்கிவிட்டான் (2 கொரிந்தியர் 4 : 4). மேலும் காண்க.

'தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்திரியாமலும் இருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்... இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார். இந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தை சுபாவத்திற்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல் ஒருவர் மேல் ஒருவர் விரகதாபத்தினாலே பொங்கி ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து தங்கள் தப்பிதத்திற்கு தகுதியான பலனைத் தங்களுக்குள்ளே அடைந்தார்கள். தேவனை அறியும் அறிவை பற்றிக்கொண்டிருக்க

அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால் தகாதவைகளைச் செய்யும்படி தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுத்தார்.

அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு, பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறுபண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்து பிணைக்கிறவர்களுமாய், பெற்றோர்க்குக் கீழ்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பு இல்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்கள் என்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும் அவைகளை தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்திலும் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்" என ரோமர் 1 : 19–32ல் திருவசனம் கூறுகின்றது.

இதனைப்படிக்கும் அறிவுள்ளவனே, நீ நிச்சயமாக இதனை நினைத்துப்பார். நன்கு ஆராய்ந்து சிந்தித்துப்பார், ஆன்மீக அறிவுத்தெளிவு பெறுவாய் என்கிறார் அகத்தியர்.

பாடல் 10 : நிசமாய் நம்பினவர்க்கு ஈடேற்றமுண்டு

"நிசமான நால்வேதம், ஆறு சாஸ்திரம்
நினைவதுவை மயக்கி வைக்கும் புராண சாஸ்திரம்
விசமாக நால் மதத்தில் வந்த சாஸ்திரம்
மற்ற மற்ற சாஸ்திரத்தின் வசமீதெல்லாம்
குசமசக்குக் குசமசக்கு அப்பா! அப்பா!
கூறுகிறேன் சுயவேத சாஸ்திரந்தன்னை,
நிசமாய் நம்பின பேர்க்கு ஈடேற்றமுண்டு;
நிலை ஞானக் கண்ணொளியு நிற்குந்தானே."

கருத்துரை

நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், மனிதருடைய மனதை மயக்கும் புராணங்கள், நான்கு மதங்களில் தோன்றிய சாத்திரங்கள், இன்னும் தோன்றிய ஏனைய சாத்திரங்கள் எல்லாம் பொய்யும் புரட்டும் வீண் மயக்கமும் தான் அப்பா!

சுயவேத சாஸ்திரத்தை உண்மையாக நம்பினோர்க்கு ஈடேற்றமுண்டு. அவர்களுக்கு நிலையான ஞானக் கண்ணொளியும் கிடைக்கும்.

விளக்கவுரை : உண்மை கசக்கும், கோபம் கொள்ள வேண்டாம்

பகுத்தறிவுள்ள மெய்யறிவின் துணை கொண்டு பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் அகத்தியர் மெய்ப்பொருளை தேடிக் கண்டடைந்தபோது தாம் அதற்கு முன்னர் தெரிந்து கொண்டது எல்லாம் மயக்கத்திற்குரியது, பொய்யே என்று கண்டு தெளிந்து துணிகின்றார். இதனைக் கேட்பதற்கு கடினமாக இருக்கலாம். ஆனால் உண்மையை உணர்ந்து கொண்ட மனம் இது வரை தமது இறை நம்பிக்கைக்கு ஆதாரமாக இருந்த வேதங்களும், சாஸ்திரங்களும் பிறவும் பொய் என்றும், மயக்கத்திற்குரியவை என்றும் கூறுவதில் வியப்பொன்றுமில்லை. மகாகவி கிருஷ்ணபிள்ளை அவர்களும் 'நான் கிறிஸ்துவைக் கண்ட வரலாறு' என்னும் தமது சுயசரிதையில் தாம் கிறிஸ்துவரான வரலாற்றில் கூறுகின்றார்.

'சிலகாலம் பொறுத்து ஒரு தமிழ் வேதாகமத்தை உபாத்தியாயர் ஒருவரிடத்தில் இரவலாக வாங்கி ஆதி தொடங்கி வாசிக்க ஆரம்பித்தேன். யாத்திராகமம் இருபதாம் அதிகாரம் மட்டும் ஒழுங்காய் வாசித்தேன். வாசித்த அளவில் உலக சிருஷ்டிப்பு, பாவம் வந்த வகை, ஜலப்பிரளய விர்த்தாந்தம் முதலியவைகள் எல்லாம் உண்மையாய் நடந்தபடியே எழுதியிருக்கிறதென்றும், சைவ வைஷ்ண சமய நூல்களிற் சொல்லியிருக்கிற அவ்வகையான விர்த்தாந்தங்கள் எல்லாம் பழங்கதைகளும் வேடிக்கையார்த்தமாய்ப் புனையப்பட்டவைகளுமாய் இருக்கிறதென்றும் மனசில் தெளிவாய்ப்பட்டது.'

வேதங்களும் புராணங்களும் புரட்டர்கள் பிழைக்கத்தானே

இருக்கு, யசூர், சாம, அதர்வண ஆகிய நான்கு வேதங்களையும், ஆறு சாத்திரங்களையும் (சிலர் இதை சாங்கியம், பதஞ்சலியம், வேதாந்தம் என மூன்று என்றும், வேறு சிலர் இதை வேதாந்தம், வைசேஷிகம், பாட்டம், பிரபாகரம், பூருவமீமாம்சை, உத்திர மீமாம்சை என ஆறு என்றும் கூறுவர்) ஆராய்ந்த ஞானிகள் சிலர் அவற்றை கடிந்துரைத்துள்ளமையையும் காண்க.

'தயங்காமற் பிழைப்பதற் குயிந்த ஞானம்
சார்வாகப் பாராட்டி யின்னம் வேறே

மயங்குவதற்கு ஞானம் பார் முன்னோர் கூடி
மாட்டினார் கதை காவிய புராண மென்றும்

இயலான ரசம்தனிலே ஈப்புகுந்தற்போலும்
இசைந்திட்டார் சாஸ்திரங்கள் ஆறென்றேதான்

வரையான பயன் பெறவே வியாசர் தானும்
மாட்டினார் அரனார் உத்தரவினாலே' – பத்திரகிரியார் 156

'உலகிலே பிறந்த முன்னோர் ஓதிய கலைகள் எல்லாம், நிலையதாஞ்சோதி தன்னை நிசமதாய்ச் சொன்னதில்லை, பலப்பல பேதமாய்ப் பங்கமாய்க் கூறு செய்து, அலகை போல் பொய் பேசி எரி நரகம் அழுந்திப் போனார்' என சங்கராச்சாரியாரும்,

'நாலுவேதம், சாத்திரங்கள் இரு மூன்றாக, வயிறு பிழைக்க புராணங்கள் பதினெட்டாக கல்லுகளைக் கரைப்பதைப் போல வேதாந்தங்கள் ஈட்டினார்கள் அவரவரின் பாஷையாலே, தொல்லுலகில் நாலு சாதி அநேகஞ்சாதி தொடுத்தார்கள் அவரவர்கள் பிழைக்கத்தானே' என வால்மீகரும்,

வேதங்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் அனைத்தும் முடிவான உண்மையை தெரிவிக்கவில்லை. அவைகள் கூறும் கதைகளையும் கற்பனைகளையும் கண்டு 'கலை உரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக' என இராமலிங்க வள்ளலாரும் சாபமிடுகின்றார்.

'வேதாகமங்கள் சூதாகச் சொல்லுகின்றன. அவைகள் உண்மையை வெளிப்படையாக உரைக்கவில்லை. இவற்றால் என்ன பயன் என்றும் சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றஞ் சொல்லுகின்றனவேயல்லாமல் நேத்திரங்கள் போல் காட்டவில்லை' என 6 (முடி) சுத்த சிவ நிலை பாடல்களும் தெரிவிக்கின்றன.

இந்த வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், இவற்றின் அடிப்படையில் தோன்றிய நூல்கள் எல்லாம் மெய்ப்பொருளை அறிவிப்பது போல் தோன்றினாலும், எல்லாவற்றையும் நுணுகி ஆராய்ந்து காணுங்கால் அவைகள் பெரிய மயக்கமாகவும் பெருங்குழப்பமாகவுமே இருப்பதால் அவைகளை கதையென்றும் பொய் என்றும் முடிவு கூறி அகத்தியர் தெளிவிக்க விரும்புகிறார் என்பது தெளிவு. அவர் பொய் என்று கூறிவிட்டாரே என்று கோபம் கொள்ள இடமல்லை. ஏனென்றால்

'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்'

என திருவள்ளுவரும் சொன்னது போல, தான் ஆராய்ந்து கண்ட உண்மையை மறைத்து தனக்குத்தானே பொய்யுரைத்து வாழாமல், தான் கண்டறிந்த உண்மையை 'பொய்யாது' உலகத்திற்கு எடுத்துரைத்தமையால், உண்மையை உணர்ந்து ஆன்ம தெளிவு பெறும் அனைவர் உள்ளத்திலும் அவன் நன்றியுடன் நினைத்துப் போற்றப்படுவான் என்பதற்கு ஒப்ப அகத்தியரையும், இதனை தொகுத்து எழுதும் இந்த மெய்யடியானையும் நன்றியோடு நினையுங்கள். இதுவே இவர்கள் ஆற்றிய இந்த அரும்பெரும் தொண்டிற்கு கிடைத்த பெரும் பொக்கிஷம், பாராட்டு.

நம்பினார் கெடுவதில்லை

தாம் கண்ட மெய்ப்பொருளாம் இயேசு கிறிஸ்து பெருமானை வெளிப்படுத்தும் பரிசுத்த வேதாகமத்தை அகத்தியர் சுயவேதம் என்று இப்பாடலில் குறித்துக் காட்டுகிறார். தாம் மெய்ப்பொருளை காண்பதற்கு துணைபுரிந்த அந்த வேதத்தை மெய்யாக நம்பினவர்களுக்கு மீட்பு, ஈடேற்றம் உண்டு என்றும் கூறுகிறார். ஆத்தும ஈடேற்றத்திற்கு விசுவாசமாகிய நம்பிக்கையின் இன்றியமையாமையை திருவசனம் அழுத்தம் திருத்தமாக கூறுகின்றது.

'விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு நன்மை அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்' - எபிரேயர் 11 : 6

'கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்' - அப்போஸ்தலர் 16 : 31

'நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்' - யோவான் 11 : 25, 26

'விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான்' - மாற்கு 16 : 16

மேற்கண்ட திருவசனங்கள் நாம் பாவத்திலிருந்து மீட்பு அடைவதைப்பற்றியும், இரட்சிப்பைப் பற்றியும் மிகத் தெளிவாகக் கூறுகின்றன.

எல்லாமுமாகும் இயேசு கிறிஸ்து

இயேசு கிறிஸ்துவே மனுக்குலத்தின் நிலையான ஞானமாக இருக்கிறார். 'அவரே தேவனாய் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்' (1 கொரிந்தியர் 1:31)ம், கிறிஸ்துவுக்குள் மக்களுக்கு வேண்டிய சகலமும் இருக்கிறது என்பதை 'அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன' என கொலோசியர் 2:3லும் காணலாம். இயேசு கிறிஸ்துவே வேதமாகவும், வேதத்தின் வெளிச்சமாகவும், மெய்ப்பொருளாகவும், மாந்தரின் அக இருளை நீக்கி மெய்யொளியைத் தருபவராகவும் இருக்கிறார் என தமது பாடல்களில் மகாகவி கிருஷ்ணபிள்ளையும் பாடியுள்ளார். அதையே அகத்தியரும் இப்பாடலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

பாடல் 11 : கசட்டைப் போக்கி கரை ஏற வேண்டும்

"கண்ணீரைத் தான் விட்டு உள் அசுத்தம் போக்கி,
காரண சற்குருவினால் கசட்டைப் போக்கி,
வெண்ணீராம் ஆதித் திருவேதாந்தத்தின்
வீடேக வேணும் என்றால் விரும்பிக் கேளு;
தண்ணீரை உருவேற்றித் தியானம் செய்து
சச்சிதானந் தனையே சரணம் செய்து
கண்ணீரை விட்டழுது கசட்டைப் போக்கி
கரை ஏறவேணும் இதைக் கைக்கொள்வீரே!"

கருத்துரை

ஒளி பொருந்திய திருவசனங்களாகிய பரிசுத்த வேதாகமம் வெளிப்படுத்தும் வீடுபேற்றினை (முக்தியை) அடைய வேண்டும் என்றால் நான் சொல்வதைக் கேளுங்கள். வாழ்க்கையில் நாம் செய்த தவறுகளுக்காக மனம் வருந்தி கண்ணீர் சிந்தி அழுது உள்ளத்திலிருந்து அந்த அசுத்தங்களை நீக்கி மனம் திரும்ப வேண்டும். சச்சிதானந்தனாகிய இயேசு கிறிஸ்துவிடம் சரண் அடைந்து, அவரையே தியானம் செய்து குற்றங்களுக்காக கண்ணீர் விட்டு அழுது தண்ணீரில் திருமுழுக்குப் பெற்று, சற்குருவினால் நமது பாவக்கறைகளைப் போக்கி கரை ஏற வேண்டும்.

விளக்கவுரை : அழுதால் உன்னைப் பெறலாமே

இப்பாடலில் மக்கள் ஈடேற்றம் அடைவதற்குரிய வழிவகைகளை உணர்த்துகின்றார். 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்பது பக்தி. மெய்யான தேவனாகிய இயேசு கிறிஸ்துவை சொந்த மீட்பராக, இரட்சகராக ஏற்றுக் கொண்டு செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி, தன் உள்ளத்தின் அசுத்த வாழ்க்கையால் கடவுளைத் துக்கப்படுத்தியதற்காக கண்ணீர் விட்டுக் கதறி அழுது, தன் தவறுகளிலிருந்து மனம் திரும்ப வேண்டும்.

திரு.வி.க. தன் குறைகளைக் குறித்து உணர்ந்து மனந்திரும்பி கிறிஸ்து பெருமானிடம் அழுது மன்றாடுவதை காணும் போது நமது கண்களும் பனிக்கின்றன.

'ஏசினேன் உன்னை இனிய மொழியை இளமையிலே
கூசினேன் இல்லை குறையினைப் பின்னே குறித்து அழுதேன்
ஏசுவே! உன்னரும் என் உளம் எய்தியது எப்படியோ
மாசிலா அன்பே! மகனாய் உருக்கொண்ட மாணிக்கமே!'

என்னிடம் குறைகள் பிறரிடம் குறைகள்
எழுவதைக் கண்போதெல்லாம்

உன்னடி எண்ணி உருகிறே செபத்தில்
உளங் கொள்ளும் உணர்வினை அளித்தாய்

என்ன கைமாறு செய்குவன் ஏழை
ஏசுவே! எம்பெருமானே!

அன்பினால் உலகை அமைதியில் நிருவ
அவதரித்தருளிய அரசே!

எல்லா மனிதரும் மனம் திரும்ப வேண்டும் என கடவுள் கட்டளையிடுவதை

'அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போல் இருந்தார். இப்பொழுதோ, மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதர் எல்லோருக்கும் கட்டளையிடுகிறார்' - அப்போஸ்தலர் 17 : 30

'நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்' - லூக்கா 13 : 5

என பரமகுரு எச்சரிக்கிறார். 'காரண சற்குருவினால் கசட்டைப் போக்கி' எனப்பாடி இயேசு கிறிஸ்துவை எல்லா உலகங்களும் படைக்கப்பட்டதற்கு காரணர் அவரே என அகத்தியர் கூறுகிறார். அவர் மனிதனாகி சற்குருவாவதற்கு முன்பு வார்த்தையாக, தேவனிடத்தில், தேவனாக, தேவனோடு இருந்தார் என திருவசனங்கள் கூறுகின்றன.

'சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை' - யோவான் 1 : 1-3

'அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது' எனவும், 'அவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்' - கொலோசேயர் 1 : 15-18

பாவத்தை மன்னிக்கும் பரமகுரு

பாவக்குற்றத்தை, அகந்தையை, கசடை இயேசு கிறிஸ்து ஒருவரால் மாத்திரமே போக்க முடியும்.

'அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனிதர்களுக்குள்ளே அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை' - அப்போஸ்தலர் 4 : 12

'பாவிகளை இரட்சிக்க இயேசு கிறிஸ்து உலகத்தில் வந்தார்' - 1 தீமோத்தேயு 1 : 15

தாமே பழுதற்ற பாவப் பிராயச்சித்த பலியாகி பாவ மன்னிப்பாகிய மீட்பை மனிதருக்கு உண்டு பண்ணினார் என்பதை

'வெள்ளாட்டுக் கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினால் அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும்... நித்ய மீட்பை உண்டு பண்ணினார்' எனவும், 'கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காக காத்துக் கொண்டு இருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி...' - எபிரேயர் 9 : 12, 28

எனத் திருவசனங்கள் கூறுகிறது. இயேசு கிறிஸ்து மூலமாக அன்றி ஒருவரும் தேவனாகிய பிதாவிடத்தில் சேர இயலாது என்பதை 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்' – யோவான் 14:6 திருவசனம் நமக்கு தெளிவாக்குகின்றது. உலகத்திலே பலவற்றை பலவாறு நம்பி பாவம் நீங்காமல் முடிவில் கிறிஸ்து பெருமானை சரணடைந்தேன் என ஜியார்ஜ் சேர்வை வேத நாயகம் கூறுவதைக் காணுங்கள்.

'பாவத்தை கூசாமற் செய்தொரு சடங்கினால்
பரிகாரஞ் செய்துவிடலாம்;
பல புண்ணியங்களாற் கடவுளைக் கடனாக்கிப்
பரத்திற் புகுந்து விடலாம்;

மாவேத மிதுவென்ற பொய் வேதம் நம்பியே
மாபாவியாய் வளர்ந்தேன்.
மனரம்மிய மற்று நான் மயல் விண்டு கிறிஸ்துவின்
மார்க்கத்திற் சரணடைந்தேன்'

சச்சிதானந்தனை சரண் அடை

மெய் வாழ்வு பெறுவதற்கு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு மனம் திருந்தியவர்கள் மேற்கொண்டு ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என அகத்தியர் வலியுறுத்துகிறார். திருமுழுக்குப் பெற்று, மறுபிறப்படைந்து சத்து–சித்து–ஆனந்தமாய் இருக்கின்ற இயேசு கிறிஸ்துவாகிய சச்சிதானந்தனையே தியானித்து, சரண் அடைந்து, மீண்டும் உலக வாழ்க்கையில் கறைபடும் போது மனந்திரும்பி கண்ணீர் விட்டழுது 'நம்முடைய பாவங்களை நாம்

அறிக்கையிட்டால் பாவங்களை நமக்காக மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்' – (1 யோவான் 1 : 9). திரு முழுக்குப் பெற்று பாவத்தைக் கழுவி மறுபடியும் பிறந்து பரிசுத்த ஜீவியத்தில் முடிவுவரை நிலைத்திருந்து வாழ்க்கைக் கரையேறினால் நித்ய பேரின்பத்திற்குள் நாம் செல்லலாம் என அகத்தியர் இப்பாடலில் கூறுகின்றார்.

பாடல் 12 : கைக் கொள்ள வேண்டிய வேதத்தின் வெளிச்சம்

"கைக்கொள்ள வேணும் என்றால்; இன்னம் வேறே
கற்பனையும் உண்டு; அதைக் கருத்தில் வைத்தே,

பைக்கொண்ட பிதா மாதாப் பாதம் போற்றி,
பழிமோக நினைவகற்றிப் பாவைமாரைத்

திக்கென்ன நினையாமல் இருட்டைப் போக்கி
சிவம் வேணும் என்று தினம் செபத்தைச் செய்து

மெய்க் கொண்டே இருந்திடுவாய்; சொல்லிப் போட்டேன்
வேதாந்த வேதத்தின் வெளிச்சமாமே."

கருத்துரை

இன்னும் கைக்கொள்ள வேண்டிய கட்டளைகள் நிறைய உண்டு. அவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். தாய் தந்தையரைப் போற்ற வேண்டும், பழிவாங்குதல், மோக எண்ணங்கள் முதலான பாவங்களை நினைவிலிருந்து நீக்கி இருளை அகற்ற வேண்டும். மோட்சம் வேண்டும் என நாள்தோறும் ஜெபம் செய்தல் வேண்டும். சத்தியத்தைப் பின்பற்றி வாழ வேண்டும். வேதம் கூறும் வேதாந்தத்தின் வெளிச்சத்தை நான் சொல்லிவிட்டேன்.

விளக்கவுரை : அன்பில் நிலைத்து ஆண்டவரை அணுகுவோம்

11வது பாடலில் பாவ மன்னிப்பாகிய மீட்பைப் பெற்று முக்தி வாழ்வுக்கு கரையேறும் வழியினை தெளிவுபடுத்திய அகத்தியர், இவ்வுலகில் வாழும் காலத்தில் மெய்ப்பொருள் பக்தர்கள் 'ஞானஸ்நானம் பெற்று, அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்தியத்திலும், அப்பம் பிடுதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருப்பதோடு' (அப்போஸ்தலர் 2 : 41,42) மட்டுமின்றி, கைக்கொள்ள வேண்டிய கற்பனையும் (கட்டளையும்) உண்டு என்கிறார்.

பரமகுருவாகிய இயேசு கிறிஸ்து தமது சீடர்களுக்கு 'நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாய் இருக்க வேண்டும் என்பதே என்னுடைய கற்பனையாய் இருக்கிறது' என யோவான்

15 : 12ல் திருவுளம் பற்றியுள்ளார். தாம் கூறியபடியே 'அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூறுகிறோம்' (அன்பு கூறக்கடவோம்) என யோவான் 4 : 19ல் காண்கிறோம்.

பரமபிதாவும் நம்மீதுள்ள தம்முடைய அளப்பரிய அன்பை எப்படி வெளிப்படுத்தினார் என 1 யோவான் 4 : 9–10 கூறுகின்றது – 'தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை (இயேசு கிறிஸ்துவை) இவ்வுலகத்திலே அனுப்பினதால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாக தம்முடைய குமாரனை அனுப்பி...' யாருமே செய்திராத, காட்டியிராத ஒப்பற்ற அன்பை வெளிப்படுத்தினார்.

அந்த அன்பை நாம் நமக்கு எப்படி சொந்தமாக்கிக் கொள்வது? இயேசு கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தினால் அவருடைய கற்பனைகளுக்கு கீழ்படிந்து 'வசனத்தினாலும், நாவினாலும் அல்ல. கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூறக்கடவோம்' (1 யோவான் 3 : 18). அந்த அன்பு சுத்தமான இருதயத்திலும், நல்மனச்சாட்சியிலும், மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கிற அன்பாக (1 தீமோத்தேயு 1 : 5) இருக்க வேண்டும். அதுவே பரமகுரு நமக்கு, நாம் கைக்கொள்வதற்கு கூறும் கற்பனை. 'என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளை கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவிற்கு அன்பாயிருப்பான். நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்' என்று யோவான் 14 : 21லும், 'என் கற்பனைகளைக் கைக் கொண்டிருந்தால் என்னுடைய அன்பில் நிலைத்திருப்பீர்கள்' என யோவான் 15 : 10 லும் இயேசு கிறிஸ்து கூறுகின்றார்.

மேலும் நம்மைப் பெற்ற தாய் தந்தையரைப் போற்றி வாழ வேண்டிய மெய்வாழ்வுப் பண்பினை 'உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும், உன் தாயையும் களம் பண்ணுவாயாக என்பதே வாக்குதத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது' என எபேசியர் 6 : 23ல் திருவசனம் கூறுவதை அகத்தியர் இங்கு உணர்த்துகிறார்.

பாலியல் இச்சைக்கு பயந்தோடு

ஒருவன் ஒருத்தி என்ற (மல்கியா 2 : 15) கடவுள் நியமித்த ஒழுக்க வாழ்வை மீறி பெண்களை ஆண்களும், ஆண்களைப் பெண்களும் மோக இச்சையுடன் நோக்கலும் பாவமாகும். இயேசு கிறிஸ்து 'நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இதயத்தில் அவளோட விபச்சாரம் செய்தாயிற்று' (மத்தேயு 5 : 28) என்று எச்சரிக்கின்றார். பரிசுத்த பவுலும், 'அன்றியும் பாலியத்திற்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்கிறவர்களுடனே நீதியையும்,

விசுவாசத்தையும், சமாதானத்தையும் அடையும்படி நாடு' என 2 தீமோத்தேயு 2 : 22ல் அறிவுறுத்துகின்றார்.

சிவம் வேணும் என்று தினம் செபம் செய்

ஜெபமே ஜெயம்! சிவம் என்று அகத்தியர் இங்கு முக்தியைக் குறிக்கின்றார். வீடு பேறு வேண்டும் என்று தினமும் ஜெபம் செய்ய வேண்டும். ஜெபத்தில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும் (அப்போஸ்தலர் 2 : 42), இடைவிடாமல் ஜெபம் செய்ய வேண்டும் (1 தெச 5 : 17) என ஆவியானவர் திருவசனங்களில் கூறுவதை அகத்தியரும் அறிவுறுத்துகிறார். கீழ்கண்ட பாடல்களில் ஜெப வாழ்வைக் குறித்து அதிகமாக அழுத்தி அகத்தியர் குறிப்பிடுகின்றார்.

'கண்ணீரை விட்டழுது உன் அசுத்தம் போக்கி' – (பாடல் 11)
'சிவம் வேணும் என்று தினம் செபத்தைச் செய்து' – (பாடல் 12)
'செபத்தையே செய்வதற்குச் சீவன் வேணும்' – (பாடல் 13)

இரட்சண்ய மகாகவியும் 'பக்தியாய் செபம் பண்ணவே சுத்தமாய் தெரியாதய்யா. புத்தியோடு உம்மைப் போற்ற நற்சித்தம் ஈந்திடும் இயேசுவே' எனவும் 'அறையில், அந்தரங்கத்திலே நிறையும் அன்போடு நித்தமும் இறைவா உன்னை இறைஞ்சிடும் முறையை எனக்கு அருளும் மூர்த்தியே' என்றும் கெஞ்சுகிறார்.

வேதாந்த வேதத்தின் வெளிச்சமாக மக்களுக்கு அருளிச் செய்துள்ள முக்தி வாழ்வை அடைய, கைக்கொள்ள வேண்டியவற்றை சொல்லிவிட்டேன். சத்தியத்தை பின்பற்றி 'வெளிச்சத்தின் பிள்ளைகளாக' (எபேசியர் 5 : 8) வாழ்ந்திடுவாயாக என அகத்தியர் இறுதியில் அறுதியிட்டு உறுதியாய் இப்பாடலில் உரைக்கின்றார்.

பாடல் 13 : தீட்சை பெற்று கடவுளைத் தேடுங்கள்

"செபத்தையே செய்வதற்குச் சிவன் வேணும்;
செபம் செய்யத் திருச்சித்தம் தேட வேணும்;

பவத்தையே ஒழிப்பதற்குக் கண்ணீர் வேணும்;
பரன்பாதம் அடைவதற்குத் தவசு வேணும்;

அவத்தமாய்ப் பலதானம் பண்ண வேண்டாம்;
ஆறு குளம்தனில் முழ்கி அலைய வேண்டாம்;

சிவன் பேரில் ஆணைப்படி சொல்லிப் போட்டேன்;
தீட்சை பெற்று சிவபாதம் தேடுவாயே!"

கருத்துரை

ஜெபத்தை செய்வதற்கு ஜீவன் வேண்டும், ஜெபத்திலே கடவுளுடைய

திருச்சித்தத்தை தேட வேண்டும். பாவத்தை ஒழிப்பதற்கு மனம் வருந்தி கண்ணீர் சிந்த வேண்டும். கடவுளின் திருவடிகளை அடைவதற்கு தவ வாழ்வு வேண்டும். பயனில்லாத தருமங்களை செய்ய வேண்டாம். ஆறு குளங்களில் மூழ்க ஊர் ஊராக அலைய வேண்டாம். கடவுள் பேரிலுள்ள ஆணைப்படி சொல்கிறேன். தீட்சை (திரு முழுக்கு) பெற்று மோட்ச வாழ்வை தேடுவாயாக.

விளக்கவுரை : என் சித்தமல்ல, உம் சித்தம் பிதாவே

இப்பாடலில் முக்தி வாழ்விற்கு இன்னும் வேண்டியவை எவை, வேண்டாதவை எவை என்றும், ஞானஸ்நானம் எடுப்பதையும், ஜெபவாழ்வையும் மீண்டுமாய் வற்புறுத்துகின்றார் அகத்தியர். ஜெபம் செய்வதற்கு ஜீவன் வேண்டும் என்கிறார். நம் உயிரோடு உயிராக கலந்தவர் பரிசுத்த ஆவியானவர். அவரே நமக்கு ஜீவன். அவரின் துணையோடு நாம் ஜெபம் செய்ய வேண்டும் என்கிறார். 'எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே செபம் பண்ணி....' என திருவசனம் எபேசியர் 6 : 18 கூறுகிறது. ஜீவனுடன், உயிருடன், ஊக்கத்துடன், ஆவியுடன் ஜெபம் செய்ய வேண்டும் என வேத வசனங்கள் நமக்கு உபதேசம் செய்கின்றன.

அடுத்து ஜெபத்திலே நாம் தேவனுடைய திருச்சித்தத்தைத் தேட வேண்டும் என அகத்தியர் தெளிவுபடுத்துகிறார். பிதாவின் திருவுளச் சித்தத்தை நிறைவேற்றவே இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வந்தார். 'என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது' என யோவான் 4 : 34 ல் பரமகுரு கூறுகிறார். சிலுவைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு கெத்சமனே தோட்டத்தில் அவரது ஆத்துமா மரணத்திற்கேதுவான துக்கங்கொண்டிருந்த வேளையிலும் 'என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும், ஆகிலும் என் சித்தப்படியல்ல. உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவது' என்று ஜெபம் பண்ணி தேவனின் சித்தத்தையே நிறைவேற்றினார்.

அடுத்து நாம் கிறிஸ்து பெருமானின் திருநாமத்தினாலே ஜெபம் பண்ண வேண்டும் என அகத்தியர் கூறுகிறார். 'நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன். என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்' (யோவான் 14 : 13,14). தேவனுடைய சித்தத்தை அறிந்து அதற்கு ஆட்பட்டு ஜெபம் பண்ண வேண்டும். 'என் தேவனே, உமக்கு பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன். உமது நியாயப் பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது' என்று சங்கீதக்காரன் சங்கீதம் 40 : 8லும் 'உமக்கு பிரியமானதைச் செய்ய எனக்கு போதித்து அருளும்' என சங்கீதம் 143 : 10லும் கூறுகின்றான்.

'பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவன் எவனோ அவனே

எனக்கு சகோதரனும், சகோதரியும், தாயுமாய் இருக்கிறான்' எனப் பரமகுருவும் மத்தேயு 12 : 50ல் திருவுளம் பற்றுகிறார். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்க நமக்கு கற்றுத் தருகின்றார். நமக்கு ஜெபத்தில் உதவுகிறார் என ரோமர் 8 : 26, 27 திருவசனங்களும் நமக்கு உரைக்கின்றன.

பாவம் போக்கி பரன் பாதம் பற்றுக

பாவத்திற்காக வருந்தி கடவுள் பாதத்தில் தினமும் நாம் கண்ணீர் விட்டு மன்னிப்பு பெற வேண்டும். மனம் வருந்துதலும், செய்த பாவத்தை இனிமேல் செய்ய மறுக்கும் தீர்மானத்தையும் எடுக்க வேண்டும். 'பாவம் செய்கிற எவனும் நியாயப் பிரமாணத்தை மீறுகிறான். நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம்' என 1 யோவான் 3 : 4ல் கூறப்பட்டுள்ளது. இதுகாறும் செய்து வந்த பாவத்தை இனிமேல் செய்ய மறுக்கும் தீர்மானத்தை முழு இருதயத்தோடும் எடுக்கப்படல் வேண்டும். தொடர்ந்து நாள்தோறும் எடுக்கப்பட்டு 'நீ மரண பரியந்தம் உண்மையாய் இரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்கு நான் தருவேன்' என வெளி 2 : 10ல் கூறப்பட்டுள்ளதற்கு இணங்க, சபை கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஜெபம் செய்வதில் உறுதியாய் தரித்திருந்து, பாவத்திலிருந்தும் அதன் தண்டனையிலிருந்தும் தப்பித்து, ஜீவ கிரீடத்தை பெற்றுக்கொண்டு 'பரன்பாதம் அடைய தபசு வேணும்' என தொடர்ந்து உண்மையாய், பரிசுத்தமாய் (தபசு) வாழ வேண்டும் என அகத்தியர் இங்கு குறிக்கின்றார்.

என்னென்ன செய்ய வேண்டும் என்று இதுவரை கூறிய அகத்தியர், இப்போது என்னென்ன செய்ய வேண்டாம் என்றும் கூறுகின்றார். அவத்தமாய் பலதானம் பண்ண வேண்டாம், ஆறு குளந்தனில் மூழ்கி அலைய வேண்டாம் என தான தருமங்கள் செய்வதும், ஆறுகளிலும் குளங்களிலும் பாவம் போகும் எனக் கருதி மூழ்குவதும் எவ்வித பலனும் அளிக்காது, மீட்பை அளிக்காது என்கிறார் அகத்தியர். இங்கு பாம்பாட்டி சித்தரும், சிவவாக்கியரும் கூறும் கருத்தையும் இணைத்து எண்ணுக.

'நாறுமீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்
நாளுங் கழுவினு மதன் நாற்றம் போமோ
கூறுமுடல் பலநதி யாடிக் கொண்டதால்
கொண்டமலம் நீங்கா தென்றாடாய் பாம்பே'

காலை, மாலை நீரிலே முழுகுகின்ற மூடர்காள்
ஊழிகாலம் நீரிலே யுதிக்கும் தேரைக்கென் பலன்
காலமே யெழுந்திருந்து கண்கள் மூன்று தோன்றிலே
மூல, மூல மென்பீராகில் முக்திசேரலாகுமே'

சிவன் பேரில் ஆணைப்படி சொல்லிப் போட்டேன் தீட்சை பெற்றுச் சிவபாதம் தேடுவாயே! எனப் பாடும் அகத்தியர் சிவன் என்று இங்கு கடவுளைக்

குறிப்பிடுகின்றார். கடவுளின் பெயரில் இவைகளை அவருடைய ஆணைப்படி அறிவித்தேன். தீட்சை பெற்று அதாவது ஞானஸ்நானம் எடுத்து மேற்கூறியவைகளை கடைப்பிடித்து முக்தி வாழ்வைத் தேட வேண்டும் என இப்பாடலில் அறிவுறுத்துகிறார்.

பாடல் 14 : மெய்ஞ்ஞானப் பாதை அடைய பத்து மொழி

"தெரிசிப்பாய் புலத்தியனே நன்றாய்க் கேளு;
செப்பினதோர் நூல்கள் எல்லாம் சுட்டுப்போடு;

அரிசிப்பாய் ஓர் வழி மெஞ்ஞான பாதை
அடைவதற்கு அடையாளம் ஒன்று சொல்வேன்

பரிசிப்பாய் பத்துமொழி கையில் கொண்டு
பரப்பிரமம் ஒன்றையே நாடிக் கொண்டு,

வரிசிப்பாய் நிலைதவறா மார்க்கம் தேடி
வணங்கு மந்த மறை புகுந்து வாழுவாயே!"

கருத்துரை

அறிவுள்ளவனே, நான் சொல்வதை நன்றாய்க் கேளு. மேலே நான் குறிப்பிட்ட வேண்டாத நூல்களை எல்லாம் எரித்துப் போடு. ஒரே வழியாகிய மெய்ஞான பாதையில் பத்து கட்டளைகள் உண்டு. அவற்றைக் கைக்கொண்டு பரப்பிரம்மமாகிய கடவுளை மாத்திரமே தேடி, நிலைவராத மார்க்கத்தை அடைந்து திருமறையின் உபதேசத்தின்படி நடந்து அவரையே வணங்கு; பின்பற்று.

விளக்கவுரை : காதுள்ளவன் கேட்கக்கடவன்

வேதாகமத்தில் பலமுறை இந்த வார்த்தை கூறப்பட்டுள்ளது. அகத்தியர் தாம் இதுகாறும் அறிவித்த செய்திகளின் அடிப்படையில் தொடர்ந்து கூறும் செய்திகளையும் நாம் நன்றாக காது கொடுத்துக் கேட்குமாறு பணிக்கிறார். தாம் கடிந்து கூறிய நூல்களை எரித்துப் போடவேண்டும் என்றே கூறுகின்றார். அவற்றின் செல்வாக்கால் பெரிதும் வருந்தத்தக்க நிலையில் மக்கள் மெய்வாழ்வை இழந்து இருப்பதை உணர்ந்து அன்பின் நிமித்தமே இவ்வாறு கடுமையாகக் கூறினார் என்று அறிக. பரமகுருவை தங்கள் மீட்பராக ஏற்றுக் கொண்ட 'மாயவித்தைக் காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டு வந்து எல்லோருக்கும் முன்பாக சுட்டு எரித்தார்கள்' எனவும் 'அவைகளின் கிரயத் தொகை பார்த்து ஐம்பதினாயிரம் வெள்ளிக் காசாகக் கண்டார்கள்' எனவும் அப்போஸ்தலர் 19 : 19 ல் காண்கிறோம். இன்றைய நிலையில் அதன் மதிப்பீடு பல இலட்சங்களை தாண்டும்.

இயேசுவே வழி, வேறொன்றில்லை

மக்கள் விரும்பிப் போற்ற வேண்டிய ஒரே வழியை, மெய்ஞ்ஞான பாதையை அகத்தியர் இங்கே கூறுகின்றார். பரம குருவாம் இயேசு கிறிஸ்துவும் 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்' எனத் திட்டமும் தெளிவுமாக யோவான் 14 : 6ல் அறிவித்துள்ளதைக் காண்க. மெய்ஞ்ஞான பாதையாக விளங்கும் பரமகுருவை அடைய அடையாளமாக பத்து கட்டளைகளை மீண்டும் நினைவு படுத்துகிறார். இவ்வாறு அறிவிக்கப்பட்ட பரப்பிரம்மமாகிய கடவுள் ஒருவரையே அடைந்து அவர் அருளிச் செய்துள்ள நிலை தவறாத மார்க்கத்தைத் தேடி பரம்பொருளை வெளிப்படுத்தும் மறையாகிய வேதாகமத்தை படித்து, அதன்படி வாழ்வாயாக என அகத்தியர் இப்பாடலில் அறிவிக்கின்றார்.

பாடல் 15 : செகசோதியானவரை வணங்குவீர்களாக

"வணங்குவாய் செகசோதி ஒருவனாகி மானிலத்தை
ஒரு நொடியில் வகுத்தே மண்ணில்
குணமான மனிதரையும் படைத்த பின்பு குவலயத்தில்
தான் உதித்துக் குருவாய் வந்து
சனமான சமுசாரம் ஒன்று இல்லாமல் சன்னியாசி போல்
இருந்து தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை இருத்திப்போட்டு அகண்ட தலம்
சென்றவரை அண்டுவாயே."

கருத்துரை

உலகத்தின் ஒளியாக வந்த அந்த ஒருவரையே வணங்குவாயாக. இந்த உலகத்தை அவர் ஒரே ஒரு நொடியில் உண்டாக்கினார். மனிதரை பூமியின் மண்ணினாலே உண்டாக்கினார். பின்பு இந்த உலகில் அவர் குருவாக வந்து தோன்றினார். மனைவி பிள்ளைகள் என்று யாரும் இல்லாமல் சன்னியாசியாக வாழ்ந்து தவவாழ்வை (பரிசுத்தமான வாழ்வை) மக்களுக்குக் காட்டினார். பின்னர் தம்மில் அன்பு பூண்டு ஒழுகிய சித்தர்களாகிய பன்னிரு அப்போஸ்தலர்களை உலகத்திலே தமது ஊழியத்தை தொடர்ந்து செய்வதற்கு விட்டுவிட்டு விண்ணுலகத்திற்கு சென்றார். அவரைச் சேர்ந்து கொள்வாயாக.

விளக்கவுரை

இப்பாடலில் பரமகுருவாம் இயேசு கிறிஸ்துவின் வரலாற்றை இரத்தினச் சுருக்கமாக அகத்தியர் கூறி தெளிவிக்கிறார். அவரையே வணங்கி சேர்ந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கின்றார்.

வணங்குவாய் செகசோதியான ஒருவரையே

'நான் உலகத்தில் இருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்' - (யோவான் 9 : 5)

'அவரிடம் சேருகின்ற எவரையும் பிரகாசிப்பிக்கின்ற மெய்யான ஒளியாக இருக்கின்றார்' - (யோவான் 1 : 4, 5, 9)

'ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனிதருடைய கிரியைகள் பொல்லாதவைகளாக இருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாக இருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப் படாதபடிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு ஒளியினிடத்தில் வருகிறான்' - (யோவான் 3 : 19-21)

இயேசு கிறிஸ்துவே மெய்யான ஒளியாக இருக்கிறார் என பல திருவசனங்கள் கூறுகின்றன. இராமலிங்க வள்ளலாரும் 'அருட் பெருஞ்சோதியே தனிப்பெருங் கருணையே' என கிறிஸ்து பெருமானைத் தவிர வேறு யாரையுமே அவ்வாறு குறித்துக் கூறி இருக்க இயலாது என்பதை அதன் பொருளாலும் தெளிவு பெறலாம். மகாகவி கிருஷ்ணபிள்ளையும் கடவுளை 'கருணையங்கடலே, அந்தகாரமாம் வினையைப் போக்கும் அருணனே'. என்றும் 'வேதமே, வேத வெளிச்சமே' என்றும், 'மெய்யொளியே, வெஞ்சுடரே அகண்டகார சோதியே' என்றும் பாடுகின்றார்.

கௌதமர் 'சற்குருவே பேரொளியாய் நின்ற சோதியே' என்றும், சிவ வாக்கியர் 'சுருக்கமற்ற சோதியே' எனவும் பாடுகின்றனர்.

'இருக்குநாலு வேதமும் எழுத்தறவே ஓதினும்
பெருக்க நீறு பூசினும் பிதற்றினும் பிரான் இரான்
உருக்கி நெஞ்சை உட்கலந்து உண்மை கூற வல்லிரால்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்து கூடலாகுமே'

நாமக்கல் கவிஞரும் கிறிஸ்து பெருமானை பின்வருமாறு பாடுகின்றார்.

'ஏசுநாதன் என்ற பெயரை எங்கிருந்தே எண்ணினும்
ஏழை மக்கள் தோழனாக அங்கு நம்மை நண்ணுமே,
தேசுமிக்க தியாகமேனி தெய்வதீப சோதியாய்த்
தீமையான இருளை நீக்கி வாய்மை அன்பு நீதியாய்ப்
பாகமாகப் பரிவு கூறிப் பக்கம் வந்து நிற்குமே
பகைவருக்கும் அருள் சுரக்கும் பரமஞானம் ஒக்குமே,

ஈசனோடு வாழவைக்கும் ஏசுபோத இச்சையை
இடைவிடாத யாவருக்கும் எதிலும் வெற்றி நிச்சயம்'

மானிலத்தை ஒரு நொடியில் படைத்தார்

உலகப் படைப்பின் வரலாற்றை கடவுள் விண்ணுலகம், மண்ணுலகம் யாவற்றையும் அதிலுள்ள அனைத்து ஜீவராசிகளையும், மனிதனையும் எப்படி உண்டாக்கினார் என வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் இரண்டு அதிகாரங்களில் அறிகிறோம்.

'ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்' - ஆதியாகமம் 1:1

'கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனைகளும் உண்டாக்கப்பட்டது' - சங்கீதம் 33 : 6

'நீர் ஒருவரே கர்த்தர். நீர் வானங்களையும், வானாதி வானங்களையும் அவைகளுடைய சர்வ சேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர்' - நெகேமியா 9 : 6

'நீங்கள் இந்த வீணான தேவர்களை விட்டு வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளில் உள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று உங்களுக்கு பிரசிங்கிக்கிறோம்' - அப்போஸ்தலர் 14 : 15

'இவரைக் கொண்டு (கிறிஸ்து) உலகங்களை உண்டாக்கினார்' - எபிரேயர் 1 : 2

'தேவன் தம்முடைய சாயலாக மனிதனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார்' -ஆதியாகமம் 1 : 26

'தேவனாகிய கர்த்தர் மனிதனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனிதன் ஜீவாத்துமாவானான்' - ஆதியாகமம் 2 : 7-12

'குணமான மனிதன்' என மனிதன் தேவசாயலில் படைக்கப்பட்டதை சுட்டிக் காட்டியுள்ளார். மனிதன் தேவ கட்டளையை மீறி பாவத்திற்கு உட்பட்டபோது இதன் சாயலை இழந்தான்.

'எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்கள் ஆனார்கள்' என ரோமர்

3:23 திருவசனம் கூறுகிறது. கடவுளுடைய கட்டளைக்கு கீழ்படியாத பாவத்திற்கு தண்டனையாக மரணம் விதிக்கப்பட்டது. இந்த வரலாற்றை ஆதியாகமம் 31 : 14ல் காண்கிறோம்.

'பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும். குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை. தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தை சுமக்கிறதுமில்லை. நீதிமானுடைய நீதி அவன் மேல்தான் இருக்கும். துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன் மேல் தான் இருக்கும்' - எசேக்கியல் 18 : 20

'எல்லா மனிதரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது.. மரணமானது ஆதாமின் மீறுதலுக்கொப்பாய் பாவஞ் செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது' - ரோமர் 5 : 12-14

பாவம் நீக்க பரமகுரு பிறந்தார்

மனிதன் பாவம் செய்த போதிலும் கடவுள் அவனுக்குக் கொடுத்த உலகத்திற்குரிய ஆசீர்வாதங்களை எடுத்துப்போடவில்லை. அந்த ஆசீர்வாதங்களை அவன் துன்பங்களோடே அனுபவிக்க வேண்டியதாயிற்று. பாவத்தின் நிமித்தம் அடைந்த தண்டனையிலிருந்து மனுக்குலத்தை மீட்கும் பொருட்டு, அவர்கள் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு தம்முடைய குமாரனான இயேசு கிறிஸ்துவை நமது பாவங்களுக்கு பரிகாரபலியாக கல்வாரி சிலுவையிலே ஒப்புக் கொடுப்பதற்காக கன்னி மரியாளின் வழியாக உலகத்தில் பரமகுருவாக தோன்றினார்.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் தோன்றிய வரலாற்றை மத்தேயு 1 : 18–25ல் காணலாம். இயேசு கிறிஸ்து இவ்வுலகில் பிறந்தது ஒரு கற்பனைக் கதையல்ல. 2000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு உண்மைச் சம்பவம். கிறிஸ்துவின் பிறப்பு சிரியா நாட்டிலே சிரேனியு என்ற மன்னன் காலத்தில் செய்யப்பட்ட குடிமதிப்பில் (சென்சஸ் ரிப்போர்ட்) எழுதப்பட்டுள்ளது.

கிறிஸ்துவின் பிறப்பும், சிலுவை மரணமும் ஏதோ தற்செயலாக நடந்த ஒரு நிகழ்வு அல்ல. அது கடவுளின் சித்தப்படி முன் குறிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 740 ஆண்டுகளுக்கு முன்பாகவே ஏசாயா தீர்க்கதரியால் ஏசாயா 7 : 14, 9 : 6 திருவசனங்களில் உரைக்கப்பட்டது. 'ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார். இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவாள்'. (இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தம்). 'நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு எனப்படும்.'

சர்வ வல்ல தேவனாகிய இயேசு கிறிஸ்து நமக்காக, நமது பாவங்களுக்காக, மீறுதல்களுக்காக நமக்கு கிடைக்கவேண்டிய ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து, நித்ய மரணத்திலிருந்து விடுதலை தர மனித அவதாரமாக, மாம்சமாக இவ்வுலகில் வெளிப்பட்டார். உலகத்தாரின் பாவங்கள் அனைத்தையும் தம்மீது ஏற்றுக் கொண்டார். பாவமே அறியாத, செய்யாத அவர் நமக்காக பாபமானார், சாபமனார், பலியானார் . 'கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்' என 1 கொரி. 15 : 1–5 திருவசனம் தெளிவாகக் கூறுகிறது.

'இயேசு கிறிஸ்துவாலே அன்றி வேறோருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை' –(அப்போஸ்தலர் 4 : 12). அவர் பாவத்தை வெறுத்தார். ஆனால் பாவிகளை நேசித்தார். இயேசு என்ற கிரேக்க வார்த்தைக்கு 'பாவத்திலிருந்து இரட்சிக்கிறவர்' என அர்த்தம். 'பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு இவ்வுலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும், எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது' என திருவசனம் 1 தீமோத்தேயு 1 : 15 கூறுகின்றது

குவலயத்ன தப படைத்தவர் குருவாக வந்தார். கு = இருள், ரு = நீக்குதல். குரு என்றால் பாவமாகிய இருளை நீக்குபவர் என்று அர்த்தம். இயேசு கிறிஸ்து நமது பாவங்களை மன்னிக்க, பரலோகத்திற்கு வழி நடத்த, நித்ய ஜீவனை நமக்குத் தருவதற்காக குருவாக, பரம குருவாக வந்து நாம் நடக்க வேண்டிய வழிகளை அறிவித்திருக்கிறார். அவர் ஒருவரே நமக்கு குருவாக, ஆசானாக, ஆசாரியனாக, பரம ஆசாரியனாக, பிரதான ஆசாரியனாக இருக்கத் தகுதியானவர். ஆகவேதான் வேதாகமம் மிகத் தெளிவாக இதை 'நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாயிருக்கிறார்' என மத்தேயு 23 : 10ல் கூறப்பட்டு இருக்கிறது. மற்றவர்களை நாம் குரு ஸ்தானத்தில் வைக்கவும்கூடாது. அப்படி எண்ணுவதுவும் பாவமே.

பரிசுத்தராய் வாழ்ந்து பரமேறினார்

இல்லற வாழ்வில்லாமல் சன்னியாசி போல ஒரு பரிசுத்த வாழ்வு வாழ்ந்து மக்களை மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்து மேற்கொண்ட தவ வாழ்வை வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நால்வரும் தங்களுடைய நற்செய்தி ஆகமங்களில் எழுதியுள்ளனர். தமக்குப் பின்னர் அவரது திருப்பணியை தொடர்ந்து செய்ய அவர் பன்னிரு அப்போஸ்தலர்களையும் ஆயத்தப்படுத்தி, தர்சு பட்டிணத்து பவுலையும் இந்த ஊழியத்திற்கு அழைத்து, அவர் உயிருடன் எழுந்த பின்னர் 40 நாட்கள்

உயிருடன் நடமாடி, அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கையில் பரமேறி செல்லும்போது 'என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளரே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் நினைவூட்டுவார்' (யோவான் 15 : 26) எனக் கூறியபடி பரிசுத்த ஆவியானவரை அனுப்பி வைத்து, பரமகுருவுக்குள் வாழ வேண்டிய போதனைகளை வெளிப்படுத்தி வருகிறார்.

இப்பாடலில் ஜெகஜோதியாம் பரமகுருவானவரை விவரமாகக் காட்டி அவரை மக்கள் அண்டிக்கொள்ள வேண்டும் என்று அகத்தியர் அறிவுறுத்துகிறார்.

பாடல் 16 : ஒன்றான மார்க்கம்

"அண்டாமல் இருப்பது என்ன என்று கேட்டால்
ஐயையோ சீவன் காற்று அகஸ்தியா என்னும்

ஒன்றான மார்க்கமதை விரித்துக் காட்டி உலகமதில்
இந்நூலை விரிக்கச் செய்து

தண்டாமல் பொதிய மாமலையில் என்னைத் தாபித்துத்
தயங்காமல் இருக்கச் சொல்லி

ஒன்றான பரப்பிரமம் சொன்னார் சொன்னார்
ஓகோகோ புலத்தியனே உரைத்திட்டேனே."

கருத்துரை

கடவுளைச் சென்று அடையாமல் இருப்பது என்ன அகத்தியா என்று என்னைக் கேட்டால், அவர் படைத்த ஆத்துமாக்கள்தான். ஐயையோ! இதனை நான் என்னவென்று சொல்லுவேன்! ஒன்றான பரப்பிரம்மாகிய கடவுளை மக்களுக்கு அருளிச் செய்துள்ள ஒரே மார்க்கத்தை உலகத்தவர்க்கு இந்த நூலில் விரிவாகக் காட்டும்படி கட்டளையிட்டார். பின்னர் என்னைப் பொதிகை மாமலையிலே தங்கியிருக்கக் கட்டளையிட்டார். ஓ புலத்தியனே, அவர் சொன்னபடி உரைத்துவிட்டேன்.

விளக்கவுரை : ஈசன் காட்டும் ஈடேற்ற வழி இதுவே

15வது பாடலில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை விபரத்தை கூறி அவரை அண்டிக் கொள்ள வேண்டும் என்று கூறிய அகத்தியர், தேவனிடம் ஜீவகாற்றைப் பெற்று ஜீவாத்துமாவான மனிதர்கள் இன்னும் அவரைத் தேடி அண்டி வாழாமல் இருக்கின்றார் என மிகவும் கவலையோடு பதறிப்போய் கூறுகின்றார். மக்கள் ஈடேற்றம் அடைவதற்குரிய ஒரே மார்க்கம் இந்த உலகத்திலே மெய்ப்பொருளான இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தியுள்ள மார்க்கம் மாத்திரமே. வேறு எந்த மார்க்கத்தின் மூலமாகவும் ஈடேற்றம் இல்லை என்பதை

ஒரே பரப்பிரம்மாகிய கடவுள் எனக்கு இட்ட கட்டளையின்படி புலத்தியனே நான் உரைத்து விட்டேன். பின் கடவுளின் ஆணைப்படி பொதிகை மலை சென்று அவர் கட்டளையை நிறைவேற்றிய திருப்தியோடு கவலையின்றி வாழ்வேன் என கூறுகின்றார். திருநெல்வேலி அருகில் உள்ள பொதிகை மலையில் அகத்தியருக்கு இன்றும் ஒரு கோயில் உள்ளது என்று அறிக. கடவுளின் ஆணைப்படி இந்நூல் செய்ததை அகத்தியர் தமது பாடல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் குறிப்பிட்டு கூறுகின்றார்.

'அரனார் உத்தரவுப்படி அறிவித்தேனே' – பாடல் 7
'சிவன் பேரில் ஆணைப்படி சொல்லிப் போட்டேன்' – பாடல் 13
'பரமகுரு சொன்னபடி பாடினேனே' – பாடல் 30

இதனால் இந்நூல் அகத்தியரின் சுய சித்தப்படி அல்ல, கடவுளின் திருவருள் ஆணைப்படியே ஒன்றே ஒன்றான மார்க்கத்தை விரித்து உலகத்துக்கு காட்டியிருக்கிறார் என்பது தெளிவு.

பாடல் 17 : மக்கள் தேட வேண்டிய சித்தர்கள்

"அரிபாதம் அரிச்சை செய்யும் சித்தர் எல்லாம்
ஆசை முறை தானடக்கி, அன்பதாகும்

பொறியகந்தைத் தானடக்கிப் பொசிப் பொடுக்கி
பூரணத்து ஞானம் அதைப் பிரசங்கித்து

சரியாக ஆத்துமத்தின் கசட்டைத் தீர்க்கும்
சற்குருவைத் தேடிப் போய்ச் சடங்கு செய்து

அரிபாதம் காண்பிப்பார் சித்தர் உண்டு; அம்புவியில்
அவர்களை நீ தேடுவாயே!"

கருத்துரை

கடவுளின் திருவடிகளை ஆராதித்து வழிபடும் சித்தர்கள் அனைவரும் உடலின் ஆசைகளை எல்லாம் அழித்து, கடவுள் காட்டிய அன்பின் வாழ்வை மேற்கொண்டு, மரணத்தின் அகந்தையை ஒழித்து, பசி மற்றும் ஐம்புலன்களின் ஆசைகளுக்கு மரித்து, பரிபூரண பரம்பொருளாம் இறைவனுடைய சத்தியத்தை பிரசங்கம் செய்து, ஆத்துமாவின் பாவங்களை அறவே தீர்ப்பார்கள். சற்குருவாகிய மீட்பரை தேடிச் சென்று உரிய கிரியைகளை கடைப்பிடிக்க வைத்து, கடவுளின் திருவடிகளை சென்றடையச் செய்வார்கள். இந்த உலகத்தில் அத்தகையவர்கள் உண்டு. அவர்களையே நீ தேடுவாயாக.

விளக்கவுரை : மனந்திரும்புங்கள் மறுபிறவி இல்லை

'பாவம் செய்யும் ஆத்துமாவே சாகும்' – எபே 18 : 20.

'அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதும் மனிதருக்கு நியமிக்கப்பட்டு இருக்கிறது' - எபி 9 : 27.

ஆத்துமாவுக்கு அழிவில்லை. மனிதர்க்கு அவரவர்களின் செயல்களுக்கேற்ப பல பிறவிகள் உண்டு என்பதெல்லாம் வெறும் மனிதக் கற்பனை. பாவம் செய்வோமானால் நமது ஆத்துமா துடிதுடித்து வேதனைப்படும். கொஞ்சம் கொஞ்சமாக நரக வேதனையில் யுகயுகமாக அவஸ்தைப்பட்டு, மரித்தால் நன்றாக இருக்குமே, ஐயோ இந்த வேதனையைத் தாங்க முடியவில்லையே என ஒவ்வொரு வினாடியும் துடித்துக் கலங்கி, அணு அணுவாக சித்திரவதைப்படும்.

ஆத்துமாவிற்கு மறுபிறவி இல்லை. ஆத்துமாவின் பாவம் இவ்வுலகத்தில் நாம் இந்த ஊனுடம்போடு இருக்கும் போதே தீர்க்கப்பட வேண்டும். அந்தப் பாவங்களை மன்னித்து அவைகளை கழுவ வல்லவர் இவ்வுலகிற்கு சற்குருவாக வந்த இயேசு கிறிஸ்து மாத்திரமே.

'ஏனெனில் அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது' - கொலோ 1 : 14

'அவராலே அன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் மனிதர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை' - அப்போஸ்தலர் 4 : 12

'நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்' - யோவான் 14 : 6

என பரமகுருவாகிய இயேசு கிறிஸ்து திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

சீரிய வழி நடத்தும் சித்தர்கள்

இதையே அகத்தியர் 'சரியாக ஆத்துமத்தின் கசட்டைப் போக்கும் சற்குரு' என இயேசு கிறிஸ்துவைச் சுட்டிக் காட்டுகிறார். அந்த மெய்ப்பொருளாம் இம்மானுவேல் கிறிஸ்துவினிடம் மக்களை வழி நடத்தி முடிவில் கடவுளின் திருப்பாதம் சென்றடையச் செய்யும் சித்தர்கள், அப்போஸ்தலர்கள், போதகர்கள், ஊழியக்காரர்கள் இவ்வுலகில் உண்டு என்கிறார். அகத்தியர் காட்டும் இச்சித்தர்கள் 'பூரணத்து ஞானமதை பிரசிங்கித்து' சற்குருவினிடத்தில் வழி நடத்துவார்கள் என்கிறார்.

'ஞானத்தின் பூரணமாக விளங்குபவர் கிறிஸ்து பெருமான் ஒருவரே. அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது' - கொலோ 2 : 3

'தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் ஞானப்பிரகாரமாக அவருக்குள் வாசமாய் இருக்கிறது' - கொலோ 1 : 19, 2 : 9

'அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லோரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம்' - யோவான் 1 : 16

'அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்' - 1 கொரி 1 : 24, 31

இயேசு கிறிஸ்து ஒருவரே இந்த உலகத்தின் ஞானமாக, நமக்கு ஞானம் கொடுப்பவராக இருக்கிறார். ஞானத்தின் பூரணமாகிய இயேசு கிறிஸ்துவையே இச்சித்தர்கள், ஊழியக்காரர்கள் பிரசிங்கிப்பார்கள். இந்தப் பிரசங்கம் சிலருக்குப் பைத்தியமாக தோன்றலாம். இவ்வுலகத்தின் ஞானத்தை பைத்தியமாக்குகிற தேவன் 'பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று' என 1 கொரி 1 : 20,21 கூறுகின்றது. பேதுரு பெந்தகோஸ்தே என்னும் ஐம்பதாம் திருநாளன்று முழுமையான நற்செய்தியை அறிவித்த போது சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவையே பிரசிங்கித்தார். பரமகுருவின் மற்ற சீடர்களும் ஜனங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து இயேசு கிறிஸ்துவின் மரணத்தையும், அவரின் உயிர்த்தெழுதலையுமே பிரசங்கித்தார்கள். பரமகுருவின் இரண்டாம் வருகை மட்டும் பிரசங்கம் செய்ய வேண்டிய மெய்ப்பொருளும் இதுவேயாம். இப்பிரசங்கங்கள் கடந்த 2000 ஆண்டுகளாக நிகழ்ந்து வருகின்றது. இனியும் இது தொடர்ந்து நிகழும்.

அப்படிப் பிரசங்கிக்கிற சித்தர்கள் யாவர் என்றும், அவர்களின் பண்பையும் அகத்தியர் விவரிக்கின்றார். இவர்கள் இறைவனின் திருவடிகளில் சரணம் அடைந்து இவ்வுலகத்திற்குரிய தங்களின் உடலின் ஆசை இச்சைகளை கிறிஸ்துவுடன் சிலுவையில் அறைந்து, அவரில் பரிசுத்த ஆவியானவர் மூலமாக பரிசுத்தமாகி புத்துயிர் பெற்று புது சிருஷ்டியாக 'நாம் இனிப் பாவத்திற்கு ஊழியம் செய்யாதபடிக்கு பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனிதன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்' (ரோமர் 6 : 6) என உணர்ந்து அறிவித்தவர்கள். அப்படி நடக்கும் இந்த சித்தர்களே பரமகுருவின் இரண்டாம் வருகை மட்டும் அவருடைய நற்செய்தியை பிரசங்கம் செய்ய வேண்டியவர்கள் (மத் 28 : 18–20).

இப்பூமியிலே இவ்வாறு ஊழியம் செய்யும் சித்தர்கள், ஊழியக்காரர்கள் உண்டு. அப்பேர்ப்பட்டவர்களைத் தேடி அவர்களிடம் மெய்வாழ்வு குறித்து தெளிவு பெற்றுக்கொள்ள வேண்டும். 'தேடுங்கள் கண்டடைவீர்கள்' என பரமகுரு சொன்னது போல கடவுள் திருவடிகளை அடைவதற்கு அவர்கள் உதவுவார்கள் என அகத்தியர் அறிவுறுத்துகிறார்.

பாடல் 18 : கண்ணீரால் கழுவுவாயே

"தேடுவாய் புலத்தியனே நன்றாய்க் கேளு; தீக்கிடங்கைத்
தேடாதே தெளியச் சொன்னேன்

பாடுவார் பதினெட்டுப் புராணங்கட்கும்
பாரதமும் கட்டப்பா பரிகாசங்கள்

நாடதனில் பிராமணர்கள் பிழைக்கச் செய்த
நவக்கிரகக் கட்டப்பா; நம்ப வேண்டாம்;

ஓடுவார் அருள் பாதம் பூசை செய்து
உத்தமனே கண்ணீரால் கழுவுவாயே."

கருத்துரை

ஞானமுள்ளவனே, நான் தேடச் சொன்னதை நன்றாகத் தேடு. நான் சொல்வதையும் காது கொடுத்துக் கேட்கக் கடவாய். உனக்கு எல்லாவற்றையும் தெளிவாய்ச் சொன்னேன். இவற்றைக் கேட்ட பிறகும் தீக்கிடங்கான நரகத்தை தேடிச் செல்லாதே. பதினெட்டுப் புராணங்களும், மகாபாரதமும் வெறும் கட்டுக் கதைகள், பரிகாசங்கள் நிறைந்தவை. நாட்டில் பிராமணர்கள் பிழைப்பதற்காகக் கட்டி விட்ட நவக்கிரகக் கதைகள் அவை. அவைகளை நம்ப வேண்டாம். திருவருள் நிறைந்த கடவுளுடைய திருவடிகளைப் போற்றி உத்தமனே நீ உன்னுடைய கண்ணீரால் கழுவுவாயாக.

விளக்கவுரை

இப்பாடலிலும் அகத்தியர் மெய்வாழ்வையும் அதற்கு நேர் எதிரான நரகத்தையும் விளக்கிக் காட்டி மெய் வாழ்வைத் தேடி அடையுமாறு அன்புடன் அறிவுறுத்துகிறார். முந்திய பாடலில் அகத்தியர் அறிவுறுத்திக் காட்டிய சித்தர்களைத் தேடி மெய்ப்பொருளை அடையாவிட்டால் நரகத்தில் எப்போதும் பற்றி எரிந்து கொண்டிருக்கும் தீக்கிடங்கான எரிநரகத்தில் சதா காலத்திற்கும் நாம் அவதிப்படுவோம் என எச்சரிக்கிறார்.

நரகமா? சொர்க்கமா? நலமானதைத் தேடு

நரகம் என்று ஒன்று இருக்கிறது. மரணத்திற்குப் பிறகும் நமக்கு ஒரு வாழ்க்கை இருக்கிறது. இப்பூலோக இம்மை வாழ்வானது 70 அல்லது 80 வருடங்கள் மட்டுமே. இப்பூவுலக மரணத்திற்குப்பின் உள்ள மறுமை வாழ்க்கை நித்தியமானது. அந்த நித்திய வாழ்க்கையை நாம் எங்கே கழிக்கப் போகிறோம்? சொர்க்கத்திலா? நரகத்திலா? இரண்டுமே இருக்கிறது. இப்பூலோக வாழ்வில் பாவத்திற்கு விலகி நன்மைகள் செய்து பரிசுத்தமாக பரம்பொருளின் சித்தப்படி தம்மை நேசிப்பது போல பிறரையும் நேசித்து வாழ்பவர்களும் உண்டு. பாவமே

ஜீவியமாக அநீதிகளையும் அக்கிரமங்களையும் கொடுமைகளையும் அதர்மங்களையும் அட்டுழியங்களையும் தேவனுக்குப் பிடிக்காத விக்கிரஹ ஆராதனை, விபச்சாரம், வேசித்தனம் போன்ற அனைத்து செயல்களையும் சாத்தானின் தூண்டுதலில், பிசாசுகளுக்கு அடிமைகளாகி, அந்தகார சக்திகளின் வழி நடத்துதல்களின்படி செய்கின்ற மனிதர்களும் இப்பூவுலகில் இருக்கின்றார்கள்.

நீதிமானும் மரிக்கின்றான். அநியாயக்காரனும் மரிக்கின்றான். இருவரும் அடக்கம் செய்யப்படுகின்றனர். மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட உடம்பு மண்ணுக்கே திரும்புகின்றது. தேவனிடமிருந்து ஜீவசுவாசத்தை பெற்றுக்கொண்ட ஜீவாத்துமா, ஆத்துமாவைக் கொடுத்தவரிடமே திரும்பச் செல்லுகின்றது. இரு ஆத்துமாவையும் தேவன் ஒரே இடத்தில் வைப்பாரா? தேவன் நீதியுள்ள நியாதிபதி (சங்கீதம் 7 : 11). அவர் பட்சிக்கின்ற அக்கினி (உபாகமம் 4 : 24). அவனவன் செய்த கிரியைகளுக்குத் தக்க பலனை, தீர்ப்பைத் தருவார். எந்த பட்சபாதமும் இருக்கப் போவதில்லை. சிலருக்கு தண்டனையை இந்த பூமியிலேயே அனுபவிக்கும்படி செய்கிறார். மற்றவர்கள் மரணத்திற்குப் பின்னும், நியாயத் தீர்ப்புக்குப் பிறகு இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலியே தள்ளப்படுவார்கள்.

சொர்க்கமும் நரகமும் சொப்பனமல்ல, சத்தியம்

சொர்க்கமும் நரகமும் மனிதனின் அதீதக் கற்பனை அல்ல. அவைகள் நிஜம். மனோதத்துவரீதியாக மக்களை பயமுறுத்துவதற்காக எடுத்துக் கூட்டி சொல்லப்படுகிற, இல்லாத ஒன்றல்ல. சாட்சி கூறும்படியாக தேவன் சிலருக்கு நரகத்தை காட்டியும் உள்ளார். அப்படிக் காட்டப்பட்டவர்களில் ஒருவர் விருது நகரிலிருந்து ஒளிபரப்பாகும் Blessing TV யின் நிறுவனர் சகோ. ஆலன் பால் அவர்கள். அவர் கண்டு நடுங்கி உணர்ந்தவைகளை, கண்ணாரக் கண்டவைகளை நரகம் என ஒரு ஒலி நாடாவாக வெளியிட்டுள்ளார். அதை வாங்கிக் கேட்டுப் பாருங்கள். அவருடைய டி.வி. செய்தியிலும் பலமுறை நரகம் பற்றிக் கூறியுள்ளார்.

ரஷ்ய தேசத்தில் ஓரிடத்தில் எண்ணெய், எரிவாயுவிற்காக ராட்சத கருவிகளைக் கொண்டு பூமியில் பல்லாயிரம் அடி துளையிட்ட போது பூமியின் அடியில் பல அலறலையும், அழுகைக்குரலையும், கூக்குரலையும், வேதனைக் குரல்களையும் கேட்டு அதை அப்படியே ரிக்கார்டிங் செய்து பல்வேறு நாடுகளில் போட்டுக் காட்டியுள்ளனர். இது பற்றிய செய்தி உலகப் பத்திரிக்கைகள் அனைத்திலும் வெளிவந்துள்ளன. இதுபோன்று அனேகம் சாட்சிகள், ஆதாரங்கள், ஆராய்ச்சி முடிவுகள், விளக்கங்கள், நூல்கள் என பல உள்ளன. அவைகள் அனைத்தையும் இங்கு விளம்பின் நூல் நீண்டு பெரிதாகும் என இத்துடன் அமைகிறோம்.

பற்றி எரியும் பாதாளக்குழி நரகம்

பரிசுத்த வேதாகமத்தில் எரிநரகம் பற்றி பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. வேதம் சத்தியமானது. வேதம் கூறும் சில திருவசனங்களையும், நரகத்தில் கொடுமை எப்படி இருக்கும் என்பதற்கு சில எடுத்துக்காட்டுகளை மாத்திரம் இங்கு காண்க.

'அவனுக்குப் பாதாளக் குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது. அவன் பாதாளக் குழியைத் திறந்தான். உடனே பெருஞ் சூளையின் புகையைப் போல அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்பட்டது' - வெளி 9 : 1, 2

'மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன் மிருகமும், கள்ள தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதா காலங்களிலும் வாதிக்கப்பட்டார்கள்' - வெளி 20 : 10

'மனிதகுமாரன் (இயேசு கிறிஸ்து) தம்முடைய தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவருடைய இராச்சியத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும்' - மத் 13 : 41, 42

'பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக் குட்டியானவருக்கு (இயேசு கிறிஸ்து) முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவார்கள். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும். மிருகத்தையும், அதன் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதனுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதல் இராது' - வெளி 14 : 10, 11

'பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரக ஆராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்' - வெளி 21 : 8

'ஜீவப்புத்தகத்திலே எழுதப்பட்டவராக காணப்படாதவன் எவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்' - வெளி 20 : 15

எரி நரகத்தில் எப்போதும் வேதனை

பாதாளமும், அக்கினிச் சூளையும். எரிநரகமும், அக்கினியும், கந்தகமுமான கடலும் உள்ளது என்பதை பூமியின் மையத்தில் இருக்கும் மிகுதியான வெப்பத்தைக் கொண்டும், உலகின் பல பாகங்களில் உள்ள எரிமலைகள் வெடித்துச் சிதறிக் கக்கும் அக்கினிக் குழம்பு ஆறாக ஓடுவதையும், அங்கு புகையும், சாம்பலும் வெளி வந்து அந்தப் பகுதி முழுவதும் கருப்பாவதையும் தொலைக்காட்சி செய்தியில் பலமுறை நாம் கண்டிருக்கிறோமே. எத்தனையோ இடங்களில் வெப்ப நீரூற்றுக்களையும், கடலுக்கடியில் இருக்கும் எரிவாயுவையும் நாம் அறிந்து அதையும் எடுத்து பயன்படுத்துகிறோமே.

சதா சர்வகாலத்திற்கும் இரவும் பகலும் யுகயுகமாக இடைவெளி இன்றி, இளைப்பாறுதல் இன்றி நித்தியத்திற்கும் நெருப்பிலே, அக்கினிச் சூளையிலே, கந்தகமும் அக்கினியுமாகிய கடலிலே தகிக்கும் நெருப்பால், கொழுந்துவிட்டு எரியும் அதன் தீப்பிழம்புளால் நமது உடம்பு பற்றிப் பிடித்து எரிந்து, வெந்து, உருகி, பாளம்பாளமாக வெடித்து சிதறும் போது ஏற்படும் தாங்க முடியாத, நம்மால் நினைத்தும், கற்பனை செய்தும் பார்க்க முடியாத கொடூரமான துடிப்பையும், துன்பத்தையும், துயரத்தையும், வேதனையையும், வாதையையும், பற்கடிப்பையும், அழுகையையும், அலறலையும், கதறலையும் சற்றே நினைத்துப்பாருங்கள். அதைக் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? நினைக்கவே நெஞ்சம் நடுங்குகின்றதே. அதுதான் இரண்டாம் மரணம்!

ஜீவனும் மரணமும் உனக்கு முன்பு - எது வேண்டும்?

'பட்சிக்கும் அக்கினிக்கு முன்பாக தரித்திருப்பவன் யார்?' என மிகப் பெரிய கேள்வியை ஏசாயா 33 : 14 நம்மிடம் கேட்கிறது.

> *'இதோ ஜீவனையும், நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்பாக வைத்தேன். நீ பிழைத்துப் போகும்படிக்கும், நீ சுதந்தரிக்கிற தேசத்திலே உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கும், நீ உன் தேவனாகிய கர்த்தரில் அன்பு கூறவும், அவர் வழியில் நடக்கவும், அவர் கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களைக் கைக்கொள்ளவும், நான் இன்று உனக்கு கற்பிக்கிறேன். நீ கேளாதபடிக்கு மனம் பேதித்து, இழுப்புண்டு போய் வேறே தேவர்களைப் பணிந்து அவர்களை சேவிப்பாயானால், நீங்கள்...நெடுநாள் வாழாமல் நிச்சயமாய் அழிந்து போவீர்கள் என்பதை இன்று உங்களுக்கு அறிவிக்கிறேன். நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சியாக வைக்கிறேன். ஆகையால் நீயும் உன்*

சந்ததியும் பிழைக்கும்படிக்கு ஜீவனைத் தெரிந்து கொண்டு... உன் தேவனாகிய கர்த்தரில் அன்பு கூர்ந்து, அவர் சத்தத்திற்கு செவி கொடுத்து, அவரைப் பற்றிக் கொள்வாயாக. அவரே உனக்கு ஜீவனும், தீர்க்காயுசுமானவர்' - உபாகமம் 30 : 15-20

திருவசனங்களில் தேவன் தெள்ளத் தெளிவாக தமது திருவுளம் பற்றியுள்ளார்.

பதினெட்டுப் புராணங்களும் பிராமணர்கள் பிழைக்கவே

பதினென் புராணங்கள், பாரதம் முதலானவைகள் அனைத்தும் கற்பனைக் கதைகள். பிராமணர்கள் நாட்டில் மற்ற மக்களை அவற்றால் அடிமைப்படுத்தி மேன்மையான வாழ்வு வாழ்வதற்காக எழுதிவிட்ட நவக்கிரகக் கட்டுகள் என்கிறார். வடமொழியில் தோன்றிய சமய ஆகமங்கள் பிராமணர் நலத்தையே கருத்திற் கொண்டு அவர்களால் தோற்றுவிக்கப்பட்டன என்பதை மொழி பெரும்புலவர் ஞா. தேவநேயப்பாவாணர் தமது 'தமிழர் மதம்' என்று நூலில் கூறியுள்ளார்.

வால்மீகர் தமது ஞானத்திலே கூறுகின்றார் :

'நில்லென்ற பெரியோர்கள் பாஷையாலே
நீடுலகம் தன்னுக்குள் நாலுவேதம்
வல்லமையாய் சாத்திரங்கள் இரு மூன்றாக
வயிர் பிழைக்கப் புராணங்கள் பதினெட்டாக
கல்லுகளைக் கரைப்பது போல் வேதாந்தங்கள்
கட்டினாரவரவர்கள் பாஷையாலே
தொல்லுலகில் நால் சாதிய நேகஞ்சாதி
தொடுத்தார்கள் அவரவர்கள் பிழைக்கத்தானே'

ஞான வெட்டியான் விருத்தம் 465 சொல்கிறது :

'வியாசர் சொல்லும் பாரதத்தில் வெகு பொய் வீணாம்
மேதினியோர் மாய்கையினில் விரும்பச் சொன்னார்

ஆய்ந்து கவி பாடிவிட்டான் கம்பன் வம்பன்
அதீத ராமாயணத்தில நேகம் பொய்தான்

சாயாம லதிவீர பாண்டியன் சொல்லுந்
தமையேந்தி சரித்திர நைடதமுஞ் சொன்னார்

சுயமாகா திது கவிகள் சுத்தப் பொய்தான்
தொடுகவி மாணிக்கவாசகர் சொன்னாரே.'

பதினென் சித்தருள் ஒருவரான சிவவாக்கியரின் பாடல்களில் ஒன்றை இங்கு இணைத்து எண்ணித் தெளிவு பெறுக.

'சீடரோது நூல்களுந் சிறந்த கற்ற கல்வியும்
நட்ட தாவரங்களு நவிலு நாலு வேதமுங்
கட்டி வைத்த புத்தகக் கதகுதப் பிதற்றெல்லாங்
கெட்டதாய் முடிந்ததேயான் கர்த்தனைக் கண்கண்டபின்'

தீக்கிடங்காம் நரகத்திற்கேதுவான பாவ செயல்களில் ஈடுபடாமல், மேலே கூறப்பட்ட செய்திகளை அறிந்து தெளிந்து, அருள் வடிவாம் மெய்பொருளை நாடி, பரமகுருவின் திருவடிகளை அண்டி, தன் குற்றங்களுக்காக வருந்தி கண்ணீர்விட்டு அழுது, ஆராதனை செய்து மெய்வாழ்வு பெறக் கடவது என அகத்தியர் இப்பாடலில் அறிவுறுத்துகிறார்.

பாடல் 19 : முக்திபரன் அருகிருப்பாய்

"கழுவியே ஆத்துமத்தைப் புடத்தில் போட்டு
காசகன்ற தட்சணையாய் வைத்துக் கொண்டு

மெழுகுவாய் இருதயத்தைக் கண்ணீராலே
மெழுகின பின் தேவ பக்தி அதிலேவைத்து

தொழுகுவாய் தவஞான தீபம் ஏற்றி
தோத்தரிப்பாய் சகல நன்மை சுருபிகண்டாய்

முழுகுவாய் சிறு பொய்கைக்குள்ளே நீயும்
முக்திபரன் அருகிருப்பாய் முச்சுடராய்த் தானே"

கருத்துரை

ஆத்துமாவைக் கண்ணீரால் கழுவு. அதைப் புடமிட்டு மாசு நீக்கிய காணிக்கையாகக் கடவுளுக்கு வைத்துக் கொண்டு உன் இதயத்தை ஆனந்தக் கண்ணீரால் மெழுகு. பின்னர் தேவ பக்தியை அதிலே வைத்துத் தொழுது கொள்வாய். தவம், ஞானம் இவற்றின் தீபம் ஏற்றி சகல நன்மைக்கும் காரணராகிய கடவுளை ஸ்தோத்திரிப்பாய். சிறுகுளத்திலே நீ திருமுழுக்குப் பெறுவாயாக. அப்பொழுது நீ பரலோக தேவனுக்கு அருகில் முச்சுடர் உறவுடன் இருப்பாய்.

விளக்கவுரை

இப்பாடலில் முக்தி வாழ்வின் நடைமுறைகள் சிலவற்றை விளக்கி இவ்வாறு வாழ்ந்தால், மரணத்தைக் கடந்து முச்சுடராக விளங்கும் முக்திபரனாகிய கடவுளுடன் அருகிருந்து வாழலாம் என்கிறார் அகத்தியர்.

பொன் போல் நம்மைப் புடமிடும் திருவசனங்கள்

'ஆத்துமாவைப் புடத்தில் போட்டு' என்று ஆத்துமாவை பரிசுத்தமாக்கும்

முறையைப் பற்றி அகத்தியர் இங்கு குறிப்பிடுகின்றார். தேவனுடைய திருவசனங்கள் புடமிடப்பட்டவைகள். அவைகளை கைக்கொண்டு நடக்கும் போது அவைகள் நம்மைப் புடமிடும்.

'தேவனுடைய வழி உத்தமமானது. கர்த்தருடைய வசனம் புடமிப்பட்டது. தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாக இருக்கிறார்' - 2 சாமுவேல் 22 : 31

இந்த திருவசனங்களின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் ஆத்துமாவில் விசுவாசத்தை உண்டாக்கி

'பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துகின்றார்' - யோவான் 16 : 8

என வேதம் கூறுகின்றது. இவற்றால் நம் ஆத்துமாவிலுள்ள பாவம் நீங்கி புடமிடப்பட்டு முக்தி வாழ்விற்கு தன்னை இலக்காக்கிக் கொள்கிறது.

பாவம் போக்கும் பரமனின் பரிசுத்த இரத்தம்

'ஆத்துமத்தை புடத்திற் போட்டு' கழுவ வேண்டும். 'பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்' – எசேக் 18 : 20. எனவே ஆத்துமாவின் சாவிற்கு காரணம் பாவமே. இப்பாவம் கழுவப்பட்டால் ஆத்துமா சாகாது. மன்னிப்பு பெற்று மெய்வாழ்வு அடையும்.

'இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது' - எபிரேயர் 9 : 28

'தம்முடைய சொந்த ரத்தத்தினாலே... நித்திய மீட்பை உண்டு பண்ணினார்' - எபி 9 : 12

'குற்றமில்லாத, மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டீர்கள்' - 1 பேதுரு 1 : 19

'இயேசு கிறிஸ்துவினுடைய ரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்' - 1 யோவான் 1 : 7

இயேசு கிறிஸ்துவை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, நாம் செய்த பாவங்களுக்கு வருந்தி, மன்னிப்பைக் கேட்கும் போது அவர் நாம் என்ன பாவங்களை செய்திருந்தாலும் பெற்ற தாயினும் அதிகமாக நம்மை நேசிக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதை அவர் தமது பரிசுத்தமான இரத்தத்தால் கழுவி நம்மை சுத்திகரிப்பார்.

'காசகன்ற' = பாவம் நீங்கிய, 'தட்சணையாய்' = காணிக்கையாக நம்மை கடவுளுக்கு ஒப்படைத்து வாழ வேண்டும்.

'சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க... வேண்டிக் கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை' - ரோமர் 12 : 12

அப்படி ஒப்புக் கொடுத்து வாழும் போது குறுக்கிடும் தடைகள், சோதனைகள், இச்சைகளில் நாம் அறிந்தும் அறியாமலும் இழுக்கப்படும்போது, நம் தவறுகளை உண்மையிலேயே உணர்ந்து கண்ணீர் விட்டு நொறுங்குண்ட இருதயத்தோடு தேவனிடம் நாம் மன்னிப்பு கேட்கும் போது அவைகளை அவர் மீண்டும் மன்னித்து ஏற்றுக் கொள்வார். 'நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்' என சங்கீதக்காரன் 51 : 17ல் கூறுகிறான்.

இயேசு கிறிஸ்து நம்மை பிரகாசிப்பிக்கின்ற ஞான ஒளி

இவ்வாறு அருள் பெற்று மன்னிப்படைந்து தேவபக்தியை எல்லா நேரத்திலும், இடத்திலும், சூழ்நிலைகளிலும் உறுதியாகப் பற்றிக்கொள்ளும் உள்ளத்திலே ஞானஒளி ஏற்றப்படுகின்றது.

'கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். மூடர் ஞானத்தையும், போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்' - நீதி மொழிகள் 1 : 7

பரமகுருவாகிய இயேசு கிறிஸ்துவே மெய்யான ஒளியாவார்.

'உலகத்திலே வந்த எந்த மனிதனையும் பிரசாகிப்பிக்கின்ற ஒளியே அந்த மெய்யான ஒளி' - யோவான் 1 : 9

இவ்வாறு பரமகுருவின் ஒளிவயப்பட்ட ஆத்துமா தேவனைத் ஸ்தோத்தரித்து வாழ வேண்டும்.

'தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்' - சங்கீ 116 : 17

'நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை தோத்திரத்தோட கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப் படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக் கொள்ளும்' - பிலிப்பியர் 4 : 6

என திருவசனங்கள் கூறுகின்றன. அப்படி கடவுளின் திருவுளச்சித்தப்படி வாழும் வாழ்வே ஒரு ஸ்தோத்திர வாழ்வாகும்.

'மனுவுருவானவனைத் தோத்தரிக்கிறேன் – மோட்ச
வாசலைத் திறந்தவனைத் தோத்தரிக்கிறேன்
கனிவினை தீர்த்தவனைத் தோத்தரிக்கிறேன்'

என தஞ்சை வேத நாயக சாஸ்திரியார் மனமகிழ்வோடு மெய்ப்பொருளை ஸ்தோத்தரிக்கின்றார்.

'அன்பினால் யாக்கை ஏற்ற ஐயனே! போற்றி போற்றி!
மன்பதை பாவந் தீர்க்க மரித்தவா! போற்றி போற்றி!
இன்புற உயிர்த்தெழுந்த ஈசனே! போற்றி போற்றி!
என் பிழை பொறுக்கும் ஏசு எந்தையே! போற்றி போற்றி!'

என தமிழ்த் தென்றல் திரு.வி.க.வும் கிறிஸ்து பெருமானை போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங்கி ஸ்தோத்திரம் செய்கிறார்.

திருவசனத்தைக் கைக்கொண்டு திருமுழுக்கு எடு

இப்படி மேலே கண்டவாறு ஒரு அறவாழ்வை மேற்கொண்டு வாழ்தலானது மனித வாழ்வில் நாம் தேவனுடைய அரசையும், அவருடைய நீதியையும் தேடுதலாகும். அப்படி வாழுங்கால், வாழ்க்கையின் பிற நன்மைகள் எல்லாவற்றையும் அவர் அருளிச் செய்வார் என்பது மட்டுமின்றி, அத்தகைய வாழ்வால் அவரையே காணலாம் என்பதாம். இதையே 'சகல நன்மை சுரூபி கண்டாய்' என அகத்தியர் பாடுகிறார். மத்தேயு 6 : 33ம் இதைக் கூறுகிறது.

'முழுகுவாய் சிறு பொய்கைக்குள்ளே நீயும்' என பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் நாமத்தில் எடுக்கும் முழுக்கு ஞானஸ்நானத்தை சுட்டிக் காட்டுகின்றார். அப்படி மத்தேயு 28 : 19 ன்படி நாம் திருமுழுக்கு எடுக்கும்போது முச்சுடர் என்று குறிக்கப்பட்டுள்ள அம்மூவருக்குள் வருவதுடன் அவர்கள் அருகிலும் இருக்கும் பேறு பெறுவோம். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: 'ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக் கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து வாசம் பண்ணுவோம்' என யோவான் 14 : 21, 23 திருவசனம் கூறுகின்றது. மேலும் முழுக்கு ஞானஸ்நானம் என்பது நாம் பாவத்திற்கு மரித்து கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்பட்டு, அவரின் உயிர்தெழுதலில் நாமும் புதிய ஜீவனாய் உயிர்தெழுந்து, திரியேக தேவனுடன் பரலோகத்தில் நித்தியமாக அருகில் இருக்கப் போகும் பெருவாழ்வையும் அகத்தியர் இங்கு குறிப்பிடுகிறார்.

பரமானந்தப் பரலோகம்

பரலோகம் என்பது ஒரு கற்பனைக் கதையன்று. அது ஒரு அழகான தேசம், நகரம், ஒரு வாசஸ்தலம், பிதாவின் பிள்ளைகள் இருக்கப் போகும் ஒரு நித்திய வீடு. வேதவசனங்கள் இதை நமக்கு தெளிவாகக் கூறுகின்றன.

'என் பிதாவின் வீட்டிலே அனேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்கு ஆயத்தம் பண்ணப் போகிறேன்' - யோா 14 : 12

'பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்' -2 கொரி 5 : 1

'அதையல்ல, அதிலும் மேன்மையான ஒரு பரம தேசத்தையே விரும்பினார்கள். ஆகையால் தேவன் அவர்களுடைய தேவன் எனப்பட வெட்கப்படுகிறதில்லை. அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே' - எபி 11 : 16

'அந்த நகரம் சதுரமாயிருந்தது. அதின் அகலமும் நீளமும் சமமாய் இருந்தன. அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான். அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது. அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாய் இருந்தன' - வெளி 21 : 16

அதாவது பரலோக நகரம் நீளத்தில், அகலத்தில், உயரத்தில் 22800 கிலோ மீட்டர். இந்தியா வடக்கு தெற்காக 3220 கி.மீ. களும், கிழக்கு மேற்காக 2977 கி.மீ. மட்டுமே. நமது நாட்டைப் போல ஏழு மடங்கிற்கும் அதிகமான நீள அகலம் கொண்டது பரலோகம்!

'பரலோகத்தின் தெருக்களெல்லாம் தெளிவுள்ள பளிங்கு போல தூய பொன்னால் ஆனது' - வெளி 21 : 21

'அங்குள்ள வீடுகள் எல்லாம் பொன்னால் அமைக்கப்பட்டவைகள்' - வெளி 21 : 1

பரலோகத்தில் நமக்கோர் இடம்

பரலோகத்திலே தூதர்கள், மூப்பர்கள் (வெளி 5 : 11), கடந்த கால பரிசுத்தவான்கள் (எபி 11 : 10–40), இரத்த சாட்சியாக மரித்தவர்கள் (அப் 7 : 54–60, வெளி 6 : 9–10), ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்கள் (எபி 12 : 22), நமக்குரிய தூதர்கள் (அப் 12 : 15) மற்றும் எண்ண முடியாமல், எண்ணக் கூடாததுமான திரளான கூட்டம் (வெளி 7 : 9), இவர்களோடு பரலோக பிதா, இயேசு கிறிஸ்துவும் இருப்பார்கள். திரளான கூட்டமாகிய ஜனங்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலை ஏந்தி தேவனை சதா காலத்திற்கும் ஆடிப்பாடி துதித்து மகிழ்ந்து கொண்டே இருப்பார்கள். அப்பேர்ப்பட்ட ஒரு உன்னத நகரத்தை, எப்போதும் பரம ஆனந்தத்திலேயே நாம் இருக்கப்போகும் ஒரு நிலையை சிறிதே கற்பனை பண்ணிப்பாருங்கள்.

எவ்வளவு ஆழகாக, ஆனந்தமாக, நினைக்கவே உடலெல்லாம் புல்லரிக்கிறது. அந்த பரலோகத்தில் சதா காலத்திற்கும், நித்திய காலத்திற்கும் நாம் மகிழ்ந்திருக்க நம்மை ஆயத்தப்படுத்த, தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொள்ள, பரிசுத்தமுள்ளவர்களாக, பாவங்கள் கழுவப்பட்டவர்களாக, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டவர்களாக நாம் மாறுவோமா? மனந்திரும்புவோமா?

பரலோகம் செல்லமுடியாத பாவிகள்

பரலோகத்திலே யார் நுழைய முடியாது என்றும் வேதம் பல இடங்களில் தெளிவாக திருவசனங்கள் மூலம் தெளிவுபடுத்துகின்றது.

> *'ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காண மாட்டான்' - யோ 3 : 3*
>
> *'ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான்' - யோ 3 : 5*
>
> *'பாவங்களிலே மரித்தவர்கள்' - யோ 8 : 21*
>
> *'பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரஹ ஆராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்' - வெளி 21 : 8, 22 : 15, எபே 5 : 5*

விக்கிரஹ ஆராதனை செய்கின்றவர்கள் ஒரு போதும் பரலோகத்திற்குள் நுழைவதில்லை என மேலே கூறப்பட்ட அனைத்து திருவசனங்களும் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.

பேரின்ப பெருவாழ்வுக்கு ஆயத்தப்படு

'உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு' என ஆமோஸ் 4 : 12 நமக்கு சொல்லுகின்றது. நாம் ஆயத்தமாக இருக்கிறோமா? இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு இரட்சிப்படைந்திருக்கிறோமா? மறுபடியும் பிறந்திருக்கிறோமா? 'ஒளிமயமான வாழ்க்கைக்குள் ஆத்துமா நுழைகிறது. இனி அங்கு இருளுக்கு இடமில்லை. என்றுமே ஒளி மயம். முச்சுடராக விளங்கும் கர்த்தரே வெளிச்சமாவார். அதுவே நித்திய வாழ்வு' என அந்த முச்சுடராக விளங்கும் முக்திக் கடவுளின் அருகிலிருக்கும் பேரின்பத்தை அகத்தியர் இப்பாடலில் அறிவித்துள்ளார்.

பாடல் 20 : எச்சரிக்கை

"முச்சுடராம் ஒன்றாம் மும்மூர்த்தியல்ல;
மூவருமே ஆளுருவம் ஒன்றேயாகும்;
அச்சுதா இவர்களுமே ஆண் பெண் அல்ல;
அரனும் அல்ல; இலிங்கம் அல்ல; அநாதியான
சச்சிதானந்தனையே வணக்கம் செய்து,
சற்குருவைத் தரிசித்து சரண் பற்றி,
எச்சரிக்கை கொண்டு நட அப்பா! அப்பா!
எண்ணிலா முத்திவழி எய்துவாயே!"

கருத்துரை

பிதா, திருமைந்தர், பரிசுத்த ஆவியானவர் ஆகிய முச்சுடரும் ஒருவரே ஆவர். அவர்கள் மும்மூர்த்தியைப் போல வெவ்வேறு ஆனவர்கள் அல்லர். மூவருக்கும் ஆள் உருவம் ஒன்றேயாகும். திரித்துவக் கடவுள் ஆண் என்றும் பெண் என்றும் இல்லை. அரனும் அல்லர். இலிங்கமும் அல்லர். அவர் அநாதியானவர். சச்சிதானந்தர். அவரையே வணங்கி சற்குருவாகிய இயேசு கிறிஸ்துவைத் தரிசித்து, அவருடைய திருவடிகளில் சரணடைந்து பற்றிக் கொண்டு எச்சரிக்கையுடன் நீ நடப்பாயப்பா. அப்பொழுது எண்ணிக் கூற முடியாத பேரின்ப முக்தி வாழ்வினை நீ அடைவாய்.

விளக்கவுரை : ஒன்றாய் இருக்கும் திரியேகக் கடவுள்

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என தம்மை வெளிப்படுத்தியுள்ள திரியேகக் கடவுளாம் முச்சுடர், நம் நாட்டிலே அறியப்பட்டுள்ள சிவன், பிரம்மா, விஷ்ணு என்னும் மும்மூர்த்திகள் போன்றவர்கள் அல்லர். மூவரும் ஆளுருவத்தில் ஒருவரே என்பதை அகத்தியர் வரையறுத்துக் கூறுகின்றார். Dr. CC.Crawford தமது 'The Eternal Spirit : His person and powers' ல் கூறியுள்ள கருத்தையும் இங்கே எண்ணித் தெளிதல் நலம். 'கடவுளின் திரித்துவப் பண்பின் போதனை இரட்சிப்பின் திட்டத்திற்கு இன்றியமையாதது. கடவுள் இந்த மும்மை பண்பில்லாத தனி ஒருவர் என்னும் நிலை இருக்குமாயின் கடவுளுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தம் இருக்க இயலாது. பாவப்பரிகாரம் இருக்கவியலாது. இறைவனிடம் பரிந்து மன்றாடுதல் இருக்கவியலாது. இரட்சிப்பு இருக்க இயலாது' என்று கூறுகின்றார்.

பின்வரும் திருவசனங்களையும் காண்க.

> *'பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்' -1 யோ 5 : 7*

'நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்' - யோ 10 : 30

'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்... என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்... என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்... நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்' - யோ 14 : 6-11

'சத்திய ஆவியாகிய அவர் வரும் போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப் படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள். அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்' - யோ 16 : 13-15

'ஒன்றிலே மூன்றாய்; மூன்றும் ஒன்றதாய், உலப்பியதாய்' என்றும், 'ஒன்று மூன்றாய் ஒருவா போற்றி' என்றும் கடவுளின் மும்மையில் ஒருமை நிலையையும், ஒருமையில் மும்மை நிலையையும் சிலாகித்து, அதிசயத்து, அகமகிழ்ந்து பாடியுள்ள மகாகவி எ.ஆ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் திரியேகக் கடவுளைக் குறித்து ஆராய்ந்து அறிந்து கூறியுள்ள கருத்தையும் காண்க.

'இந்த திரியேக தேவவஸ்து நம்முடைய புத்திக்கு எட்டாத பொருள். அப்படியிருந்தும் அவருடைய திருவசனத்தின்படியே நாம் அதை உண்மையாய் விசுவாசிக்க வேண்டும். நம்முடைய சிறுபுத்தி அவருடைய அளவற்ற சுபாவத்தை எப்படிக் கிரகித்துக்கொள்ளக் கூடும்? நாம் நம்முடைய ஆத்துமாவும் சரீரமும் ஒன்றாயிருக்கிற வகையையும், நம்முடைய கண்காணுகின்ற வகையையும், பயிர் வளருகின்ற வகையையும் மற்றும் இப்படிப்பட்ட அனந்தமான நடக்கைகளையும் அறியாமலிருக்கிறோமே. சர்வத்திற்கும் மேலான உன்னத தேவ வஸ்துவின் முழுத் தத்துவத்தையும் நாம் எப்படி அறிந்து கொள்வோம்? நம்முடைய புத்தி தேவ புத்தியல்லவே. தேவன் அருளிச் செய்த திருவசனத்துக்கு நம்முடைய புத்தி மேலானதாகுமா? அந்த வசனமில்லாவிட்டால் நாம் பாவமின்னதென்றும், புண்ணியம் எத்தகையதென்றும் அறிய மாட்டோமே. ஆகையால் நாம் மரணத்திற்குப் பின்பு உயர்ந்த புத்தியுள்ளவர்கள் ஆகுமளவும் திரியேக தேவனை மிகுந்த வணக்கத்தோடே நம்பிக்கொள்ளக் கடவோம்.'

ஆண் பெண் அல்ல, அரனும், இலிங்கமுமல்ல : அவர் அநாதி சச்சிதானந்தன்

'தேவன் ஆவியாக இருக்கிறார். அவரைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்' - யோ 4 : 24

ஆவியாயிருக்கும் கடவுளுக்கு பால்வேறுபாடு இல்லையன்றோ! எனவேதான் கடவுளை விக்கிரஹங்களுக்கும் மற்ற எதற்கும் ஒப்பாக்கிவிடக்கூடாது என வேதம் மிகக் கடுமையாக எச்சரிக்கின்றது. கடவுள் அநாதி, தோற்ற நாசம் இல்லாதவர். என்றென்றும் இருப்பவர். இருக்கிறவராகவே இருப்பவர்!

> *'நீங்கள் எழுந்திருந்து அநாதியாய் என்றென்றைக்கும் இருக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரைத் ஸ்தோத்தரியுங்கள்....' -நெகேமியா 9 : 5*
>
> *'பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்கு முன்னும் நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவானாயிருக்கிறீர்' - சங்கீதம் 90 : 2*

கடவுள் சச்சிதானந்தன். சத்து = உண்மையாய் என்றும் இருக்கிறவர்; சித்து = அறிவு; ஆனந்தம் = மகிழ்ச்சி. கடவுள் சத்தாக, சித்தாக, ஆனந்தமாக சச்சிதானந்தராக இருக்கிறார். அவரையே வணங்கி வாழ வேண்டும் என்பது அகத்தியர் அறிவுரை.

சற்குருவை தரிசி, சரண் அடை, எச்சரிக்கையோடு நட, முக்தி அடைவாய்

சற்குருவாம், இயேசு கிறிஸ்துவை மனத்தாலும் நாளும் வேளையும் தரிசித்து அவரிடம் சரண் புகுந்து, அடைக்கலமாகி எச்சரிக்கையுடன் வாழ்க்கையில் நடந்து கொள்ளும் போது, மனித எண்ணத்திற்கு அப்பாற்பட்டு விளங்கும் முக்தியை எய்தலாம் என அகத்தியர் கூறுகின்றார். சற்குருவைக் கண்டு அடைக்கலம் புக வேண்டும். உலகத்திலே பொய்யான குருக்களும், பொய் மதங்களும் இருக்கின்றமையால், ஒன்றான சற்குருவையே அறிந்து தெளிந்து அடைக்கலமாயின் முக்தியடைதல் உறுதி.

மெய்யான குருவின் பாதம் போற்ற வேண்டும் என பாம்பாட்டி சித்தரும் பாடுகின்றார்.

> *'பொய் மதங்கள் போதனை செய் பொய்க் குருக்களைப்*
> *புத்தி சொல்லி நன்னெறியில் போக விடுக்கும்*
> *மெய்ம் மதந்தான் இன்னதென்று மேவவிளம்பும்*
> *மெய்க்குருவின் பாதம் போற்றி ஆடாய் பாம்பே'*

'மக்களை மீட்க உலகுக்கு வந்து குருதி சிந்திய சற்குருவே' என தமது 'சற்குரு சதகம்' என்னும் நூலில் ஜி.எஸ் வேதநாயகம் அவர்கள் பாடியுள்ளார். சிவ ஞான போதம் எட்டாம் சூத்திரம் 'சிலுவையில் மாண்டு உயிர்த்தெழுந்த சற்குருவாம் இயேசு கிறிஸ்துவையே' குறித்துக் காட்டுகிறது.

மெய்யான குருபரனின் தன்மைகள்

மெய்யான குருபரனின் தன்மைகளை ஹெச்.ஏ.பாப்லி அவர்கள் மிக

நுணுக்கமாக ஆராய்ந்து எழுதியிருப்பதையும் இங்கு கண்டு தெளிக.

சற்குரு தெய்வீக சத்தியங்களைப் போதிப்பதுடன், அவற்றை மற்றவர்களுக்கு தெளிந்தறியும் சக்தியையும் உண்டாக்க வல்லவராக இருத்தல் வேண்டும். தமது வாயினாலே போதிப்பதை, தமது நடக்கையாலே திருஷ்டாந்தப்படுத்தி உறுதியாக்கவும் வேண்டும். பொதுவாய்ச் சொல்லின் நன்னூலின் பாயிரத்தில் சொல்லப்பட்டுள்ள சிறந்த போதகருக்குரிய தன்மைகள் அவரிடம் சம்பூரணமாய்க் காணப்பட வேண்டும்.

'குலன், அருள், தெய்வம் கொள்கை, மேன்மை,
கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை,
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்,
உலகியல் அறிவோ டுயர் குணம் இனையவும்,
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே'

இப்படிப்பட்ட இயல்புக்கு வேண்டிய குணங்கள் யாவை என்று பார்ப்போமா?

(1) அவர் தெய்வத்தன்மையுள்ளவர்: தெய்வீக விஷயங்களைக் கற்பிக்கத்தக்கவன் தெய்வீக குணங்களை உடையவராய் இருத்தல் அவசியம். 'குருவுருவங் கொண்டிங் குவலயத்துள் தோன்றிப் பருவரலை தீர்க்கும் பரன்' என்று வள்ளலார் பாடியுள்ளதையும் காண்க. தெய்வீக விஷயங்களை குருபரன் மூலமாய் கற்றறிய முடியுமேயன்றி, தங்களின் சுய ஞானத்தினால் கற்க முடியாது. 'கருக் கொண்ட ஈசனைக் கண்டு கொண்டேன்' என்று திருமூலர் ஈசனைக் கண்டு பாடினது போல், நாமும் பார்த்துக் கேட்டு, உணர்ந்து சொல்லத் தக்கவரே இவ்வுலகுக்கு குருபரனாக இருக்க இயலும்.

(2) குருபரன் சந்தேகம் நீக்குபவர் : ஆன்மா, பரலோகம், கடவுளின் இயல்பு முதலியவை பற்றி தெளிவாக, நிச்சயத்தோடு, உபதேசிப்பவராக, சந்தேகங்களை போக்குபவராக இருத்தல் வேண்டும். 'குரு மொழியே மலையிலக்கு, மற்றை மொழியெல்லாம் கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்' என்று தாயுமானவர் குருமொழியின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகின்றார். மேலும் திருமந்திரம் கூறுவது போல சற்குரு தெளிந்த மனதை உடையவராக இருத்தல் அவசியம் என்றறிக.

(3) குருபரன் புனித நடக்கையுடையவர் : இவ்வுலகத்தார் யாவரையும் நன்னெறியில் நடத்தக் கூடிய சற்குரு புனித நடக்கையுடைவராக இருத்தல் இன்றியமையாத அவசியம். போதனையை தமது வாழ்விலும் கடைப்பிடித்து வாழ்ந்து நாமும் அப்படி நடந்திட வழிகாட்டுதலே உத்தமம்.

(4) அவர் அன்பின் சொரூபி : 'அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்க வந்த இன்பப் பெருக்கே, இறையே, பராபரமே' என்றும் 'எவ்வுயிரும்

என்னுயிர் போல் எண்ணி இரங்கவுநின் தெய்வ அருட்கருணை செய்வாய், பராபரமே' என்றும் தாயுமானவர் பாடியுள்ளது போல நம்முள் அன்பைப் பெருக்கி, எவ்வுயிரையும் தம்முயிர் போல் நேசித்து அன்பு காட்ட நம்மை அருள் பாலிப்பவராக, உலக, மாம்சீக இச்சை, கவர்ச்சி, ஆசாபாசங்களுக்கு நம்மை விலக்கிக் காத்து, அவைகளை அழித்து, தமது பரிபூரணமான அன்பின் வழிநடத்துதலால் நம்மை கடவுளிடத்தில் சேர்ப்பவராக இருத்தல் வேண்டும்.

(5) அவர் எல்லா சாதியாராலும் ஒப்புக்கொள்ளத் தக்கவர் : குருபரன் கடவுளின் சம்பூரணமான குணங்களையெல்லாம் வெளிப்படுத்தலால், எம்மதம், சாதியிலுமுள்ள உண்மையான பக்தர்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளக் கூடியவராக, சூரிய கிரணத்தின் நிறங்கள் அனைத்தும் அடங்கிச் சேர்ந்தது போல அவரது போதனையில் அனைத்து சமய ஞானிகளின் போதனையும் சத்தியமும் அடங்கியிருக்கும்படி 'நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண நின்றதியாதொரு சமயம், அது சமயம்' என சிவஞானசித்தியார் கூறுவது போல ஒரு உயர்ந்த சமயத்தை, கோட்பாடுகளை, நீதியைப் போதிப்பவராக, எல்லா தேசங்களிலும், எல்லா சாதியாராலும், எல்லா மதத்தாராலும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க ஒருவரே குருபரனாக இருக்கக் கூடும். திருவள்ளுவர் கூறியபடி 'இருமை வகை தெரிந்த தீண்டவும் பூண்டார் பெருமை பிறங்கிற்றுலகு'. அந்த சற்குருவின் பெருமை உலகமெங்கும் பிரகாசித்து இமயமலை போல் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்து காணப்படவேண்டும்.

(6) அவர் சக்தியுள்ளவர்: 'கட்டுண்ட கள்வன்தானோ கட்டினை விட்டுக் கொள்வான், விட்டவே தனையைத் தீர்த்து விடுவிப்பான் ஒருவன் வேண்டும், அட்டமாசித்தியோ காலறிவினால் அறியலாகும், தட்டறப் பாசந்தீர்க்கத் தற்பர குருவே வேண்டும்'. என சீடாசரத்தில் கூறப்பட்டுள்ளதைப் போல முதலாவது நமது பாவத்தை நீக்கவும், பாவத்தில் மூழ்கி பாவத்தன்மையாக மாறிப்போன லௌகீக நெஞ்சுள்ளவர்களின் சிந்தையை மாற்றி 'துயருறுத் தொல்லுயிரை மன்னும் அருட்குருவாகி, மலம் அகற்றித் தானாக்கி மலரடிக் கீழ்வைப்பான்' என சிவஞான சித்தியார் பாடியது போல அனைவரையும் தம்மைப் போல மாற்ற சக்தியுள்ளவராக, வல்லவராய் இருத்தல் வேண்டும்.

அதுவுமில்லாமல் 'உலகத்தில் நற்குணங்களும், நற்செய்கைகளும் தழைத்தோங்கவும், அறம் சிறந்து வளரவும் செய்பவராக நம் சிந்தையில் கோயில் கொண்டு வாழுங் குருவாக வேண்டும்' என தாயுமானவர் பாடுவதுபோல் சற்குரு சர்வ வல்லராய் இருத்தல் வேண்டும்.

இயேசு கிறிஸ்துவே நமக்கு குரு

மேற்கூறப்பட்ட தன்மைகள் அனைத்தையும் உடையவராக சற்குரு ஒருவர் உண்டா? உண்டானால் அவர் யார்?

'பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம்; பிள்ளை
பெறாப்பேதை அறிவாளோ? பேரானந்தம்
உற்றவர்க்கே கண்ணீர் கம்பலை உண்டாகும்;
உறாதவரே கன்னெஞ்ச முடைய ராவார்'

என்று தாயுமானவர் பாடினதுபோல வருத்தப்பட்டு பாவக் கட்டுகளினால் கட்டுண்டு திரிந்து பின்பு சற்குருவின் திருப்பாதத்தை அடைந்து. அவராலே விடுதலையாகும் பேரானந்தம் பெற்றவர்களே சற்குரு இன்னாரென்று சந்தேகமற அறிந்து கொள்வார்கள். இவ்வுலகிலுள்ள எல்லா குருக்களையும் யாரை விசாரித்தாலும் முன் சொல்லிய குறிப்புகளுக்குப் பொருந்தினவர் இயேசு கிறிஸ்து ஒருவரேயொழிய வேறு ஒருவர் இல்லை என உறுதிபடக் கூறுவர். இல்லையா?

கிறிஸ்துவின் குணாதிசயங்களையும் அவர் செய்த கிரியைகளையும், நன்கு ஆராயின் முன் சொன்ன தன்மைகள் சகலத்தையும் உடையவர் அவர் ஒருவரே என்பது தெளிவாகும். செய்யற்கரிய அற்புதங்களைச் செய்து தமது தெய்வீகத்தை வெளிப்படுத்தினார். சர்வ நிச்சயத்தோடு பேசுகிறார் என மக்கள் யாவரும் அதிசயித்தனர். வாக்கிலும், செய்கையிலும் மாசில்லாத தன்மை உள்ளவர் என யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டார். அவருக்கு சிலுவை மரணத்தை அளித்த பிலாத்துவும் அவரிடத்தில் ஒரு குற்றமுங்காணேன் என்று சாட்சி கொடுத்தான். 'அன்புடையார் என்றுமுரியர் பிறர்க்கு' என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க தமது இன்னுயிரையே கொடுத்து தமது உன்னத அன்பின் சிறப்பை வெளிப்படுத்தினார்.

எல்லா தேசத்திலும், சகல பாஷைக்காரராலும் அவருடைய பேர் சொல்லப்படுகிறது. எல்லா தேசத்திலும், மதத்திலும், சாதியிலும் அவருடைய பக்தர்கள் உண்டு. அவருடைய தெய்வீக சக்தி இந்த தேசத்தில் எத்தனையோ கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் நடந்துள்ள கிரியைகளின் மூலமாக விளங்குகின்றது. தீய பாவப்பழக்க வழக்கங் களிலிருந்தும், குணாதிசயங்களிலிருந்தும், நோய் நொடிகளிலிருந்தும், பிசாசின் கட்டுகளிலிருந்தும், பில்லி, சூன்ய, செய்வினையின் வேதனை களிலிருந்தும் விடுவிக்க வல்லவர் இயேசு கிறிஸ்து ஒருவர் மாத்திரமே என உலகமே சாட்சி கூறுகிறது.

இம்மைக்கும் மறுமைக்கும் இயேசு கிறிஸ்துவே

'நன்னெறி புகுத்திடும், நவையி னீக்கிடும்,
இன்னலை யகற்றிடும், இகல் செகுத்திடும்,
உன்னதத் துய்த்திடும், ஒருங்கு காத்திடும்,
எந்நலத் தையுந்தரும் யேசு நாமமே.

தருமமும் ஒழுக்கமும் தவமும் ஞானமும்
கருமமும் ஈதலாய், கருதில் யாதுமோர்
அருமையும் பயனும் ஒன்றில்லை, ஆதலால்
இருமையுந் துணையெனக் கியேசு நாமமே'

என மகாகவி கிருஷ்ணபிள்ளை பாடியுள்ளார். ஒழுக்கம், தர்மம், நீதி, நேர்மை, போன்ற நன்னெறிகளைத் தந்து நமக்கு ஞானத்தையும், எல்லா நலத்தையும் தந்து இம்மையிலும் மறுமையிலும் நமக்கு துணை நிற்கும் சச்சிதானந்தனாம் சற்குருவை வணங்கி, தரிசித்து அவரிடம் அடைக்கலம் புகுந்து வாழுமாறு அகத்தியர் இப்பாடலில் அறிவுறுத்துகிறார்.

கிறிஸ்துவே மெய்ஞானம்

ஞானம் என்பது அஞ்ஞானம், விஞ்ஞானம், மெய்ஞானம் என மூன்றாகப் பிரிகின்றது. கடவுள் படைத்த சடப்பொருள் உலகத்தைப்பற்றிய அறிவு விஞ்ஞானம். உலக மக்கள் தங்கள் ஆவிக்குரிய ஆன்மீக வாழ்க்கையில் கொண்டுள்ள மூடநம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்காச்சாரங்கள் பற்றிய அஞ்ஞானக் கருத்துக்களை அகற்றி, மெய்ப்பொருள் பற்றிய உண்மையான ஞானம் பெறச் செய்வது மெய்ஞானம். கிறிஸ்துவே 'தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும், மீட்புமானார்' – என 1 கொரி 1 : 31 கூறுகின்றது. இயேசு கிறிஸ்துவே நமக்கு ஞானம்.

கிறிஸ்துவின் வாயிலாக கடவுள் சடப்பொருள் உலகங்களைக் குறித்தும், ஆவிக்குரிய ஆன்மீகம் குறித்தும் வெளிப்படுத்தி இருக்கிற ஞானமே மெய்ஞ்ஞானமாகும். 'பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் (இயேசு கிறிஸ்து) மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்' என திருவசனம் எபிரேயர் 11 : 3 கூறுகிறது. கிறிஸ்துவாகிய ஞானம் படைத்த உலகங்களையும், அதுபற்றிய விஷயங்களையும் அறிவது விஞ்ஞானம். கிறிஸ்துவாகிய

ஞானத்தின் வாயிலாக கடவுளை அடைவது மெய்ஞ்ஞானம். கிறிஸ்துவாகிய ஞானத்திற்குப் புறம்பானவைகள் எல்லாமே அஞ்ஞானம் என்றறிக.

தாம் கண்ட மெய்ஞ்ஞானமாம் மெய்ப்பொருளை, அம்மெய்ப்பொருளாம் பரமகுருவாகிய இயேசு கிறிஸ்துவை அவர் சொன்னபடியே முப்பது பாடல்களில் அடக்கிக் கூறிவிட்டேன் என்று கூறி அகத்தியர் நிறைவு செய்துள்ளார்.

சித்தர்களின் காலம் - அகத்தியர் நூலின் காலம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்துறையில் ஆராய்ச்சியாளராக இருந்து 'இலக்கியத் தோற்றம்' (A History of Tamil Literature 250 to 1960 AD) என்னும் இலக்கிய வரலாற்று நூல் செய்த பேராசிரியர் மு. கோவிந்தசாமி அவர்கள் சித்தர்களைப் பற்றிக் கூறும்போது அகத்தியர், திருமூலர் இவர்களை சித்தர் தலைவர்களாகக் கூறப்பட்டு இருப்பதை சுட்டிக் காட்டி, சித்தர்களின் காலத்தை கி.பி. 5 முதல் 10 ஆம் நூற்றாண்டு வரை எனக் குறிப்பிட்டு பதினென் சித்தர் வரலாற்றை ஆராய்கின்றார். அகத்தியர் படைத்த இந்த 'அகத்தியர் ஞானம்' என்னும் நூல் 1818, 1848, 1854, 1915 ஆண்டுகளில் The Madras Religious Tract Society பின்னர் The Madras Religious and Book Society வெளியிட்ட நூல்களில் இடம் பெற்றுள்ளது.

பின்னுரை

நாம் இந்த உலகத்தில் பிறந்தோம், நமது விருப்பத்தின்படி பிறக்கவில்லை. பிறந்த அனைவரும் ஒரு நாள் மரிக்கத்தான் போகிறோம். அதுவும் நம் விருப்பப்படி நடக்கப் போவதில்லை. அது எப்போது எப்படி என ஒருவரும் அறிந்திலர். ஏழையோ பணக்காரனோ, மந்திரியோ தந்திரியோ, மந்திரம் சொல்பவனோ செய்பவனோ, நல்லவனோ கெட்டவனோ, மருத்துவனோ மடாதிபதியோ, யோகியோ போகியோ யாராக இருந்தாலும் அனைவரும் ஒரு நாள் மரித்து இவ்வுலகை விட்டு போகப் போவது உறுதி. இப்பூமியில் சேர்த்து வைத்த கோடிக்கணக்கான சொத்தோ, பணமோ, புகழோ, சொந்தமோ பந்தமோ, பட்டமோ பதவியோ, எதுவும் உடன் வரப்போவதுமில்லை, உங்கள் மரணத்தை தடுத்து காப்பாற்றப்போவதுமில்லை. அதிலிருந்து ஒருவரும் தப்பவே முடியாது.

மரித்த பிறகும் ஒரு வாழ்க்கை உண்டு. அது நித்ய வாழ்க்கை. உடல் அழியும். ஆனால் ஆவி ஆத்துமா என்றும் அழிவதில்லை. அது என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். அதற்கு உணர்வுகள் உண்டு, நினைவுகள் உண்டு, வேதனைகள் உண்டு. அது இருக்கப்போவது பரலோகத்திலா? எரிநரகத்திலா? அதை முடிவு செய்ய வேண்டியது இப்போது நமது கரத்தில் இருக்கிறது. அந்த முடிவை இப்பூமியில் நாம் உயிருடன் வாழும்போதே எடுத்து பரிகாரம் தேட வேண்டும். மரணத்திற்குப்பின் ஒன்றும் செய்ய வாய்ப்பில்லை.

மறுபிறவி, ஏழேழு ஜென்மம் என்பதெல்லாம் வெறும் கற்பனை. மனிதனுக்கு விதிக்கப்பட்டது இந்த ஒரே ஒரு பிறவிதான். பிறகு நியாயத்தீர்ப்பு. இப்பிறவியில் அவனவன் செய்த கிரியைகளுக்குத் தக்க பலனை அவனுடைய மறுமையில் – சொர்க்கத்திலோ அல்லது எரிநரகத்திலோ சதா சர்வ காலத்திற்கும், யுகயுகமாக, நித்தியத்திற்கும் அனுபவிக்க வேண்டிவரும். பரலோகமும், எரிநரகமும் கற்பனை அல்ல. அது உண்மையில் இருக்கிறது.

எவரும் இதுவரையில் எந்த பாவமுமே செய்ததில்லை எனக் கூற முடியாது. அப்படி யாரேனும் கூறினால் அவர்கள் தன்னைத் தானே வஞ்சித்துக் கொள்கிறார்கள் என வேத வசனம் கூறுகிறது. அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும் எத்தனையோ பாவங்களை அனுதினமும் நாம் சாத்தானின் தூண்டுதலில், மாம்சீக இச்சை, கோப, தாபங்களில் செய்துள்ளோம். தொடர்ந்து செய்தும் வருகிறோம்.

இந்த பாவக்கறைகளை எதைக் கொண்டும், யாரைக் கொண்டும் நீக்க முடியாது. இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லை என எல்லா வேதங்களும் கூறுகின்றன. இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு எந்த தெய்வமும் மனிதனுக்காக தமது இரத்தத்தை சிந்தவுமில்லை. பாவத்தை மன்னிக்கவுமில்லை. இயேசு கிறிஸ்து ஒருவரே நம் அனைவரின் பாவத்தையெல்லாம் நீக்கி, நம்மை சுத்திகரித்து, நம்மை அடிமை கொண்டுள்ள

அனைத்து பாவப்பழக்க வழக்கங்களிலிருந்தும், கோபதாபங்களிலிருந்தும் விடுதலை தந்து, நல்வழிப்படுத்தி, பரிசுத்தப்படுத்தி பரலோகத்திற்கு அழைத்துச் செல்ல வல்லவர். அதையே அகத்தியரும் தமது பாடல்களில் பாடி இருக்கிறார்.

இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே இரத்தத்தை சிந்தியது இந்த உலகத்தில் பிறந்த கிறிஸ்தவர்களுக்காக மட்டுமல்ல. உங்களுக்காகவும் அவர் தம் இரத்தத்தை சிந்தியுள்ளார். அவர் உங்களையும் நேசிக்கிறார். அவரையே பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். இந்த நூலைப் படிக்கும் முகம் தெரியாத உங்களை மதமாற்றம் செய்வதல்ல என் நோக்கம். மனமாற்றம் செய்யவே, பாவ வாழ்க்கையிலிருந்து, பாவ சிந்தனையிலிருந்து மனந்திரும்பவே அழைக்கிறேன்.

இந்த ஜாதி, மதம், முப்பத்தி முக்கோடி தேவர்கள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், மதத்தின் பேரால் நடக்கும் கலகம், சண்டை, சச்சரவு, கொலை, கொள்ளை, வன்முறை தீவிரவாதம், உண்மையான கடவுளை அறிய முடியாதபடி நமது மனக்கண்களை குருடாக்கியது அனைத்தையும் செய்வது சாத்தானும், அவனுடைய சேனைகளாகிய பிசாசுகளுமே. இதை உணர்ந்து மனந்திரும்பி மெய்யான தேவனாகிய இயேசு கிறிஸ்துவை, நம்மைப் படைத்தவரை, நமக்காக, நமது பாவங்களுக்காக, அக்கிரமங்களுக்காக தன் விலையேறப்பட்ட இரத்தத்தை சிந்தியவரை ஏற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக் கொள்வதால் இந்த அடியவனுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. எனக்கு கிடைத்த இந்த பாவ மன்னிப்பும், உண்மையான ஆனந்தமும், சமாதானமும் உங்களுக்கும் கிடைக்க வேண்டுமே, எந்த ஆத்துமாவும் கெட்டுப் போய் விடக்கூடாதே, எரி நரகத்தில் நித்தியத்திற்கும் அழுந்தி அவதிப்படக்கூடாதே என்ற நல்ல எண்ணத்தில், உண்மையான அன்பில், ஆதங்கத்தில், கரிசனையில் கண்ணீரோடு வேண்டிக் கூறுகிறேன்.

உங்களின் தனிப்பட்ட வாழ்க்கை மாற, நீங்கள் என்ன பாவங்கள் செய்திருந்தாலும் அவைகள் மன்னிக்கப்பட, உங்கள் குடும்ப வாழ்க்கை செழிக்க, நீங்கள் நேசிக்கும் உங்கள் மனைவி, பிள்ளைகள், உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் இம்மையிலும், மறுமையிலும், நித்தியானந்தத்தைப் பெற்றிட, இந்த சமூகம், நாடு, உலகம் அனைத்தும் ஜாதி, மதம், தெய்வத்தின் பேரால் நடக்கும் வன்முறை, தீவிரவாதம், கொலை, கொள்ளை, கலகம், கலவரம், எதுவும் இல்லாது நாம் அனைவரும் ஒரு தாய் வயிற்று மக்களாக ஒருவர் மீது ஒருவர் அன்பு காட்டி, தன்னை நேசிப்பது போல பிறரையும் நேசித்து, நலம் விரும்பி சமாதானத்துடன் வாழ இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதாலும், அவர் காட்டிய வழியின்படி, வேதாகமத்தில் கூறியபடி நடப்பதாலும் மட்டுமே சாத்தியப்படும்.

என்னை சோதித்துப் பாருங்கள் என்று கூறிய ஒரே தேவன் இயேசு கிறிஸ்து மாத்திரமே. அவர் உங்களுக்கு செய்வாரா செய்யமாட்டாரா என சோதித்துப் பாருங்கள். பரிசுத்த வேதாகமம் உங்களுக்கு நல் வழி காட்டுகிறதா, வாழ்க்கைக்கு பயனுள்ளதாக இருக்கிறதா என ஒரு முறை முழுவதும் படித்துப் பாருங்கள்.

> *'ஜீவனையும், மரணத்தையும், ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும், பூமியையும் இன்று சாட்சியாக வைக்கிறேன். ஆகையால் நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு நீ ஜீவனைத் தெரிந்து கொண்டு... உன் தேவனாகிய கர்த்தரில் அன்பு கூர்ந்து அவர் சத்தத்திற்கு செவி கொடுத்து அவரைப்பற்றிக் கொள்வாயாக. அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர்' - உபா 30 : 19, 20*

என சத்தியத்தை சத்தியமாக உங்கள் முன் வைத்துள்ளேன். கண்ணீரோடு உங்களுக்காக, உங்கள் ஆத்துமாவுக்காக ஜெபிக்கிறேன்.

திரியேக தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த நூலைப் படிக்கின்ற உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

ஆசிரியர் குறித்து...

துடிப்பும், வேகமும், விவேகமும், நாவன்மையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 68 வயது என்று நம்பமாட்டார்கள். இந்திய விமானப்படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும், பின்னர் ஃபென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்கலை நிகழ்ச்சிகள், பாட்டு, டிவி சீரியல்கள் என கலைத் துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன் முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப்படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர். இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர, பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளராகவும் இருந்தார். தேவன் இவர்களை தெரிந்துக்கொண்ட விதம், மற்றும் இவரின் தனிப்பட்ட, குடும்ப வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து செய்த எண்ணிமாளாத அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும், 700க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறிவருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவர் எழுதிய சாட்சி புத்தகமும், மற்ற நூல்களும் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, சபைகளை பலப்படுத்துவதாக, சபையோரை ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமாக தெரிந்து கொண்டுள்ளார்.

Cossmic Printers, Cell: 98400 79872